


கனடா காரை கலாச்சார மன்றம்
Canada Karai Cultural Association

# Karai Vasantham 2016
# காரை வசந்தம் 2016

29.10.2016
தமிழிசைக் கலா மன்ற மண்டபம்
Toronto, Canada




காரைநகர் அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி
திறப்புவிழாவின் போது... அரிய வகைப் புகைப்படம்

# கனடா - காரை கலாசார மன்றம்

*பெருமையுடன் வழங்கும்*

# காரை வசந்தம் - 2016

**17வது ஆண்டு கலைவிழா சிறப்பிதழ்**

**TAMIL ISAI KALA MANDRAM**

Unit # 3 - 1120 Tapscott Road, Scarborough, ON Canada

ஒக்ரோபர் 29, 2016 சனிக்கிழமை மாலை 5:00மணி

பிரதமவிருந்தினர்கள்

**பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன்**

**சிவத்தமிழ் காவலன் ஆறுமுகம் செந்தில் நாதன்**

# கனடா - காரை கலாச்சார மன்ற கீதம்

கனடா காரை கலாசார மன்றம்
வாழிய வாழியவே!
இனிதே காரை நகர் வாழ் மக்கள்
இன்புற்று வாழியவே!

மருதமும் நெய்தலும் மருவித் தோன்றும்
மாநிலம் காரைநகர்
கருதும் கல்வி கலையொடு ஒழுக்கமும்
கண்டபண் பாட்டுநகர்!

பால்நிறமான கடலலை மோதிப்
பரவிடும் கரையினிலே
மேலொளி வீசும் கலங்கரை விளக்கம்
விளங்கிடும் மேன்மை நகர்!

அருளம் பலவனார் அல்லின் ஏபிரகாம்
ஆனோர் வளர்த்தநகர்
பொருளை வளர்க்கும் வர்த்தக ராலே
பொலியும் பொன்னரகம்!

பாரிற் புகழொடு பஞ்சரதம் வரும்
பதியும் இதுவே தான்
தேரில் பொலிதரு சுந்தரேஸ் வரரும்
திகழ்வதும் இங்கேதான்

ஈழத்துச் சிதம்பரம் இலங்கிடும் காரை
என்றென்றும் வாழியவே!
தோளொத்த காரை –கனடா மக்கள்
தொடர் பென்றும் வாழியவே!

ஆக்கம்: தமிழருவி ஆசிரியமணி த. சிவகுமாரன்
இசையமைப்பு
குரல்: சங்கீத பூஷணம் காரை ஆ. புண்ணியமூர்த்தி
வயலின்: அளவையூர் இசைஞானபூபதி கேசவமூர்த்தி
மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் பரஞ்சோதி ரதிரூபன்

# கனடா காரை கலாசார மன்றம் நிர்வாக சபையினரின் செய்தி!

29.10.2016

கனடா காரை கலாசார மன்றத்தின் தற்போதைய நிர்வாக சபையானது 28.05.2016 அன்று நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் தற்காலிகமாக தெரிவானது. முந்தைய நிர்வாக சபையானது பலவித காரணங்களினால் திடீரென தமது நிர்வாக செயற்பாடுகளை இடைநிறுத்திய நிலையிலும் தொடர்ந்து இயங்குவதற்கு முன்வராத காரங்களினாலும் 28.05.2016 அன்று பொதுக்கூட்டத்தினை கூட்டியதுடன் அன்று கலைந்து சென்றனர்.

மிகவும் இக்கட்டானதொரு சூழ்நிலையில் போதிய காலஅவகாசம் இன்றியும் முறையான திட்டமிடலின்மை யினாலும் மன்றத்தின் யாப்பு விதிகளை முற்றிலும் பின்பற்ற முடியாத நிலையிலும் சம்பவங்கள் நடந்தேறின. இருந்த போதிலும் ஒன்ராரியோ மாநில இலாப நோக்கமற்ற அமைப்புக்களின் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கு அமைய இரண்டாவது காலக்கெடுவான 30.05.2016 க்குள் மன்றத்தின் நிர்வாகப் பதிவு மேற்படி திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறவேண்டிய காரணத்தினால் தற்காலிகமானதொரு நிர்வாக சபையினை பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் தற்போதைய நிர்வாக சபையி னராகிய எமக்கு கிடைத்தது.

அது மட்டுமன்றி கனடா காரை கலாசார மன்றத்தின் மிக முக்கியமானதும், கனடா வாழ் காரை சிறார்கள் மற்றும் பெரியோர்களின் காரை ஒன்றுகூடல் நிகழ்வானது 2015 இல் நடைபெறாது தவறியதை போன்று 2016ம் ஆண்டிலும் தவறிவிடக்கூடாது என்ற காரணத்தினாலும், மன்றத்தின் செயற்பாடுகள் தடைபட்டுவிடக்கூடாது என்ற காரணத்தினா லும் தற்காலிக நிர்வாக சபை ஒன்று அமைய வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது.

தற்காலிக நிர்வாகத்தினை பொறுப்பெடுத்துக்கொண்ட நாம் பதிவு திணைக்கழத்தினால் முன்வைக்கப்பட்ட காலக் கெடுவான 30.05.2016க்கும் (இரண்டு நாட்களிற்குள்) பதிவுத் திணைக்கழத்துடன் தொடர்பு கொண்டு தற்காலிகமாக அமைந்த எமது நிர்வாக சபையினை பதிவு செய்து கொண்டதுடன், 31.07.2016 அன்று வழமை போல் காரை ஒன்றுகூடல் பூங்காவிலே பல நூற்றுக்கணக்கான காரை மக்கள் கலந்துகொள்ள நடாத்தப்பட்டது. இந்நிகழ்வுகளின் போது சுவிஸ் காரை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.தம்பையா தயாபரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.
அத்துடன் 80ம் ஆண்டுகளில் காரை மண்ணிலே கலை சேவை புரிந்த அமரர் பத்மநாதன் "பட்டு மாமா" ஞாபகர்த வெற்றி



**தலைவர்**
**திரு. பரமானந்தராஜா தம்பிஐயா**



**செயலாளர்:**
**திரு. ஜெயச்சந்திரன் தம்பிராசா**



**பொருளாளர்**
**திரு. பேரின்பராசா திருநாவுக்கரசு**



**திரு. உருத்திரலிங்கம் தம்பையா**
நிர்வாகசபை உறுப்பினர்



**திரு. குமரேசன் கனகசபை**
நிர்வாகசபை உறுப்பினர்



**திரு. அரி மனோகரன்**
நிர்வாகசபை உறுப்பினர்



**திரு. சோதிலிங்கம் கணேசபிள்ளை**
நிர்வாகசபை உறுப்பினர்



**தீசன் திரவியநாதன்**
"காரை ஒன்றுகூடல்" மற்றும் "காரை வசந்தம்" உபகுழு உறுப்பினர்

கேடயங்களும், முன்னாள் காரை விளைாட்டுக்கழக உதைபந்தாட்ட வீரரும், தயாக பற்றாளருமான அமரர் நடராசா குலேந்திரன் ஞாபகர்த் தமாக வெற்றிகேடயமும் வழங்கப்பட்டது. அத்துடன் இந்நிகழ்வுகளின் மூலம் பல ஆயிரக்கணக்கான டொலர்கள் முதற்தடவையாக இலாபமாக பெறப்பட்டு கனடா காரை கலாசார மன்றத்தின் வங்கிக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மன்றத்தின் வங்கி கணக்கு முன்னாள் நிர்வாக சபையினரால் முறையே தற்போதைய நிர்வாக சபையினரிடம் கையளிக்க முடியாத நிலையில் முடக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

தொடர்ந்து கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுத்த தற்காலிக நிர்வாக சபையானது முறையே "காரை வசந்தம் 2016" நிகழ்வுகளை 29.10.2016 இன்று சிறப்புடன் நடாத்தி வருகின்றது. அத்துடன் முறையாக மன்றத்தின் யாப்பு விதிகளிற்கு அமையவும் மன்றத்தின் நல்லெண்ணம், கனடா காரை மக்களின் செயற்திறன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு கனடா கனடா காரை கலாசார மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப் படாது இருக்கின்ற காரைநகர் அனைத்து ஆரம்ப பாடசாலைகளிற்கான பத்து இலட்சம் நிரந்தர வைப்பு நிதிய திட்டத்தினை நிறைவு செய்து வைக்கவும் அத்துடன் வழமை போன்றும் மன்றத்தின் யாப்பின் பிரகாரமும் முறையே திட்டமிட்ட வகையில் பொதுக்கூட்டத்தினை 2017ம் ஆண்டு மார்ச் மாதம் கூட்டுவதற்கும் காலம் குறிக்கப்பட்டுள்ளது.

28.05.2016 தொடக்கம் இன்றுவரையான இக் காலகட்டத்தில் கனடா காரை கலாசார மன்றத்தின் வழமையான செயற்பாடுகளான காரைநகரில் 5ம் தர புலமை பரிசில் பரீட்சை கருத்தரங்குகள் நடாத்தப் பட்டதுடன், வன்னி போரினால் இடம் பெயரந்த சிறுவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிகள் சீர்செய்யப்பட்டு முறையே வழங்க நடவடிக்கை எடுத்ததுடன், காரைநகர் அபிவிருத்தி சபையினரால் கொண்டாடப் படும் வாணி விழாவிற்கான அனுசரணை வழங்கப் பட்டது.

2016 விதவைகள் தினத்தினை முன்னிட்டு காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக காரைநகரில் வாழும் விதவைகளிற்கு தென்னங்கன்றுகள் விநியோகிப் பதற்கு முழுமையான அனுசரணை வழங்கப்பட்டது.

அத்துடன் இலங்கையில் உள்ள ஹட்டன் நாஷனல் வங்கி கணக்கில் உள்ள ஈழத்து சிதம்பரம் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் நித்திய பூசைக்காக வைப்பில் இடப்பட்டிருந்த ஒன்றரை இலட்சம் மற்றும் ஒரு இலட்சம் நிரந்தர வைப்புக்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வட்டி பணம் மற்றும் 2015ம் ஆண்டு கனடா காரை மக்களால் வழங்கப்பட்ட நித்திய பூசை நிதி என்பவற்றினை ஒன்றிணைத்து மொத்தம் ஐந்து இலட்சம் ரூபாய்கள் முறையே மேற்படி கோயிலின் நித்திய பூசை நிதிக்காக மீண்டும் அதே வங்கியில் மன்றத்தின் பெயரில் வைப்பில் இட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கனடா காரை கலாசார மன்றத்தின் 2014, 2015ம் ஆண்டுக்கான நிதி அறிக்கை கனடா வருமான வரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. இத்துடன் தொடர்ச்சியாக 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளிற்கான நிதி செயற்பாடுகள் கனடா வருமான வரி திணைக்களத்தில் முதற் தடவையாக பதிவு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

அத்துடன் இன்று நடைபெறும் "காரை வசந்தம் 2016" நிகழ்வுகள் முற்றிலும் காரைநகர் ஆரம்ப பாடசாலை கள் திட்டத்திற்காகவென அனுசரணையாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் மற்றும் கனடா காரை மக்களிடம் இருந்து சேர்த்துக் கொள்ளப்பட்டு நிர்வாக தற்காலிக நிர்வாக சபையினரின் பெரும் முயற்சி யினால் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

2015ம் ஆண்டு காரைநகரில் உள்ள 12 ஆரம்ப பாடசாலைகளில் 11 ஆரம்ப பாடசாலைகளிற்கு தலா 10 இலட்சம் வீதம் வைப்பில் இட்டு வழங்கப்பட்டது. தொடர்ந்து 12வது பாடசாலையான வியாவில் சைவ வித்தியாலயத்திற்கு அத்திட்டத்திற்கான நிதியான பத்து இலட்சம் இந்நிகழ்வுகளின் ஊடாக வைப்பில் இட்டு வழங்கப்படுவதுடன் ஆரம்ப பாடசாலைகளிற்கான மில்லியன் ரூபா திட்டமும் நிறைவு பெறுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் 2014 – 2015 ம் ஆண்டு காலப் பகுதியில் கடமையாற்றிய நிர்வாக சபை உறுப்பினர் களிற்கு தற்போதைய தற்காலிக நிர்வாக சபையில் பதவி ஏற்றிருக்கும் எம் அனைவரது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அத்துடன் இப்பாடசாலைகள் நிரந்தர வைப்பு நிதிக்கு தம்மால் இயன்ற நிதிகளை வழங்கி இத்திட்டத்தினை முழுமையாக நிறைவேற்ற பல வழிகளிலும் உதவி புரிந்த கனடா காரை மக்களிற்கும், இத்திட்டத்தினை முறையே சிறந்த வகையில் நடைமுறைப்படுத்தி உரிய வகையில் வைப்பில் இட்டு வழங்கிய காரைநகர் அபிவிருத்தி சபையின் கடந்த கால மற்றும் தற் போதைய நிர்வாக சபையினருக்கும், இத்திட்டத்தினை பெற்றுக்கொள்ள கனடா காரை கலாசார மன்றத்தின் விதிமுறைகளை

ஏற்றும், ஆலோசனைகள் வழங்கியும் முற்றிலும் தோளோடு தோள் நின்று உழைத்த காரைநகர் ஆரம்ப பாடசாலைகள் அதிபர்கள் அனைவருக்கும் இத்திட்டத்தினை முறையே சட்ட ஆவணமாக பதிவாக்கிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த வக்கீல் அவர்களிற்கும் கனடா காரை கலாசார மன்றம் கோடானு கோடி நன்றிகளை பதிவாக்கிக் கொள்கின்றது.

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பவன் இறைவன் ஆவான்.

கனடா காரை கலாசார மன்றம்
நிர்வாக சபை
உறுப்பினர்கள்
29.10.2016

## கனடா-காரை கலாச்சார மன்றம் 08.10.2016 அன்று நடாத்திய தமிழ் மொழித்திறன், பண்ணிசை போட்டிகளில் வெற்றி பெற்று பரிசு பெறும் சிறுவர்கள் வருமாறு:

பேச்சு: கீழ்ப்பிரிவு
முதலாம் இடம் - பிரனுஷா சிவரூபன்
இரண்டாம் இடம் - பைரவி சிவராசா
மூன்றாம் இடம் - தயானி நடனசபேசன்

மத்திய பிரிவு
முதலாம் இடம் - சயந்தன் கணேசலிங்கம்
இரண்டாம் இடம் - துர்கா சிவகுமார்
மூன்றாம் இடம் - ராகுலன் செந்தூரன்

மேல் பிரிவு
முதலாம் இடம் - கிருஜானி நடனசபேசன்
இரண்டாம் இடம் - பவிஷா மோகனேந்திரன்
மூன்றாம் இடம் - ஜனகன் செந்தூரன்

வாசிப்பு
பாலர் பிரிவு
முதலாம் இடம் - இலக்கியா விஜயகுமார்
இரண்டாம் இடம் - இளநிலா விஜயகுமார்
மூன்றாம் இடம் - ருக்ஷியா விமலரூபன்

கீழ்ப்பிரிவு
முதலாம் இடம் - பைரவி சிவராசா
இரண்டாம் இடம் - அபீஷன் சிவானந்தன்
மூன்றாம் இடம் - மலரவன் விஜயகுமார்

மத்திய பிரிவு
முதலாம் இடம் - சயந்தன் கணேசலிங்கம்
இரண்டாம் இடம் - ராகுலன் செந்தூரன்
மூன்றாம் இடம் - அஞ்சனா சற்குணராஜா

மேல் பிரிவு
முதலாம் இடம் - ஜனகன் செந்தூரன், கிருஜானி நடனசபேசன் (இருவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)
மூன்றாம் இடம் - சேயோன் ஜெயக்குமார்

அதிமேற் பிரிவு
முதலாம் இடம் - தனுஷன் மகராஜா
இரண்டாம் இடம் - ஹரினி தயானந்தராசா
மூன்றாம் இடம் - பிரியங்கா கேதீஸ்வரன்

உயர்பிரிவு
முதலாம் இடம் - நிசாந்தி கணேசலிங்கம்
இரண்டாம் இடம் - லக்ஷிகா மோகனேந்தின்

எழுத்து
பாலர் பிரிவு
முதலாம் இடம் - இலக்கியா விஜயகுமார்
இரண்டாம் இடம் - மனோஜன் தயாபரன்
மூன்றாம் இடம் - கௌதம் தவக்குமார்

கீழ்ப்பிரிவு
முதலாம் இடம் - மலரவன் விஜயகுமார், பைரவி சிவராசா (இருவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)
மூன்றாம் இடம் - பிரனுஷா சிவரூபன்

மத்திய பிரிவு
முதலாம் இடம் - துர்கா சிவகுமார்,நிந்துஜா மோகனேந்திரன் (இருவர்பெற்றுக்கொள்கின்றார்கள்)
மூன்றாம் இடம் - ராகவி சிவராசா

மேல் பிரிவு
முதலாம் இடம் - தீபிகா பிரமேந்திரதீசன், ஆனந்த் சற்குணராஜா, ஜனகன் செந்தூரன்(மூவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)

அதிமேற் பிரிவு
முதலாம் இடம் - விஷ்வா பிரமேந்திரதீசன், ஹரினி தயானந்தராசா (இருவர் பெற்றுக்கொள்கின்றார்கள்)
மூன்றாம் இடம் - பிரியங்கா கேதீஸ்வரன்

உயர்பிரிவு
முதலாம் இடம் - நிசாந்தி கணேசலிங்கம்
இரண்டாம் இடம் - லக்ஷிகா மோகனேந்தின்

பண்ணிசை
பாலர் பிரிவு
முதலாம் இடம் - இளநிலா விஜயகுமார்
இரண்டாம் இடம் - கிருஷான் சிவபாலன்
மூன்றாம் இடம் - இலக்கியா விஜயகுமார்

கீழ்ப்பிரிவு
முதலாம் இடம் - பைரவி சிவராசா
இரண்டாம் இடம் - கம்சினி சிவபாலன்
மூன்றாம் இடம் - பிரனுஷா சிவரூபன்

மத்திய பிரிவு
முதலாம் இடம் - துர்கா சிவகுமார்
இரண்டாம் இடம் - ராகவி சிவராசா
மூன்றாம் இடம் - அஞ்சனா சற்குணராஜா

மேல் பிரிவு
முதலாம் இடம் - கார்த்திக் சிவகுமார்
இரண்டாம் இடம் - கிருஜானி நடனசபேசன்
மூன்றாம் இடம் - ஆனந்த் சற்குணராஜா

அதிமேற் பிரிவு
முதலாம் இடம் - நிலக்ஷன் தயானந்தராசா
இரண்டாம் இடம் - ஹரினி தயானந்தராசா

உயர்பிரிவு
முதலாம் இடம் - லக்ஷிகா மோகனேந்தின்
இரண்டாம் இடம் - நிசாந்தி கணேசலிங்கம்

**வெள்ளிவிழாக் காணும் கனடா-காரை கலாச்சார மன்றத்தின்**
**காரை வசந்தம் - 2016**
**நிகழ்ச்சி நிரல்**

5:30 **மங்கள விளக்கேற்றல்:**
நேரம் மாலை
திரு. திருமதி பரமேஸ்வரன் திலகேஸ்வரி
திரு. திருமதி பாலச்சந்திரன் ரட்சாயினி
திரு. திருமதி நாகராசா விமலாதேவி

**தமிழ் தாய் வாழ்த்து**
கனடிய தேசிய கீதம்
கனடா காரை கலாசாரமன்ற கீதம்
இசைப்போர் காரை சிறார்கள்
மௌன அஞ்சலி

**வரவேற்புரை:**
நிர்வாக சபை உறுப்பினர்
திரு.குமரேசன் கனகசபை

**கும்மி நடனம்**
பாமினி சத்தியலிங்கம் மாணவிகள்.
பங்குபற்றுவோர்:
சகானா சாந்தகுமார்
கஜானி தீபகரன்
இனுஷா இந்திரகுமார்
சாதனா சாந்தகுமார்
பவித்திரா திவாகரன்
ரதீகா இராஜேந்திரகுமார்
அற்புதா சிவராசா
விதுஷா ஜெயரட்ணம்

**பேச்சு:**
கனடா காரை கலாசார மன்றம் நடாத்திய தமிழ் திறன் பேச்சு போட்டியில் முதல் பரிசு பெற்றவர்கள்
பிரனுஷா சிவரூபன் – முதலிடம் கீழ்பிரிவு
சயந்தன் கணேசலிங்கம் – முதலிடம் மத்திய பிரிவு
கிருஷானி நடனசபேசன் – முதலிடம் மேல் பிரிவு

**“பழனி“ நாட்டிய நாடகம்**
நாட்டிய கலைமணி ஞானாம்பிகை குணரட்ணம் அவர்களின் சாயி சகானா நடனப்பள்ளி மாணவர்கள்.
பங்குபற்றவோர்:
லக்ஷிகா மோகனேந்திரன்
நிஷாந்தி கணேசலிங்கம்
சயனி குணரத்தினம்
அஷ்வினி சண்முகரத்தினம்
பிரியங்கா கேதீஸ்வரன்
சுரதி கிருபரூபன்
சகானா குணரத்தினம், துர்கா சிவகுமார், துளசி யோகேஸ்வரன், நிந்துஜா மோகனேந்திரன், பவிஷா மோகனேந்திரன், அகிலா அரியரட்ணம்
அஜீஸ் சண்முகரட்ணம், ஹம்சினி சிவபாலன், கிருஷாந் சிவபாலன், றுக்ஷியா விமலரூபன், சினேகன் கிருபாகரன்

**“Facebook 2”**
காரை மணிவண்ணனின் உருவாக்கத்தில் நகைச்சுவை நாடகம்.
பங்குபற்றுவோர்:
அனந் சற்குணராசா
அஞ்சனா சற்குணராசா

**ஊரில் இருந்து.... பகுதி I**

**தலைவர் உரை.**
கனடா காரை கலாசார மன்ற தலைவர்
திரு.தம்பிஐயா பரமானந்தராசா

**ஊரில் இருந்து... பகுதி 2**

**“சக்தி நடனம்“**
சதங்கை நர்த்தனாலய அதிபர் வாசு சின்னராசா அவர்களின் மாணவிகள்

**“அகல்விழி“**
அமல்குமார் நெறியாள்கையில் செல்வா விமல், சுபாஸ் கிருஸ்ணன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

**விருந்தினர்கள் கௌரவம்**
**விருந்தினர்கள் உரை.**
சிவத்திரு தி.விஸ்வலிங்கம்
தலைப்பு: காரைநகர் சைவ மகா சபை

Dr.ஆதிகணபதி சோமசுந்தரம்
தலைப்பு: கலாநிதி ஆ.தியாகராஜா

பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன்
தலைப்பு: கோவளம் வெளிச்ச வீடு

சிவத்தமிழ் காவலர் ஆறுமுகம் செந்தில்நாதன்
தலைப்பு: மூதறிஞர் க.வைத்தீஸ்வரகுருக்கள்

**பரிசளிப்பு நிகழ்வு**

கனடா காரை கலாசார மன்றத்தினால் நடாத்தப்பட்ட பண்ணிசை, தமிழ் திறன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற சிறுவர்கள் மற்றும் பங்கு பற்றிய மாணவர்கள் அனைவருக்குமான ஊக்குவிப்பு பரிசில்கள்.

**தமிழ் இசை**

இசைக்கலைமணி, இசைக்கலா வித்தகர்
ஆலல சுந்தரத்தின் மாணவிகள்
கவிதா சிவநாதன்
காவிரி சிவநாதன்
பக்கவாத்தியம்: மிருதங்கம்
தேசாங்கன் கலாரஞ்சிதன்,
வயலின் – துர்கா சுதர்சன்,
கடம் – பகீரதன் கேசவன்.

**“காரை விழுதுகள்“ சமூக நாடகம்**

பங்குபற்றுவோர்:
அஷீஸ் சண்முகரட்ணம்
அஷ்வினி சண்முகரட்ணம்
அனந் சற்குணராஜா
தனுஷ்காந் யோகேஸ்வரன்
ஜெரூஷன் யோகேஷ்வரன்
ஜனகன் செந்தூரன்
கார்த்திக் சிவகுமார்
ராகுலன் செந்தூரன்
சங்கர் ஜெயச்சந்திரன்
சயந்தன் கணேசலிங்கம்

**“லய அமுதம்“**

அமுதீசர் சச்சிதானந்தன் அவர்களின் நெறியாழ்கையில் கர்நாடக மற்றும் மேற்கத்தைய இசைகளின் சங்கமம்.

இடைவேளைகள் அற்ற வகையில் நடைபெறும் இந்நிகழ்வுகளின் போது மண்டபத்திற்கு வெளியே மாலை 7 மணி முதல் இனிப்பு, சிற்றுண்டிகள், கோப்பி, குளிர்பானங்கள் எல்லா நேரமும் இலவசமாக வழங்கப்படும்.

அனைவருக்கும் இலவசமாக இரவு உணவு(முற்றிலும் சைவ உணவு)நிகழ்ச்சிகள் முடிவில் வழங்கப்படும்.



**www.karainagar.com**



# காரை வசந்தம் 2016 பிரதம விருந்தினர் கௌரவம்: பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன்

கனடா காரை கலாசார மன்றத்தின் “காரை வசந்தம் 2016“ நிகழ்வுகளிற்கு பிரதம விருந்தின்களில் ஒருவராக பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன் அவர்களை அழைத்து இம்மன்றத்திற்கும் கனடா வாழ் காரை மக்களிற்கும் எம் காரை மண்ணிற்கும் பெருமை சேர்ப்பதில் கனடா காரை கலாசார மன்றம் உவகை கொள்கின்றது. பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன் அவர்கள் காரைநகர் சக்காவோடை நாவலடிக்கேணியை சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆசிரியர் செல்லையா ஆறுமுகம், செல்லம்மா தம்பதிகளின் மகன் ஆவார். இவர் தனது தொடக்க கல்வியை சுப்பிரமணியம் வித்தியாசாலையிலும் இடைநிலை கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் கற்று உயர்நிலை கல்வியினை யாழ் இந்துவிலும் பயின்று கா.பொ.த உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களிலும் ஏ தர சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்று காரை மண்ணின் பெருமையினை எடுத்தியம்பியவர்.

தற்பொழுது பிரித்தானியா Kings College London பல்கலைக்கழகத்தில் தகவலியல் துறை பேராசிரியராக கடமையாற்றிவருகின்றார் ஆறுமுகம் நல்லநாதன் அவர்கள். அண்மையில் உலகப் பல்கலைக்கழக மட்டங்களில் கீர்த்திமிகு பட்டியலாகக் கருதப்படும் ஆராய்ச்சியாளர்களின் பட்டியலை “தொம்சன் றொய்ட்டர்ஸ்“ என்னும் ஆய்வு நிறுவனம் வெளியிட்டிருக்கின்றது. கணனி விஞ்ஞானத்துறையில் மேற்படி பட்டியலில் இடம்பெற்றுள்ள 127 ஆராய்சியாளர்களில் பேராசிரியர் நல்லநாதனும் ஒருவர் ஆவார்.

உலகில் மிகப்பெரிய தொழில்நுட்பத்துறைசார் நிபுணர்களின் நிறுவனமான மின் மற்றும் இலத்தினியல் பொறியியல் நிறுவனத்தில் (IEEE) “தனிச்சிறப்புவாய்ந்த“ விரிவுரையாளராக பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன் அழைக்கப்படுகின்றார். 300 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், மாநாட்டு அறிக்கைகள், நூல்களையும் வெளியிட்டுள்ள பேராசிரியர் ஆ.நல்லநாதன் தகவல் தொழில்நுட்பத்துறையில் சிறந்த சேவைக்கான பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

காரை மண்ணின் சார்பாக நாம் இன்றைய எமது விழாவில் பிரதம விருந்தினர்களில் ஒருவராக அழைத்து கௌரவப் படுத்துவதில் பேருவகை கொள்கின்றோம்.

Arumugam Nallanathan is a Professor of Wireless Communications in the Department of Informatics at King's College London (University of London). He served as the Head of Graduate Studies in the Faculty of Natural and Mathematical Sciences at King's College London, 2011/12. He was an Assistant Professor in the Department of Electrical and Computer Engineering, National University of Singapore from August 2000 to December 2007. His research interests include 5G Wireless networks, Molecular Communications, Millimeter - wave communications, Energy Harvesting, Cognitive Radio and Relay Networks. He published 300 nearly 300 Journal and Conference papers with 4600 + citations. He has been selected as a Thomson Reuters Highly Cited Researcher (also known as the World's Most Influential Scientific Minds) in 2016. He is a co-recipient of the Best Paper Awards presented at the IEEE International Conference on Communications 2016 (ICC'2016) and IEEE International Conference on Ultra-Wideband 2007 (ICUWB'2007). He is an IEEE Distinguished Lecturer.

He is an Editor for IEEE Transactions on Communications and IEEE Transactions on Vehicular Technology and a Guest Editor for IEEE Transactions on Emerging Topics in Computing: Special Issue on Advances in Mobile and Cloud Computing. He was an Editor for IEEE Transactions on Wireless Communications (2006-2011), IEEE Wireless Communications Letters and IEEE Signal Processing Letters. He served as the Chair for the Signal Processing and Communication Electronics Technical Committee of IEEE Communications Society, Technical Program Co-Chair (MAC track) for IEEE WCNC 2014, Co-Chair for the IEEE GLOBECOM 2013 (Communications Theory Symposium), Co-Chair for the IEEE ICC 2012 (Signal Processing for Communications Symposium), Co-Chair for the IEEE GLOBECOM 2011 (Signal Processing for Communications Symposium), Technical Program Co-Chair for the IEEE International Conference on UWB 2011 (IEEE ICUWB 2011), Co-Chair for the IEEE ICC 2009 (Wireless Communications Symposium), Co-chair for the IEEE GLOBECOM 2008 (Signal Processing for Communications Symposium) and General Track Chair for IEEE VTC 2008. He received the IEEE Communications Society Signal Processing and Communications Electronics (SPCE) outstanding service award 2012 and IEEE Communications Society RCC Outstanding Service Award 2014. He also received the best teaching award twice at the National University of Singapore. He is a Senior Member of the IEEE.

Research Interests:

- 5G Wireless Networks
- Molecular Communications
- Millimeter-wave Communications
- Energy Harvesting
- Physical Layer Security
- Cooperative Communications
- Cognitive Radio Networks



# காரை வசந்தம் – 2016 பிரதம விருந்தினர் கௌரவம்: சைவசித்தாந்த ஜோதி, தமிழ் சுடர், சிவத்தமிழ் காவலர் ஆறுமுகம் செந்தில்நாதன்.

சைவமும் தமிழும் கமழும் காரை மண்ணில் ஈழத்து சிதம்பரம் என போற்றப்படும் திண்ணபுரம் சிவன்கோயிலுக்கு அண்மையில் சடையாளி கிராமத்தில் காலஞ்சென்ற ஆறுமுகம் பாக்கியலட்சுமி தம்பதிகளின் மகன் திரு.ஆறுமுகம் செந்தில்நாதன் அவர்கள் காரை மண்ணில் மூதறிஞர் க. வைத்தீஸ்வரகுருக்கள் அவர்களின் அடிபணிந்து சைவ சமயத்திற்காக ஆற்றிய தொண்டுகள் பல. காரைநர் மணிவாசகர் சபையின் செயலாளராக பல ஆண்டுகள் சேவை புரிந்து மணிவாசகர் சபையின் சேவைகள் இன்றுவரை இடைவிடாது தொடர, தொடர்ச்சியாக பணி புரிந்து வருபவர். தொடர்ந்தும் சைவ சமய பெரியார்கள் தொடர்புகள் மூலமாகவும் சமய வழிமுறைகளை பின்பற்றியும் சைவ சமயத்தினை முன்னிறுத்தி அதன் ஊடாக இடம் பெயர்ந்த சுவிஸ்நாட்டிலும் சைவத்திற்காக தொண்டாற்றி, 14 ஆண்டுகளாக சூரிச்சில் அமைந்துள்ள அருள்மிகு சிவன் கோயில் நிர்வாகியாகவும், சுவிஸ் காரை அபிவிருத்தி சபையின் தலைவராகவும் கடமையாற்றியவர்.

சைவ சமய கொள்கைகளையும், சைவ சமய மேன்மைகளையும் தனது வசீகரமான பக்தி மேலிடும் உரைகள் மூலமாகவும், பிரசங்கங்கள் ஊடாகவும் இன்றைய இளைஞர்கள் மனதில் இடம் பெறவைத்து வருகின்ற திரு.ஆறுமுகம் செந்தில்நாதன் அவர்களிற்கு சுவிஸ் சூரிச் மாநிலத்தில் அமைந்துள்ள அட்லீஸ்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தினர் "சைவசித்தாந்த ஜோதி" என்னும் சிறப்பு பட்டம் மற்றும் "தமிழ்சுடர்" என்ற பட்டத்தினையும் கனடா ஆதிசிவன் ஆலயத்தில் 2010ம் ஆண்டு நடைபெற்ற திருவிழாவின் போது 10 நாட்கள் தொடர் சொற்பொழிவாற்றியமையை கௌரவித்து "சிவத்தமிழ் காவலர்" என்ற பட்டமளித்தும் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

கனடா காரை கலாசார மன்றம் காரை வசந்தம் 2016 நிகழ்வுகளின் போது ஆறுமுகம் செந்தில்நாதன் அவர்களை பிரதம விருந்தினராக அழைத்து காரை மண்ணையும் கனடா காரை மக்களையும் மன்றத்தையும் கௌவரம் செய்வதில் பேருவகை அடைகின்றது.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலமெல்லாம்"

## கனடா - காரை கலாச்சார மன்றம் நடாத்திய

# தமிழ்த்திறன், பண்ணிசைப் போட்டி - 2016

## பங்கு பற்றிய சிறுவர்கள்

கனடா–காரை கலாசார மன்றம் வருடந்தோறும் தமழ் மொழித்திறன், பண்ணிசை போட்டிகளை நடாத்தி வருகின்றது. கனடா வாழ் காரை சிறார்களை தமிழ் மொழியின் மீது பற்றுள்ளவர்களாக, தமிழர்களின் கலாசாரங்களை பின்பற்றி ஒழுகவும் எமது காரை மண்ணின் பெயர் விளங்க கனடா நாட்டிலே வாழ்வதற்கு ஊக்குவிக்கும் முகமாக பண்ணிசை, பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகிய போட்டிகளை நடாத்தி வருகின்றது. இவ்வருடம் 08.10.2016 அன்று நடைபெற்ற இப்போட்டிகளில் பங்குபற்றிய சிறுவர்கள் விபரம் வருமாறு. பங்குபற்றி சிறப்பித்த அனைத்து சிறுவர்களிற்கும் இன்று நடைபெறும் காரை வசந்தம் நிகழ்வுகளில் ஊக்குவிப்பு பரிசு வழங்கி கௌரவிக்கப்படுவதோடு, வெற்றி பெற்ற சிறுவர்களிற்கான பரிசுகளும் வழங்கப்படுகின்றன.



பவிஷான் சிவரூபன்



கௌதம் தவக்குமார்



மனோஜன் தயாபரன்



இலக்கியா விஜயகுமார்



இளநிலா விஜயகுமார்



றுக்சியா விமலரூபன்



யதுக்சியா விமலரூபன்



கிருஷான் சிவபாலன்



ராகவி சிவானந்தன்



பிரனுஷா சிவரூபன்


விதுஷா ஜெயரட்ணம்



சுபாங்கி மகாராஜா



மலரவன் விஜயகுமார்



பைரவி சிவராஜா



கம்சினி சிவபாலன்



அபிஸ்னன் சிவானந்தன்



தயானி நடனசபேசன



அனுசிவன் பிரதீபன்



அஞ்சனா பிரதீபன்



ஹர்னி பரந்தாமன்



ஹிரண்யா பரந்தாமன்



மலரோன் ஜெயகுமார்



அஞ்சனா சற்குணராசா


துர்கா சிவகுமார்



ராகுலன் செந்தூரன்



கஜானி பிரகலாதீஸ்வரன்



சயந்தன் கணேசலிங்கம்



நிந்துஜா மோகனேந்திரன்


ராகவி சிவராஜா



அஷ்வினி சண்முகரட்ணம்



மதுமிதா தேவகுமார்



சேயோன் ஜெயகுமார



வினுஷன் ஜெயரட்ணம்



அனந் சற்குணராஜா



ஜனகன் செந்தூரன்



கார்த்திக் சிவகுமார்



மாதங்கி மகாராஜா


வாசுகி தயானந்தராசா


பவிஜா மோகனேந்திரன்



தீபிகா பிரமேந்திரதீசன்



கிரிஜானி நடனசபேசன்



தனுஷன் மகாராஜா



ஹரினி தயானந்தராசா



நிலுக்ஷினன் தயானந்தராசா



பிரியங்கா கேதீஸ்வரன்



விஷ்வா பிரமேந்திரதீசன்



நிஷாந்தி கணேசலிங்கம்



லக்ஷிகா மோகனேந்திரன்

# பரிசு பெற்ற சிறுவர்களின் விபரங்களை
பக்கம் 05 இல் பார்க்கவும்


DOUBLESEAL
INSULATING GLASS LTD.
453 SIGNET DRIVE
NORTH YORK, ONTARIO, M9L 1V5
TEL: 416. 742 0146
FAX: 416. 742 4593
CONTACT: MAHADEVAN BALASUBRAMANIAM
EMAIL: mo@doubleseal.ca
CELL: 416. 716 7052
Manufacturing high performance
insulating glass units
for commercial and residental use.


RE/MAX
RE/MAX EXCEL REALTY LTD Brokerage
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Independently Owned and Operated.
#1
• Residential
• Commercial
• Condos
• Land & Investment Properties
Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
PHONE: 905-475-4750 FAX: 905-475-4770

# குடும்பப் பல் வைத்தியர்

## அவசர பல் சிகிச்சை நிலையம்



- கிளிப் போடுதல்
- முரசு கரைதலை நிறுத்துதல்
- பல் வேர்களை அடைத்தல்
- அழகுபடுத்தும் பல் சிகிச்சை
- முதியோர் பல் பராமரிப்பு
- பற்களை வெண்மையாக்கல்
- கட்டுப்பற்கள்
- ஞானப்பல் எடுத்தல்
- நிரந்தரமான செயற்கைப்பற்கள்
- பவுண்பல் கட்டுதல்
- குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
- வாய் துர்நாற்றம் அகற்றல்
- பல்அடைத்தல்
- **Implant**

## OPEN 7 DAYS A WEEK

பிரபல பல் வைத்திய நிபுணர்

## DR. ஆதிகணபதி சோமசுந்தரம்

## 416-750-9969

**2191 Warden Ave.(Warden & Sheppard)**





# Dr.Siva Balasingam
MBBS.LRCP MRCS (U.K) DCH (U.K)

## Dixi - Dundas Family Practice
3100 Dixie Road, Unit 9
Mississauga, ON L4Y 2A0

TEL: 905 273 7333
FAX: 905 273 5238
www.Dixie-DundasFamilyPractice.com


OLYMPIC
WOOD WORK INC.
1680 MIDLAND AVE. UNIT 14
SCARBOROUGH, ON M1P3C6
KITCHEN STYLES • KITCHEN ACCESSORIES • CABINET DOORS
COUNTERTOP CHOICES • OTHER ROOMS • COMMERCIAL
BATHROOM RENOVATIONS • RENOVATIONS • CERAMIC TILES
T: 416-483-3700 | F: 416-752-2700 | C: 416-827-9290
KARUNAOLYMPICWOOD@YAHOO.CA | WWW.OLYMPICWOODWORK.CA

OLYMPIC DEVELOPMENTS

Welcome to Your Dream Home custom build & custom renovation Builder



T: 416-483-3700 | F: 416-752-2700 | C: 416-827-9290

KARUNAOLYMPICWOOD@YAHOO.CA | WWW.OLYMPICDEVELOPMENTS.COM

1680 MIDLAND AVE. UNIT 14, SCARBOROUGH, ON M1P3C6


WE FIND THE OPPORTUNITIES.
YOU CREATE YOUR FUTURE.
HOMELIFE
HIGHER STANDARDS
MULTIPLE LISTING SERVICE
REALTOR
INVESTMENT IN
CASHFLOWING
PROPERTIES
Why Me?
1. Find a right property
2. Manage your property
3. Rent your property
I GIVE YOU
High CAP rate
High appreciation rate
High monthly rent
Positive cashflow
Low vacancy rate
100% Satisfaction Guaranteed
Sehkar Kandiah B.Sc.Eng, RCM
Sales Representative
416.918.8079
E: s.kandiah@rogers.com
HomeLife/GTA Realty Inc
A: 5215 Finch Ave. E, #203 Toronto, ON M1S 0C2
B: 416.321.6969
F: 416.321.6963
*independently owned & operated



நகையும், பட்டும் இணைந்த ரொறன்ரோவின்
முதல் தமிழ் நிறுவனம்
SKT JEWELLERY & TEXTILES
நகைகளில்
நவநாகரீக உடைகளில்
நகரில் முன்னணியில்
நிற்பவர்கள்
S.K.T JEWELLERS & TEXTILES
416 615 0197 / 416 615 0262
2062 Lawrence Ave. East, Scarborough ON M!R 2Z5
(Warden & Lawrence)
pratheepkathy@gmail.com www.sktonline.com
Graphicland - 416 412 0900
S.K.T.JEWELLERS & TEXTILES
THE FIRST TAMIL STORE WHICH MERGED
TEXTILES AND JEWELLERY TOGETHER IN TORONTO
416 615 0197

காரைவசந்தம் 2016 சிறப்புற வாழ்த்துகின்றோம்

# Buy & Sell a home through me and see the difference



Residential, commercial,
Downtown Condos, Vacant Land
& Investment Properties



## Kannan Nadarajah

Sales Representative

**Dir: 416-889-1083**

E-mail: kannanhomes143@yahoo.com

Homelife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr., Suite 205, Markham, ON. L3S 4N8
Bus: 905-201-9977 Fax: 905-201-9229

# Take Advantage of My Lending Experience!!!

RIGHTBROKER™ RIGHTMORTGAGE® RIGHTPLACE™

- Mortgage renewal.
- Second Mortgage, Investment.
- Self Employed Program!
- First time Buyers with 5% Down payment!
- New to Canada.
- Good credit, Bad credit.
- Bankruptcy or Income issues.
- Bankruptcy, Consumer Proposal.
- Home Equity Line of Credit
- Refinancing your Mortgage
- Consolidating Existing Debts
- Purchase Pre- Approval



BUYING WITH NO DOWN PAYMENT

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE



I'll help you choose the mortgage solution that's right for you. Call me today for expert advice.

Kannan Nadarajah
Mortgage Agent
Lic# M14000814
D: 416-889-1083
E:ktnadarajah@mortgagealliance.com
W:www.mortgagealliance.com/kannannadarajah

# மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்



## கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா...!



**59 ஆண்டுகள்**
**வர்த்தகத்துறையில் முன்னோடிகள்**

*24 வருடங்களாக துரித பணமாற்று சேவையில்*
*கனடா வாழ் தமிழ் மக்களின் மனதில்*
*நம்பிக்கை, நாணயம், நன்மதிப்பை*
*பெற்ற ஒரே ஸ்தாபனம்*

## M.KASIPPILLAI & SONS INC

**Tel: 416 267 8221**

**3228 Eglinton Ave. E, Suite #3 Scarborough, Ont. M1J 2H6**

*With the best wishes*

*from*

# Dr. V. Vijayaratnam, M.D.

FRCP, M.R.C.P.(UK), D.C.H.(Lond.), D.C.C.H.(Edin.)
Pediatrics, Gastroenterology and Nutrition

**Two Locations to serve you**

**Downtown**

600 Sherbourne Street, Suite 711
Toronto, Ontario M4X 1W4
Telephone: 416-929-0929

**Scarborough**

3430 Finch Avenue East
Scarborough, ON, M1W 2R5
Telephone: 416-496-1990

With Best Compliments

*we always care at . . .*

Bridletowne Dental

**Dr. Jeyapalan. BDS., DDS.** (University of Toronto)
**Dentist**

**416 492 3775**






# Bridletowne Dental

**2555 Warden Avenue. Scarborough M1W 2H5**
**( 1 Block South of Finch Ave. East on Warden)**

**TD Canada Trust** Advice Whereever Whenever

## Supen Subramaniam

Manager, Residentail Mortgage



t: 416-844-8692 f: 1-888-809-9154
e: supenthiran.subramaniam@td.com

Competitive Rate

- Buying Home
- Refinance (Consolidation existing debts)
- Home Equity Line of Credit
- Switch your mortgage from another financial institution
- Pre-aproval



கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் என்னை அழையுங்கள்




# CAP REIT

**Canadian Apartment Properties**
**Real Eatate Investment Trust**

## மிகவும் தரமான வாடகைக் குடியிருப்பு

Visit our website
www.capreit.net



WE HAVE YOU COVERED IN SCARBOROUGH

1757 Victoria Park Ave
(Victoria Pk & Lawrence)
1,2 Bedrooms from $850
Utilities Included
416-759 9977

10 & 30 Tuxedo Court
(Markham & Ellesmere)
1,2,3 Bedrooms from $929
Utilities Included
416-289 7423

25 Bay Mills Blvd
(Warden & Sheppard)
1,2 Bedrooms from $960
Utilities Included
416-293 0924

215 Markham Road
(Markham & Eglinton)
1,2 Bedrooms form $880
Utilities Included
416-267 5223

30 Livonia Place
(Neilson & Ellesmere)
1,2,3 Bedrooms from $870
Utilities Included
416-281 5353

567 Scarborough Golf Club
(Scarborough Golf Club & Lawrence)
1,2 Bedrooms from $865
Utilities Included
416-431 6994

1050 Markham Rd
(McCowan & Ellesmere)
Jr1,1,2 Bedrooms from $720
Utilities Included
416-438 3400

4000/4010 Lawrence Avenue East
(Lawrence & Kingston)
1,2,3 Bedrooms from $825
Utilities Included
416-724 4040

370 McCowan Road
(McCowan & Eglinton)
1,2,3 Bedrooms from $905
Utilities Included
416-266 7025


When loved ones depart we carry your burden
with helping hands we lead you gently
to your loved ones final resting.
We provide a full range of services to families who have
experienced a loss of a loved one, including:
Visitation
Funeral & Memorial Services
Receptions and
Arranging Burial & Cremation
Christeen Seevaratnam
416-258-6759
Vilosan Sivatharman B.Eng
416-993-0826
printfast.ca

# காரை ஒன்றுகூடல் - 31 07 2016
# அன்றைய நிழ்வின் நிழல் தொகுப்பு




















Canada - Karai Cultural Association
கனடா - காரை கலாச்சார மன்றம்
CKCA








31.7.2016


SPALDING
CKCA
31.7.2016




31.7.2016


31.7.2016


31.7.2016


31.7.2016


31.7.2016


31.7.2016


31.7.2016


31.7.2016






POWERED
Canada - Karai
2
1
3
31.7.2016


31.7.2016


Canada - Karai
2
1
3
31.7.2016


31.7.2016




PUMA
2
31.7.2016

*With Best Wishes*

**MAGNUM**

FIRE PROTECTION INC

**Ruban Ratnasingam**

**M: 905 660 9111**

*APEX group of company*

T: 1 844 660 9111

F: 905 660 9110

E: ruban@magnumfireprotection.com

16 Spinnaker Way Unit 6, Concord, On L4K 2T8

# காரைநகர் கல்விப்புல வளர்ச்சியும் அதில் கனடா காரை கலாசார மன்றத்தின் பங்களிப்பும்.

**இவ்வாண்டு கல்வியில் மறுமலர்ச்சி**

இந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் காரைநகரில் 82 வீதமான மாணவர்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்பட்ட சித்திவீதத்தினை அடைந்து சாதனை படைத்துள்ளனர். காரைநகர் கல்வி வரலாற்றில் இது ஒரு மைல்கல்லாகும் எனக் கல்வியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆரம்பக் கல்வி அறிவினைப் பெறும் ஒரு மாணவனே தொடர்ந்து தனது கல்வியினை சிறப்பாக முன்னெடுக்க முடியும் அதற்கமைய இலங்கைக் கல்வித் திணைக்களத்தினால் ஆரம்பப் பிரிவிலேயே மாணவர்கள் எழுத,வாசிக்கத் தெரிந்தவர்களாகவும் சுயமாக தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ளக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக மாணவர்களின் வாழ்வில் முதலாவது பரீட்சையாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையினை நடாத்தி மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கின்றனர்.

**அனைத்து மாணவர்களும் சித்தி மட்டத்தினை அடைய வேண்டும்.**

இந்தப் பரீட்சையின் இலக்கு அனைத்து மாணவர்களும் சித்தி மட்டத்தினை அடைய வேண்டும் என்பதே க.பொ.த.சாதாரணதரம்,க.பொ.த.உயர்தரப் பரீட்சைகளில் கூட ஒவ்வொரு பாடத்திலும் 35 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவே பரீட்சைத் திணைக்களத் தினால் அறிவிக்கப்படுகின்றது. அதே போல தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் நடாத்தப்படுகின்ற இரு பாடங்களிலும் தலா 35 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் சித்தியடைந்தவர்களாகவே பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

**எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இடர்ப்படுகின்றனர்.**

இவ்வாறு சித்தியடைகின்ற மாணவர்களே இரண்டாம் நிலைக் கல்வியான தரம் 6 இல் இருந்து கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக அமையும்.அந்த வகையில் இவ்வாண்டு 18 வீதமான மாணவர்களே சித்தியடையத் தவறியுள்ளனர். இவ்வாறு சித்தியடையத் தவறும் மாணவர்களே இன்றும் தரம் 10,11 களில் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இடர்ப்படுகின்றனர். இதனை மேற்படி வகுப்புக்கள் நடைபெறும் எமது நான்கு பாடசாலைகளிலும் நேரில் சென்று அவதானிக்க முடியும்.

**கனடா வாழ் காரை மக்களின் கனவினை நனவாக்க:**

இந்த நிலையை மாற்றி அனைத்து மாணவர்களும் எழுத வாசிக்கத் தெரிந்த மாணவர்களாக கல்வியில் ஆர்வம் உடையவர்களாகக் கற்க வேண்டும் என்ற இலங்கைக் கல்வித் திணைக்களத்தின் குறிக் கோளுக்கு அமைய காரைநகர் பிரதேச மாணவர்களும் முழுமையான சித்தியினைப் பெறவேண்டும் என்ற கனடா வாழ் காரை மக்களின் கனவினை நனவாக்க காரைநகர் அபிவிருத்திச் சபையும் அதன் தலைவரு மான ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளரு மான ப.விக்னேஸ்வரன் அவர்களின் முயற்சியின் பயனாக இன்று 82 வீதமான மாணவர்கள் சித்திமட்டத்தினை எய்தி தீவகத்தின் ஏனைய கோட்டங்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கின்றனர். ஆரம்பப் பாடசாலைகளின் அதிபர்,ஆசிரியர்களின் அயராத உழைப்புக்கும் பெற்றோர்களின் முயற்சிக்குப் பக்க பலமாக நின்று ஓய்வு நிலை மாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் அவர்கள் காரைநகருக்குப் பெற்றுக் கொடுத்த வெற்றியானது மகத்தானது. இனி வரும் காலங்களில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் பாடசாலைகளில் உள்ளார்கள் என்ற பேச்சுக்கே இடம் இல்லாத நிலை இவருடைய காலத்தில் உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையினை

இவ்வாண்டு புலமைப் பரிசில் பெறுபேறுகள் எடுத்தியம்புகின்றன.

**இவ்வாண்டு இடம்பெற்ற கல்விப் புரட்சி.**

காரைநகரின் கடந்த 7 ஆண்டுகள் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேற்றினை எடுத்து நோக்கினால் இவ்வாண்டு இடம்பெற்ற கல்விப் புரட்சியினை அறிந்து கொள்ள முடியும் அந்தவகையில் 2010ம் ஆண்டு காரைநகரில் சித்தி வீதம் 62 வீதமாகவும் தொடர்ந்து 2011, 2012, 2013, 2014, 2015 களில் முறையே 70, 67, 72, 79, 73 வீதமாகக் காணப்பட்டு இவ்வாண்டு இத்தொகை 82 வீதமாக அதிகரித்துள்ளது. அதாவது இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றிய 169 மாணவர்களில் 139 மாணவர்கள் 71 புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர்.

**வெட்டுப் புள்ளி நிர்ணயிக்கப்படுதல்.**

இவ்வாறு மாணவர்களின் கல்வி மட்டத்தினை உயர்த்துவதற்காக நடத்தப்படும் இப்பரீட்சையின் மூலம் மாணவர்களைத் தேசியப் பாடசாலைகளில் உள்வாங்குதல் மற்றும் வறிய மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவான மாதாந்தம் 500 ரூபா வழங்கல் போன்றனவும் மேற்கொள்ளப் படுகின்றன. அதற்காக குறிப்பிட்ட வெட்டுப் புள்ளி நிர்ணயிக்கப்பட்டு மாணவர்கள் உள்வாங்கப் படுகின்றனர். இதற்காக யாழ் மாவட்டத்தில் ஆயிரத்திற் கும் குறைவான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் ஓர் ஆண்டில் எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் எனத் தீர்மானிக்கின்றார்களோ அந்த மாணவன் பெற்ற புள்ளியே அந்தாண்டுக்கான வெட்டுப்புள்ளியாக அமைகின்றது. அதாவது யாழில் 950 மாணவர்கள் இவ்வாண்டு தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள் எனின் 950 வது மாணவன் 152 புள்ளிகளைப் பெற்றிருந்தால் அதுவே வெட்டுப் புள்ளியாக அமையுமெனக் கூறப்படுகின்றது.அதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெட்டுப்புள்ளி மாற்றமடையும்.

**நகர மற்றும் தேசியப் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர்**

இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட 152 வெட்டுப் புள்ளிகளைத் தாண்டிய மாணவர்களின் தொகை காரைநகரில் பத்தாக உள்ளதுடன் பத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் வெட்டுப் புள்ளியை அண்மித்த 150, 151 புள்ளிகளைப் பெற்று வெட்டுப் புள்ளியைத் தாண்ட முடியாத சோகமும் ஏற்பட்டது. அத்துடன் 82 மாணவர்கள் 101 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இந்த மாணவர்களே எதிர்காலத்தில் காரைநகரின் கல்விச் சாதனைகளைத் தீர்மாணிக்கக் கூடியவர் களாக அமைய உள்ளனர்.ஏனெனில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களில் ஒரு சில மாணவர்களே இங்கு கற்க ஏனையோர் நகர மற்றும் தேசியப் பாடசாலைகளை நோக்கிச் செல்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.கடந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஓரிருவரே காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியிலும் இந்துக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர ஏனையோர் நகரப் பாடசாலைகளை நோக்கி நகர்ந்துள்ளனர்.அவர்களைத் தொடர்ந்து அவர்களது பெற்றோர்களும் நகரை நோக்கி தமது குடியிருப்புக் களை நகர்த்தி உள்ளனர் இவ்வாறு வருடாந்தம் காரைநகரின் குடிசன அடர்த்தி குறைத்தே வருகின்றது.

**அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை**

இதே போன்று நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கிராமப் புறங்களில் இருந்து நகரப் புறங்களை நோக்கி கல்விக்காக மக்கள் இடம் பெயர்கின்றனர் இதனைத் தடுத்து கிராமங்களிலே அதி சிறந்த கல்வியினை வழங்குவதற்காக அரசினால் அதிரடி நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.அதன் ஒரு அங்கமாகவே “அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை” என்ற திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது. இதன் ஊடாக பிரதேச செயலர் பிரிவுகளில் ஒவ்வொரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றது.இதன் ஊடாக எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் மாணவர்கள் நகரங்களை நோக்கிச் செல்வது அரசினாலேயே தடை செய்யப்பட உள்ளதாக அறியக் கிடக்கின்றது.இந்த வரப்பிரசாதத்தினை எமது கிராமம் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகள் இடம்பெற்றதையும் எமது பாடசாலைகள் இரண்டாம் கட்டத் திட்டத்திற்குள் தள்ளப்பட்டதும் யாவரும் அறிந்ததே இதற்கும் எம்மவர்களின் போட்டியும் பொறாமையுமே முதற் காரணங்களாக காணப்பட்டமையும் யாவரும் அறிந்த விடயமே.

தற்போது அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் பணிப்பாளராக காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த கந்தையா பத்மானந்தன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.அவருடன் வடமாகாணக் கல்விப் புலத்தில் கைதேர்ந்த ஓய்வு நிலை மாகாணக் கல்விப்

பணிப்பாளர் உயர்திரு ப.விக்னேஸ்வரன் அவர்கள் காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பதும் எமது பகுதிப் பாடசாலை களை நகரப் பாடசாலைகளுக்கு இணையாக மாற்றுவது இலகுவான விடயமாக அமைந்துள்ளது. ஆனால் தாமே காரைநகரின் கல்வியாளர்கள் எனக் கூறி கல்வியாளர்களை மட்டம் தட்டி பதவி மோகத்தில் திளைத்திருப்போர் இதற்கு இடம் தருவார்களா காரை மண்ணின் பிஞ்சுகள் தொடர்ந்தும் இவர்களால் இடர்களை எதிர்நோக்குவார்களா என்பதனைக் காலம்தான் சொல்ல வேண்டும்.இவ்வாறானவர்களுக்கு சில ஊது குழல்களும் ஒரு சில புலம்பெயர் நம்மவர்களுமே எண்ணை ஊற்றி வருவதும் கசப்பான உண்மையாகும்.

இன்று காரைநகரில் 13 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.அவற்றில் 12 பாடசாலைகள் ஆரம்பப் பிரிவினைக் கொண்டுள்ளன.இங்கு 2053 மாணவர் கள் கல்வி பயின்று வருகின்றனர்.காரைநகரின் சனத்தொகையில் 20 வீதமானவர்கள் மாணவர் களாகக் காணப்படுகின்றனர்.இவர்களில் 639 மாணவர்கள் இன்னும் நான்கான்டுகளுக்குள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையைத் தாண்ட உள்ளனர்.

**கனடா காரை கலாசார மன்றத்தின் பங்களிப்பு**

முதன் முதலில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த ப.விக்னேஸ்வரன் அவர்களை கனடா விலிருந்து கந்தப்பு அம்பலவாணர் அவர்கள் தொடர்புகொண்டு காரைநகர் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு கனடா வாழ் காரைநகர் மக்களால் எவ்வாறான உதவிகளை மேற்கொள்ள முடியும் எனக் கேட்டிருந்தார்.அவ்வாறான உதவிகளை நீங்கள் சொன்னால் கனடா காரை கலாசார மன்றத்தின் ஊடாகச் செயற்படுத்த முடியும் எனத் தெரிவித்திருந்தார். இதற்கமைய திரு ப.விக்னேஸ்வரன் அவர்கள் அன்றைய காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த ஸ்ரீவிக்னேஸ்வனை தொடர்பு கொண்டு காரைநகர் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டத்தினை ஏற்பாடு செய்து ஆய்வு செய்த போதே தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்துமாறு கேட்டனர்.அதற்கமையவே தரம் 5 மாணவர்களுக்கு பயிற்சிப் பரீட்சையினையும் விசேட கருத்தரங்கி னையும் நடாத்தத் தீர்மானித்து திரு கந்தப்பு அம்பலவாணர் ஊடாக கனடா காரை கலாசார மன்ற நிதி உதவியுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஊடாக இந்த முயற்சியினைத் தொடக்கி வைத்தார் இதனை பல ஆண்டுகாக மேற்பார்வை செய்து ஊக்குவித்தும் வந்தார்.

அதே போன்று கடந்த ஆண்டு அனைத்து அதிபர்களையும் தரம் 5 வகுப்பாசிரியர்களையும் திரு ப.விக்னேஸ்வரன் அவர்கள் அழைத்து ஆலோசனை கேட்ட போது எமக்குப் பரீட்சைகள் கூடிவிட்டன மாகாணம் மாதாந்தம் பரீட்சை நடத்துகின்றார்கள் அதே போல வலயம் நிறையப் பரீட்சைகளை வைக்கின்றார்கள் அமைச்சு பரீட்சைகளை வைக்கி ன்றது.அத்துடன் கனடா காரை கலாசார மன்றத்தின் நிதியிலிருந்தும் நாங்கள் தினக்குரல், ஆறுதல், அன்பழகன், உள்ளிட்டபல்வேறு தரப்பினரிடம் பயிற்சி வினாத்தாள்களைப் பெற்று மாணவர்களுக்கு பரீட்சைப் பயிற்சிகளை நடத்தி வருகின்றோம் எனவே பிரபல ஆசிரியர்களின் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து தந்தால் அதுவே மாணவர்களின் சித்தி வீதத்தினை அதிகரிக்க வாய்ப்பாக அமையும் எனத் தெரிவித்தனர். இதற்கமைய இம்முறை ஐந்திற்கு மேற்பட்ட கருத்தரங்குகளை யாழ்ற்ரன் கல்லூரியில் அதிபர்கள் திரு வே.முருகமூர்த்தி,விமலாதேவி விஸ்வநாதன் ஆகியோரின் உதவியுடன் ஆசிரியர்களின் முழுப் பங்களிப்புடன் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இதற்காக மாகாண வளவாளர்காக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள்,பிரபல ஆசிரியர்களான வே.அன்பழகன்,ந.சுந்தரேசன் மற்றும் யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரிய குழாம் என 15 இற்கும் மேற்பட்ட வளவாளர்கள் கலந்து கொண்டு கருத்தரங்குகளை நடாத்தினர் இதன் பயனாக இவ் ஆண்டு சித்தி வீதம் 82 வீதமாக அதிகரித்துள்ளது. இத்துணை பயிற்சிகளை வழங்கவதற்கும் கனடா காரை கலாசார மன்றத்தின் நிதியே பேருதவியாக இருந்தது என்பதனை அறிந்து அனைவரும் மகிழ்வடைந்தனர். அத்துடன் மன்றத்திற்குத் தமது பாராட்டுதல்களையும் வழங்கி மகிழ்ந்தனர். தொடர்ந்தும் மன்றத்தின் பேருதவியினால் சித்தி வீதம் 82 இல் இருந்து மேலும் அதிகரித்து சித்தி இன்மை இல்லாத காரைநகரை உருவாக்க அதிபர் ஆசிரியர் பெற்றோர்களுடன் இணைந்து காரைநகர் அபிவிருத்திச் சபையும் கனடா காரை கலாசார மன்றமும் தொடர்ந்து பாடுபட வேண்டும் என காரைவாழ் பெற்றோர்கள் வேண்டிநிற்கின்றனர்.அத்துடன் கடந்த ஆண்டு கனடா காரை கலாசார மன்றம் தொடக்கிவைத்த பாடசாலை களுக்கான ஒரு மில்லியன் திட்டமானது மேற்

சொன்னது போன்று மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் ஒரு ஏணிப்படியாக அமைந்தது இதனை பன்னிரு பாடசாலைகளின் அதிபர்களே எடுத்துரைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்ட நிதியின் வட்டிப் பணமானது ஒழுங்கு தவறாது வருடத்தில் இரு தடவை பாடசாலை அபிவிருத்திச் சபைக் கணக்கிற்குச் செல்கின்றது இதன் மூலம் மிகத்திட்டமிட்டு கற்றல் செயற்பாட்டிற்கு இந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

**சாதனை கனவு வேதனையான காதை**

இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு கடந்த 25 வருடங்களின் பின்னர் முதன் முதலில் காரை மண்ணின் ஒரு பாடசாலையிலிருந்து தோற்றும் மாணவர்களில் வெட்டுப் புள்ளியைத் தாண்டிய சித்தியை அதிகமானோர் சுவீகரித்துக் கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு பல்வேறு தரப்பினரிடம் காணப்பட்ட போதிலும் அந்த எதிர்பார்ப்பில் மண் விழுந்த சம்பவம் மிக வேதனையானது.அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. கற்றல் செயற்பாட்டில் பெரும் பங்கு வகிக்கும் வகுப்பறை தொலைந்து போனதே இதன் காரணம்.இது திட்டமிட்டுத் தொலைக்கப்பட்டதா அல்லது விதியின் விளையாட்டா யார் அறிவார்.

2012ம் ஆண்டில் மீண்டும் இப் பாடசாலைக்கு உயிர் கொடுத்தவர்கள் இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றிய பன்னிருவரே கடந்த நான்கான்டுகளாக கட்டட வசதிகளின்றி இடர்பட்ட போதிலும் அதிகாரிகளுக்கான பேரிரக்கம் இவ்வாண்டு ஆரம்பத்திலேதான் எங்கிருந்தோ வந்தது.கடந்த நான்காண்டில் இல்லாத அக்கறை இவ்வாண்டு ஏற்பட பாடசாலை வளாகத்தைத் துறந்து ஏதிலிகளாக்கப்பட்ட சோகம் அவர்களை ஆட்கொண்டது.

புதிய கட்டடம் அமைப்பதற்காக மிகவும் பாழ் அடைந்த கட்டடம் இடித்தழிக்கப்பட்டது.(அப்போதேஅந்தப் பிஞ்சுகளின் கனவும் அழிக்கப்படுகின்றது என்பதனை யார் அறிவார்)அதனால் வகுப்பக்களை நடாத்த அயல் வீடு வீட்டுக்காரனின் அனுமதியுடன் துப்பரவு செய்யப்பட்டு அங்கு வகுப்புக்கள் நடாத்த நாள் குறிக்கப்படுகின்றது.ஆனால் யாருடைய துாண்டுதலின் பெயரிலோ அந்த வீட்டுக்காரன் மறுக்க் ஆலய வீதிக்கு அண்மையில் ஓர் வீட்டிற்கு வகுப்பறை நகர்கின்றது.அங்கும் மிகப் பதிந்த சீற்றடித்த பந்திக்குள் சுட்டெரிக்கும் வெய்யில் கொடுமையால் தொடர் கற்றல் செயற்பாட்டு நடவடிக்கை முன்னெடுக்க முடியாமல் புது வீதிச் சந்திக்கு அருகாமையில் வகுப்பறை நகர்கின்றது.அங்கும் கற்றலுக்கு உகந்த சூழல் இன்மையால் மீண்டும் பாடசாலை வளாகத்திற்குள் பிரவேசிக்கின்றது வகுப்பறை. அங்குள்ள சிறிய வகுப்பறைக் கட்டடத்திற்குள் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.அருகில் 120 அடி நீளமான வகுப்பறைக் கட்டடத் தொகுதி வானலாவ எழுந்தது.அதில் தினமும் பல தொழிலாளர்கள் பணியில் அமளி துமளியாக ஆர்வத்தோடு இருந்த மாணவர்களின் புலன் அங்கு சாய்கின்றது.அழகான கட்டடம் அமைவை பார்த்து ரசிச்ச மாணவர்கள் பரீட்சையில்........... ஏனைய பாடசாலைகளுக்கு பாடசாலை சமூகத்தின் கோரிக்கைக்கு ஏற்பவே திட்டங்கள் ஆனால் இங்கு அதிகாரிகள் திணிப்பு பேசிப் பயனின்றியும் ஊரார் பழிக்கஞ்சியும் பெற்றோர் மௌனம்.சாதனைக் கனவோடு மீள் எழுச்சி கண்ட பாடசாலை இன்று பன்னிருவரின் தியாகத்தால் கட்டடங்களால் நிமிர்ந்து நிற்கின்றது.காரையின் பல திக்ககளில் இருந்தும் பட்டாம் பூச்சிகளாக இன்று பறந்து வந்துள்ள நூறு பிஞ்சுகளின் எதிர்காலம் ஒளிமயமாக வேண்டும் அவர்களாவது பன்னிருவரின் கனவினை நனவாக்க கல்விச் சமூகம் ஒத்துழைப்பு வழங்குமா போதிய ஆசிரிய வளமின்றி அடிப்படை வசதிகள் குன்றி இடர்மேல் இடர் வந்த போதிலும் சித்தி வீதம் 92ஐத் தாண்டியது மருதடியான் மகத்துவமே அதற்காகப் பாடுபட்ட ஆசிரியத் தெய்வங்கள் என்றும் நன்றிக்குரியவர்கள் அந்த மகவுகள் அவர்களை என்றும் மறந்திடார்கள். அவர்கள் வாழ்வு ஒளிமயமாகும் அவர்களின் தியாகம் ஒரு போதும் வீண்போகாது அவர்கள் வாழ்வில் ஒளி வீசும் அவர்கள் எதிர்காலம் பிரகாசிக்கும்.

**கனடா காரை கலாசார மன்றத்தினால் இவ்வாண்டு காரைநகரில் செயற்படுத்திய திட்டங்களில் சில**

01) கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் கோட்டப் பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காரைநகர் அபிவிருத்திச் சபை நூலகத்தில் வட மாகாணக் கல்வியமைச்சின் ஓய்வு நிலைப் பிரதிச் செயலரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான உயர்திரு ப.விக்னேஸ்வரன்

தலைமையில் இடம்பெற்றது.

வடகடல் நிறுவனத்தின் தலைவரும் சபையின் போஷகருமான தியாகராசா பரமேஸ்வரன்,யாழ் பல்கலைக் கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை யோகரத்தினம்,காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தின் அறங்காவலரும் முன்னாள் காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவருமான மகாராணி சோமசேகரம்,ஊரி அ.மி.த.க.பாடசாலை யின் முன்னாள் அதிபர் இ.சிறிதரன் அவுஸ்ரேலிய காரை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும் பொறியியலாளருமான எஸ்.மகாதேவன் ஆகியோர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கினர்.

02) கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனை யுடன் சர்வதேச விதவைகள் தின நிகழ்வு காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத் தில் நடாத்தப்பட்டது.

காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ் மாவட்டச் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் திருமதி ச.பரமானந்தம்,காரைநகர் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வ.நிதர்சன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியதுடன் காரைநகர் பிரதேசத்தில் உள்ள விதவைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதற்கான ஆலோசனைகள் மற்றும் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொள்வதற் கான வழி வகைகள் தொடர்பாகவும் விளக்க மளிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட சுமார் நூறு பயனாளிகளுக்குத் தென்னம் பிள்ளைகளும் இன்றைய நிகழ்வில் வழங்கப்பட்டது.

கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனை யுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில்காரைநகர் அபிவிருத்திச்சபைஉறுப்பினர்கள்,அங்கத்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

03)கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனை யுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களுக்கான நான்கு கல்விக் கருத்தரங்கு இவ்வாண்டு யாழ்ற்ரன் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரன் தலைமை யில் இடம்பெற்ற கல்விக் கருத்தரங்கில் காரைநகரில் உள்ள 11 ஆரம்பப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 160 மாணவர்கள் இக் கல்விக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்

கடந்த 7 வருடங்களுக்கு மேலாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கல்விக் கருத்தரங்குகள் மற்றும் ஊக்குவிப்புப் பரிசில்கள் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு முதல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் கல்விக் கருத்தரங்குகளை நடாத்தி அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

04) தாய் தந்தையை இழந்த மாணவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு தொடர்ச்சியாக மாதாந்தம் வங்கப்பட்டு வருகின்றது.



# கோவளம் வெளிச்ச வீடு விபரணம்

தகவல் - எஸ்.கே.சதாசிவம்




கோவளம் வெளிச்ச வீட்டின் நூறாவது ஆண்டு பூர்த்தியை (மே, 2016) முன்னிட்டு இக்கட்டுரை மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது.

கப்பல் திசை மாறாது வருவதற்காக துறைமுகத்தில் ஒரு குறிகாட்டியாக இருக்கும் வெளிச்சவீடானது பண்டைய காலத்தில் இருந்தமை பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் “இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கம்” என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பண்டைய காலத்தில் எவ்வாறு கலங்கரை விளக்குகள் அமைக்கப்பட்டன என கடியலூர் உருத்திரங்கண்ணனார் சிறப்பாக்கூறியுள்ளார்.

“வானம் ஊன்றிய மதலைபோல
ஏணிசாத்தியை வேற்றருந்சென்னி
வின்பொரநிவந்த வேயாமாடத்து
இரவின்மாட்டிய இலக்குசுடர் நெகிழி
உரவுநீர் அழுவத்து ஒருகலம் கரையும்துறை.
(பெரும்பாண் 346 – 356)

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது கலங்கரை நிலையம் உயரமான கட்டடமாக இருந்தது. அது சாந்து பூசப்பட்டு தளவரிசை உள்ளதாய் இருந் தது மட்டுமல்லாமல் அதில் தீயிட்டு எரித்தனர் அல்லது உச்சியில் ஏறிவிளக்கு வைப்பதற்கு ஏணிப்படிகள் இருந்தன என கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்ட விதம் கூறப்படுகின்றது.

வெளிச்ச வீடுகள் பழந்தமிழ் இலக்கியங்களில் கலங்கரை விளக்கம், தீபஸ்தம்பம், கோரி, எனப் பலவாறு அழைக்கப்பட்டது.

கலங்கரை விளக்கம் கடலை மூடிய இருள் படலத்தை கிழித்துஎங்கும் பேரொளிபரப்பி கடலில் செல்லுகின்ற மரக்கலங்களுக்குத் துறைமுகம் இருக்கின்ற இடத்தையும் அவை செல்ல வேண்டிய வழியையும் காட்டுவன என ஈழத்துச்சிதம்பரபுராணம் இயற்றிய புலவர்மனி சோ. இளமுருகனார் குறிப்பிட்டுள்ளார். கலம் – மரக்கலம், கலங்கரைவிளக்கம்:– கடலில் பயணம் செய்யும் மரக்கலங்களுக்கும் ஏனைய கப்பல்களுக்கும் கரையினைக் காட்டும் வெளிச்சம்.

Light House:
A tower or other building that contains a strong light to warn and guide ships near the coast.
கடல்வழி அல்லது உள்ளூர் நீர் நிலைகளின் போக்குவரத்திற்கு உதவும்வகையில் அமைக்கப்படும உயர்ந்த ஒடுங்கியகோபுர (Tower) வடிவிலான அல்லது அதுபோன்ற அமைப்புடைய கட்டிடங்களின்



உச்சியில் அமைக்கப்பட்ட விளக்குகள் (எரிவாயு, மின்சாரம், எண்ணெய் போன்றன ஒன்றினால் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இயக்கப்படுவது) வில்லைகள் மூலம் வெளிப்படும் ஒளி (Light) நீண்ட தூரம் பிரகாசிக்ககூடிய வல்லமைஉடையது. இவ்வாறு வெளிப்படும் வெளிச்சம் கடல் வழி அல்லது உள்ளூர் நீர் நிலைகளில் பயணம் செய்யும் கப்பல்களுக்கு பயணம் செய்யும் சரியான திசையைக்காட்டும் திறன்கொண்டவை. இவ்வாறான அம்சங்கள் பொருந்திய கட்டிடங்கள் வெளிச்சவீடுகள் என்று அழைக்கப்படும்.

வெளிச்சவீடுகள் ஆபத்தான கற்பாறைகள், கூட்டமாகச் செல்லும் பெரியமீன் இனங்கள் என்பனவற்றைக் காட்டி கப்பல்கள் துறைமுகங்களுக்குள் நுழைய வழிகாட்டுவன. ஒரு காலத்தில் அதிகமாக பயன் பாட்டில் இருந்த வெளிச்ச வீடுகள் பராமரிப்பதற்கான செலவீனங்கள் காரணமாகவும் மின் அணு முறையிலான கப்பல் செலுத்தும் முறைமை (Electronic navigational systems), புவிசார் இடமறியும் கருவி (Global position system G.P.S) அறிமுகம் செய்யப்பட்டமையினாலும் வெளிச்ச வீடுகளின் செயற்பாடுகள் குறைவடைந்தன.

தற்போது வடபுலமீனவர்களும் புவிசார் இடமறியும் கருவியை (G.P.S) உபயோகித்துதம் தொழில்சார் நடவடிக்கைகள மேற்கொள்கின்றனர். வெளிச்ச வீடுகள் ஆகாயவிமானங்களுக்கும் சரியான திசை காட்டுவதிலும் உதவியாக இருந்தன.

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெரும்பாலான வெளிச்சவீடுகள் கட்டப்பட்டன. இந்த வெளிச்சவீடுகள் இம்பீரியல் வெளிச்சவீட்டு சேவையினால் (Imperial Light house service) இயக்கப்பட்டும் பராமரிக்கப் பட்டும் வந்தன.

சிலவெளிச்ச வீடுகளைப் பார்த்துக்கொள்வதற்கான அலுவலர்கள் (Keepers) பணியாற்றினர். வரலாற்றில் காலனித்துவ ஆட்சியாளரின் குறியீடாக வெளிச்சவீடுகள் உள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இலங்கைக் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட வெளிச்ச வீடுகள் படிப்படியாக கையளிக்கப்பட்டு 1976 இல் முழுமையான கையளிப்பு நிறைவுபெற்றது. இலங்கைத்துறைமுக அதிகாரசபையின் (Sri lanka Port Authority – SLPA) கட்டுப்பாட்டின் கீழ் பெரும்பாலான வெளிச்சவீடுகள் கொண்டு வரப்பட்ட போதிலும், மிகுதியான வெளிச்சவீடுகள் இலங்கைக் கடற்படையின் (Sri lanka Navy) கட்டுப்பாட்டின் கீழ்உள்ளன. இலங்கையில் 25 வெளிச்ச வீடுகள் இருக்கின்ற போதிலும் 16 வெளிச்சவீடுகள் செயற்படும்நிலையில்உள்ளன.இவற்றில்நான்குசர்வதேசவெளிச்சவீடுகள்.



**கோவளம்வெளிச்சவீடு**

காரைநகரில் நீண்டு உயர்ந்து வரிசை வரிசையாக அமைந்த பயன் தருதென்னை மரத்தோப்புக்கள் நிறைந்த கோவளம் எனப்படும் வளமான குறிச்சியில் கோவளம் வெளிச்ச வீடு அமைந்துள்ளது. பார்ப்பவர் கள் பிரமிக்கத்தக்க கம்பீரமான தோற்றம்மிக்கது. கோவளம் வெளிச்சவீடு தொடர்பான ஆவணங்களில் Kovilan Point Light house is a Light house on the island of Karaitivu in northern Srilanka. எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவளம் வெளிச்ச வீட்டிற்கான நிலையம் 1899ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1916 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கோவளம் வெளிச்ச வீடு 30 மீற்றர் (98 அடி) உயரம்

உடையது. சதுர வடிவிலான அடித்தளமும் உருளை வடிவிலான கோபுரமும் முருகைக்கற்களால் (Coral Stones) ஆனது. வெளிச்சவீட்டின் 15 அடி 6 அங்குலம் உடைய சதுர வடிவிலான அடித்தளத்தின்மீது 18 அடி உருளைவடிவிலான 69 அடி உயரமுடைய கோபுரத் தின் மேற்பகுதியில் கண்ணாடியில் வடிவமைக்கப்பட்ட விளக்கு அமைக்கப்பட்டுள்ளது.. அடித்தளத்தில் இருந்து விளக்கு வரையிலான உயரம் 86 அடி 7 அங்குலம்.



வெளிச்ச வீட்டின் கிழக்கு வாயில் ஊடாகச் சென்று உட்பகுதியில் இரும்பினால் அமைக்கப்பட்டுள்ள ஏணிகள் மூலம் வெளிச்சவீட்டின் பலகணிக்குச் சென்று அடையலாம். வெளிச்ச வீடு பாதுகாப்பாக செயற்படுநிலையில் இருந்த பொழுது மேலே ஏறிச்சென்று பார்வையிடக்கூடியதாக இருந்தது. வெளிச்ச வீட்டின் உச்சியில் இருந்து கடற்பரப்பையும் காரைநகரையும் பார்வையிடக் கூடியதாகப் பலகணி (ழிநடு பயடடநசல) அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 30 செக்கனுக்கு 2 வெள்ளைஒளியைப் பாய்ச்சும்இவ்ஒளி 11 கடல்மைல்தூரத்திற்குச்செல்லும் (Range 11 Nautic miles) செல்லும். முதலாவது வெளிச்சம் காரை தீவின் வடமேற்கு மூலையில் இருந்து ஒரு கம்பத்தில் இருந்து காட்டப்பட்டது. வெளிச்ச வீடு செயற்படுநிலையில் இருந்த போது எரிவாயுவின் மூலம் ஒளியூட்டப்பட்டது. இவ்வெளிச்ச வீடு ஒளிரும் பொழுது கசூரினாக்கடற்கரையில் நின்று சிறப்பாக அவதானிக்க முடியும். வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் பாதுகாவலர்கள் (Keepers) கடமை நிமித்தம் வசித்த விடுதியும் காணப்படுகின்றது.

காரைநகர் வெளிச்ச வீடு காரைநகரின் பழம் பெருமையின் சின்னமாக அல்லது வரலாற்று அடையாளமாக (Symbol of old glory or landmark) தொல்பொருள் பெறுமதிமிக்கதான (Archeological value) வரலாற்றுச்சிறப்பு மிக்க (Historical importance) கட்டுமானமாகும்.

இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கின்ற பாக்குடாவில் ஒருமுனையை இந்த வெளிச்சவீடு அடையாளப்படுத்தும். காரைநகரில் வெளிச்சவீடு அமைக்கப்பட்டமையால் பூகோளரீதியில் நமது கிராமத்தின் கோவளம் முனைபெற்றுள்ள முக்கியத்து வத்தை அறியக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள பலமான இலங்கைக் கடற்படையின் பிரசித்தமான கடல்வழிப்பாதையில் பெறுமதியானபெரிய அளவிலான வகிபாகத்தைகாரைநகர், காங்கேசன் துறை, பருத்தித்துறை வெளிச்சவீடுகள் கொண்டுள் ளன.

இவ்வூரின் வடமேற்கு கடற்கரையில் வானுற உயர்ந்த பேரொளி உடையதாய் "உயிர்களின் அறியாமை யாகிய இருளை நீக்கிசெல் கதிகாட்டும்திருவருள் போல" ஆழ் கடலில் செல்லும் மரக்கலங்களுக் கெல்லாம் அடையும் துறைக்கு வழிகாட்டுவதாய் அமைந்திருக்கின்றது ஒரு கலங்கரை விளக்கம் எனஈழத்துச்சிதம்பரம் எனும் நூலை எழுதிய சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்துச்சிதம்பரபுராணத்தை இயற்றிய புலவர்மணி சோ. இளமுருகனார் காரைநாட்டின் வடமேற்குப் பக்கமாக கடலை அடுத்துள்ள பகுதி கோவளம் எனப்படும். கி.பி. 1284 இல் மாக்கோப்போலோ சீனத்திலிருந்து மேலைத் தேசங்களுக்கு போகும் வழியில், யாழ்ப்பாணத்துறைமுகம் ஒன்றிலே தாம்தங்கியதாகவும் அதன் பெயர் கோளம் என்றும் அங்கே சீனம் முதலிய தேசங்களிலிருந்து கப்பல்கள் வணிகம் செய்யும் பொருட்டு வந்து போயின என்றும் கூறியுள்ளார். இவர் கூறிய கோளம் என்ற பெயரே கோவளம் எனமாற்றமடைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். இது உறுதிப்படுத்தப்படுமாயின் காரைநகர் கோவளம் கடற்கரையைக் குறிக்கும்.

கால் நூற்றாண்டுக்கும் மேலாக ஒளிபரப்பாது அமைதியாக ஒளிராது இருக்கும் காரைநகர் வெளிச்ச வீட்டினை புனரமைப்பதற்கான பணிகள் வெற்றி பெற்று வெளிச்ச வீடுகடல் பயணத்திற்கு ஒளி வீசுவது மாத்திரமன்றி காரைநகர் கால்நூற்றாண்டுக்கு முன் இருந்த நிலமைக்கு மீண்டும் திரும்பிடவும் ஒளிபரப்பவேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

காங்கேசன்துறை வெளிச்சவீடு 1893ம் ஆண்டு கட்டப்பட்டது. 22 மீற்றர் உயரமுடைய இவ்வெளிச்ச

வீடு கவனிப்பாரற்று உடைந்து விழும் நிலையில் காணப்பட்டது. எதிர்காலசந்ததியினர் யாழ்ப்பாணத் தின் பழம் பெருமையை அறிந்து கொள்வதற்கான அடையாளச்சின்னமான இவ்வெளிச்சவீட்டை இலங்கை காலாட்படையின் பொறியியலாளர்களும் (Sri lanka Army Engineers) 5 வது பொறியியல் சேவைபடைப் பிரிவினரும் (5th Engineer Services Regiment of sri lanka Army) தொல் பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ்புனருத் தாரணம் செய்தார்கள். வெளிச்சவீட்டின் மேலே திறந்த பலகணி (open gallery)அமைக்கப்பட்டுள்ளது. விளக்கின் (Lantern) உச்சி தொப்பி போன்ற அமைப்பினாலான செம்புகலந்த (Copper mixed) உலோகத்தால் மூடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக்குடா நாட்டின் வரலாற்றில் கடல் சார்ந்த செயற்பாட்டில் பிரித்தானியா கலைஞர்களினதும் பொறியியலாளர் களினதும் முயற்சிகளை நினைவு கொள்வனவாக இவ்வெளிச்சவீடு அமைந்துள்ளது.

காரைநகரின் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வரலாற்றுச்சிறப்பு அம்சங்கள் கோவளம் பகுதியில் உண்டு. ஈழத்துச் சிதம்பரபுராணத்தை இயற்றிய புலவர்மணி சோ. இளமுருகனால் கோவளம் பற்றி பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார் "கரை மருங்கின்றெங்கடந்த நெடுங்காடு" கடற்கரை யோரத்தில் தென்னைகள் நெருங்கி வளர்ந்த பெரிய தென்னந் தோட்டங்கள் நிறைந்த இடம் கோவளம் எனக்குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலேயர், ஐரோப்பியர் போன்ற வெள்ளை இனத்தவர் பலர் குதிரை வண்டிகளில் வந்து கோவளம் கடற்கரைப்பகுதியில் சில நாட்கள் தங்கிச்சுகம் பெற்றுச்செல்வர் என்று அந்நாட்டவர் கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அந்திமாலையில் வானம் செக்கர் படர்ந்த அழகான செவ்வானமாகக் காணப்படும். இக்காட்சியை மேற்குக் கடற்கரைகளில் காணலாம். ஞாயிறு சிலகாலம் மகரக்கோட்டிலும் (மார்கழி 21) சில காலம் கற்கடகக் கோட்டிலும் (ஆனி 21) நிற்றலாய் ஒருதன்மையாய் காணமுடியாது. கோவளக்கடற்கரையில் இரண்டு காலங்களில் இக்காட்சியை காணக்கூடியதாக இருக்கும். இக்காட்சியை எக்காலத்திலும் ஒரே தன்மையிற்காணக்கூடியவாறு அழகு அழியாமல் உயிர்ப்புள்ள ஓவியமாக கோவளத்தின் மேற்கே உள்ளவானத்தில் பிரமதேவன் தீட்டிவைத்தான் எனக்குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் உயர் அந்தஸ்தைப்பெற்றவர்கள் தாங்கள் வாழும் காலப்பகுதியில் பிரபல்யம் பெற்ற வசதிகளைக்கொண்ட வீடுகளை அமைப்பது வழக்கம். ஒருநூற்றாண்டுக்கு அண்மிய காலப்பகுதிக்குரிய பெரிய பல்வேறு அமைப்பிலான வீடுகள் கோவளம் பகுதியில் காணப்படுகின்றன. அவ்வக்காலப் பகுதிக்குரியனவும், அவரவர் அந்தஸ்தை விளக்குவ னவாகவும், அவரவர் குடும்பத்தின் வரலாற்றுப் பதிவுகளை கொண்ட பல வீடுகளைக் கண்ணுற்ற பொழுது காத்திரமான அப்பெரிய மனிதர்களின் சமூகப்பெறுமானத்தை உணரக்கூடியதாக இருக் கின்றது. பல எண்ணிக்கையான தென்னை மரங்கள், பனைமரங்கள், வேறு பயன் தருமரங்களும் இன்றைய மழை காலத்தில் செழிப்பாக மகிழ்வுடன் தங்கள் சொந்தக்காரர்களின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துகாத்திருக்கின்றன.

**பேப்பர்சுவாமிகள்**

காரைநகர் பற்றிக்குறிப்பாகக் கோவளம் குறிச்சி பற்றி எழுதும் போதுபேப்பர்சுவாமிகளின் வரலாறு எழுதா விடின் அவ்வெழுத்து முற்றுப்பெறாத ஒன்றாகவே அமையும். பேப்பர்சுவாமிகள் எனமக்கள் மத்தியில் பிரபல்யம் மிக்க இவர் வீரபாகு வேலுப்பிள்ளை முருகேசு(ஏ.ஏ. முருகேசு) எனும் இயற்பெயர் கொண்டவர். கடலலைகள் தாலாட்டும் இயற்கை எழில் மிக்க அமைதியான சூழலில் ஆச்சிரமம் அமைத்து தவவாழ்வு வாழ்ந்த ஞானி பேப்பர்சுவாமிகள் தன்னை நாடிவருபவர்களின் எண்ண ஓட்டங்களைச் சொல்லும் வல்லமை மிக்க ஞானம் கைவரப்பெற்றவர். தன் இறுதிக்காலத்தில் நண்டுப்பாழி எனும் குறிச்சியில் தவவாழ்வு வாழ்ந்து சமாதியானவர். ஞானியர் சித்தர் வரிசையில் நமது கிராமத்திற்குப் பெருமை சேர்த்தவர் வரிசையில் முதன்மையானர்.

பாரத தேசத்தின் தேசபிதா மகாத்மா காந்தியின் மரணத்தை எதிர்வு கூறியதன் மூலம் இந்திய ஆட்சியாளர்களின் கவனத்தை தன்பால் ஈர்த்தவர். சுவாமிகள் அனுப்பிய தபால் அட்டை ( Post Card) இந்தியாவிலுள்ள நூதனசாலை (Museum) ஒன்றில் பேணப்படுவதாகச் செய்திகள் இருந்த போதிலும் உறுதி செய்து கொள்ள முடியவில்லை. இலங்கையில் இந்தியாவின் உயர்ஸ்தானிகராகப்பணியாற்றிய திரு.ஏ.ஏ. கிரி தனது பதவிக்காலத்தில் பலதடவைகள் பேப்பர் சுவாமிகளின் தரிசனத்திற்காக வருகை

தருபவர். பின்னர் இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் ஜனாதிபதியாகப் பணியாற்றியவர். பேப்பர் சுவாமிகளுக்கு சமஷ்கிருதமொழியில் இருந்த ஆர்வத்தை அறிந்த காஷ்மீர் முதலமைச்சர் சுவாமிகளுக்கு ஒரு தொகுதி சமஷ்கிருத நூல்களை அன்பளிப்புச்செய்தார்.

பாரத தேசத்தின் சுதந்திர போராட்ட வீரர் து.ஊ குமரப்பா நோயுற்ற வேளை சுவாமிகளின் ஆச்சிர மத்தில் தங்கியிருந்து ஆசி பெற்றுகுணமாகியவர். திரு.குமரப்பா நோயின் நிமித்தம் தனியான குடிசையில் வசிக்க வேண்டிய தேவை இருந்தமையால் தனியாக குடிசையில் வசித்தார்.

அவர் வாழ்ந்த குடிசை ஆச்சிரமத்திற்கு அயலில் இருந்தது. அக்குடிசைகுமரப்பா குடிசைஎன அழைக்கப் பட்டது. (Kumarappa Cottage) யாழ்ப்பாணத்து சட்டத்தரணிகள், கல்விமான்கள் அரச அதிகாரிகள் எனப்பலதரப்பட்ட மனிதர்கள் சஞ்சலம் மிக்க வேளைகளில் சுவாமிகளின் ஆசிபெறுவதற்காக ஆச்சிரமத்திற்காக வருகை தருவது வழக்கம்.

இங்கிலாந்து தேசத்து நாளேடுகளில் நிருபராக, கட்டுரையாளராக பணியாற்றியவர். செழுமையும், புலமையும் மிக்க ஆங்கில எழுத்தாற்றல் பேப்பர் சுவாமிகளுக்கு அரசியல்வாதிகள் மத்தியிலும் உயர் அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்தது.

அமெரிக்காவின் தாவரவியற் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் விஞ்ஞான பாட செயலமர் வுக்கு யாழ்ப்பாணக்கல்லூரிக்கு வருகை தந்த போது பேப்பர் சுவாமிகளை சந்திப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். பேப்பர்சுவாமிகளைத் தரிசித்த பின் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆசிரியர் ஒருவருடன் பின்வருமாறு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதாக தெரிவித்தார் அவ்வாசிரியர்.

சுவாமிகள் தான் அறிந்திராத பலபத்திரிகைகள் பற்றி தன்னிடம் வினவியதாகவும் வேறும் பலமுக்கியமான உலக விடயங்களைப்பற்றி தன்னிடம் தெரிவித்தமை தன்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கியதாகவும் உங்கள் கிராமத்தில் மிகப்பெறுமதியான சுவாமிகள் வாழ்ந்து கொண்டிருப்பதையிட்டு நீங்கள் பெருமை அடைய வேண்டும் எனக்குறிப்பிட்டதாக அவ்வாசிரியர் தெரிவித்தார்.
சுவாமிகளிடம் ஆங்கிலம், கணிதம் பயின்ற இளைஞர் கள் பிற்காலத்தில் அப்பாடங்களைத் திறமையாகக் கற்பித்து பெருமையடைந்தார்கள். ஒருநாள் ஆச்சிரமத்தில் உணவுப் பொருட்கள் இல்லாமையை சுவாமிகளிடம் தெரிவிக்கத் தயங்கி நின்ற மாணவர்களைப் பார்த்து சுவாமிகள் உணவுப் பொருட்கள் பாதி வழிக்கு வந்துவிட்ட உணவைச் சமைப்பதற்கான பாத்திரங்களை தயார் செய்யுமாறு கூறினார்.

சிறிது நேரத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபரின் வாகனம் ஆச்சிரமத்திற்குத் தேவையான சமையல் பொருட்களுடன் வந்து சேர்ந்தது. சுவாமி களின் அருட்பேற்றை ஏற்கனவே உணர்ந்திருந்த மாணவர்கள் இச்சம்பவத்தின் பின் மேலும் பக்தியுடன் நடக்கலாயினர்.

ஆச்சிரமத்தில் அதிக எண்ணிக்கையான தோசைகள் சுடவேண்டிய தேவை இருந்தமையால் சுடுபவர், தோசைசுடும் பொழுது ஈரப்பசுமைமிக்க துணியை நெஞ்சில்கட்டி அடுப்பின் செம்மையில் இருந்து தனனைப் பாதுகாப்பது வழக்கம்.

பேப்பர் சுவாமிகள் சமாதி அடைந்த பின்னர் 1990 வரை சுவாமிகளின் சமாதியை தரிசிக்க வருகை தருகின்ற வலிகாமத்தைச் சேர்ந்த தியாகராஜ சுவாமிகள் பேப்பர் சுவாமிகளின் சமாதி காரைநகருக்கு பெரிய அளவிலான பாதிப்புக்கள் ஏற்படாமல் பாதுகாக்கும் சக்தி உடையது எனக்கூறினார்.

திரு. ஆ. தியாகராஜா அவர்கள் காலையில் அஞ்சல் அலுவலகத்திற்கு சென்று சுவாமிகளுக்கு உரிய கடிதங்களைப் பெற்ற வந்து சுவாமிகளிடம் கையளித்த பின்னரே பாடசாலைக்குச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தவர். சுவாமிகள் நயினாதீவு நாகபூசணி அம்பாளை குலதெய்வமாக வணங்கியவர். அடிக்கடி நயினாதீவு சென்று அம்பாளை வழிபடும் வழக்கத்தைக் கொண்டவர்.

திருஞானசம்பந்தசுவாமிகள் திருவீழிமிழலையில் வீற்றிருந்த இறைவன் புகழ்பாடி பதிகங்கள் பாடியவர். பேப்பர் சுவாமிகள் வாழ்ந்த ஆச்சிரமத்திலும் திருவீழிமரம் இருந்தது. திருவீழி மரத்தின் கீழ் இருந்து சுவாமிகள் ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபடுவது வழமை.

அவரின் கலந்துரையாடல்கள் சிந்தனைகள்யாவும்

இம்மரத்தின் கீழே நடைபெற்றது. இம்மரத்தின் கீழ் அமர்ந்து செயற்படுவதன் மூலம் ஆன்மீக இன்பத்தை அனுபவித்தார். ஆன்மீக உள்ளுணர்வுகள் வெளிப் படுவதற்கு இம்மரநிழல் சுவாமிகளுக்கு உந்து சக்தியாக அமைந்தது.

நான் பத்து வயது சிறுவனாக இருந்த போது தந்தையாருடன் பேப்பர் சுவாமிகளின் ஆச்சிரமத்தி ற்குச் சென்றிருக்கின்றேன். அமைதியான சூழலில் இருந்த ஆச்சிரமம் நினைவில் இருக்கின்ற பொழுதும் எழுதுவதற்காக எதுவும் ஞாபகத்தில் இல்லை.

பேப்பர் சுவாமிகளின் காலத்தில் இளைஞர்களாக இருந்து இன்று வரலாற்றுப்பதிவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெரியவர்களும் சுவாமிகளைப் பக்தி சிரத்தையுடன் நினைவில் வைத்திருக்கின்ற பெரியவர்களும் இன்றும் சுவாமிகளின் சமாதிக்குச் சென்று தரிசனம் பெற்றுக்கொண்டிருக்கின்ற பெரியவர் களும் மேற்கூறிய அனைத்தையும் தெரிவித்தமைக் காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். இப்பெரியார்களின் கருத்துக்கள் பெறுமதி மிக்க பேப்பர் சுவாமிகள் வரலாற்றை இன்றைய இளம் சமூகம் அறிந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது.

**பேப்பர் சுவாமிகளின் சமாதி அமைந்துள்ள நண்டுப்பாழி**





**இந்தியாவின் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள கோவளம்**

இந்தியாவின் தென்மாகாணங்களில் ஒன்றான கேரள மாநிலத்தில் (ஏவயவந) திருவனந்தபுரத்திற்கு 17 கிலோ மீற்றர் தொலைவில் கோவளம் எனும் கிராமம் அமைந்துள்ளது. அமைதியான மீன் பிடிக்கிராமமாகக்



காணப்பட்ட கோவளம் பகுதி 1930 களில் சுற்றுலாமையமாக அறிமுகப்படுத்தப்பட்டு 1970 களில் சுற்றுலாத்துறையில் பிரபல்யமான இடத்தைப் பெற்றுக்கொண்டது. திருவாங்கூர் மேன்மை தங்கிய மகாராணி கோவளம் பகுதியில் உள்ள கற்பாறை ஒன்றில் அரண்மனை ஒன்றினை அமைத்ததன் மூலம் கோவளம் பிரபல்யம் பெற்றது.

இந்தியாவுக்கு வருகை தரும் மேற்கத்தைய நாட்டு சுற்றுலாபயணிகள் மத்தியில் கோவளம் கடற்கரை மிகவும் பிரசித்திபெற்றது.

திரு. எஸ்.கேசதாசிவம் (ஓய்வு பெற்ற விளையாட்டு துறை ஆசிரியர், கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்

காரை விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் கோல் காப்பாளர் என்ற நிலையில் அறிமுகமானவர். கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளின் பயிற்றுவிப்பாளர். தொழிற்சங்க அலுவலராக பணியாற்றியவர் கல்விக்கட்டமைப்பில் பலபதவிகளை வகித்தவர். ஜேர்மன் தொழில் நுட்ப ஒத்துழைப் பகத்தின் (German Technical Cooperation GTZ) வடகிழக்கு மாகாண செயற்றிட்டங்களில் கடமையாற்றியவர்.


ஆதாரம்: NOTES ON JAFFNA
KARAINAGAR INFO
1 – 1916 - PAGE 106
2 – 1829 - MARCH 18, PAGE 15
3 – 1811 – FEB 1, PAGE 10
4 – 1919 – JAN 15 PAGE 118



# கலாநிதி ஆ.தியாகராசாவின் வாழ்வும் செய்தியும்

ஆடம்பரமற்ற தோற்றம், கம்பீரமான நடை, தூய்மையான நெஞ்சம், துணிவு கொண்ட எண்ணம், எடுத்ததை முடிக்கும் ஆற்றல், எளிமையான வாழ்வு என்பனவற்றை அணிகலனாகக் கொண்டு மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டென பணியாற்றிய பெருந்தகை கலாநிதி. ஆ. தியாகராசா அவர்கள் 24. 05. 1981 இல் பின்னிரவில் அரசியல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு புறப்பட்ட வேளையில் மரணத் திரைக்குள் மறைந்தார்.

மலேசியாவில் புகையிரத இலாகாவில் கடமையாற்றிய திரு. ச. ஆறுமுகம், அமிர்தவல்லி தம்பதியருக்கு கனிஷ்ட புத்திரனாக தியாகராசா 1916 ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆந் திகதி மலேசியாவில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை மலேசியாவில் ஆரம்பித்து எட்டு வயதில் இலங்கை வந்து இரண்டு ஆண்டுகள் பேரன் பேத்தியுடன் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றார்.

தியாகராசா பத்து வயதுச் சிறுவனாக இருக்கும் போது இந்தியாவில் கவியரசர் ரவீந்திரநாத் தாகூர், சாந்திநிகேதனில் நிறுவிய விவ பாரதி பல்கலைக் கழகத்தில் கல்வி கற்பதற்கு அவரை அவரது தந்தையார் அனுப்பிய போதும் வயதுக் குறைவு காரணமாக சென்னை அடையாறு கலாத்தேத்திரத்தில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்றார்.

1932 இல் சீனியர் பரீட்சையிலும் 1934இல் இன்ரர் சயன்ஸ் பரீட்சையிலும், 1936இல் பீ. ஏ. பரீட்சையிலும் 1938இல் எம். ஏ. பரீட்சையிலும் சித்தி பெற்றார். 1938ஆம் ஆண்டு எம். ஏ. பட்டம் பெற்றதன் பின்னர் 1940ஆம் ஆண்டு வரை சிங்கப்பூர் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்றார். 1941இல் எம். லிற் பட்டத்தைப் பெற்று இலங்கை திரும்பிய தியாகராசா காரைநகர் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை ஏற்றார். கல்வி பயிலும் காலத்தில் ஹாக்கி அணி வீரர், சங்கீதக் கலையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

திரு. தியாகராசா இந்தியாவில் கல்வி பயின்ற காலமானது தன்னலம் துறந்து பூசல்களை விடுத்து மக்களும் தேசபக்தர்களும் தேச விடுதலைக்காக அண்ணல் காந்திஜீ தலைமையில் அணி வகுத்துப் போராடிய காலம் ஆகும். இந்திய நாட்டில் பெற்ற அனுபவங்களுடன் தன் கிராமத்து மக்களைத் தரிசித்தார்.

1942இல் ஆடம்பரம், நவநாகரீகம் துளியும் கிடையாத திரு. சிவகுருநாதன் அவர்களின் மகள் மகேஸ்வரியை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். தியாகராசாவின் கருத்தறிந்து நடந்து கணவரின் வெற்றிக்குப் பக்க பலமாக இருந்தார் மகேஸ்வரி.

காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த திரு. ஏ. கனகசபை பி. ஏ. அவர்கள் 1945 இல் ஓய்வு பெற திரு. ஆ. தியாகராசா 16.04.1946இல் அதிபரானார். இவர் பதவி ஏற்ற ஆரம்ப காலத்தில் பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. காரைநகர் இந்துக் கல்லூரியில் சிரேட்ட பாடசாலை சான்றிதழ் வகுப்புகள் வரை இருந்தமையினால் ஏனைய பாடசாலைகளில் 5ஆம் வகுப்புடன் கல்வியை இடைநிறுத்திய மாணவர்கள் அனைவரும் காரைநகர் இந்து கல்லூரியில் அனுமதி கோரினர். 1915இல் பழைய டிஸ்பென்சரிக்கு எதிரே ஆரம்பிக்கப்பட்டு ஆங்கில மொழி மூலம் 7ஆம் ஆண்டு வரை கல்வி வழங்கிய அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையின் (சாமி பள்ளிக்கூடம்) மாணவர் தொகை வெகுவாகக் குறைவடைந்தமையால் 1945இல் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் காரைநகர் மேற்குப் பகுதியில் வசித்த மாணவர்களும் காரைநகர் இந்துக் கல்லூரியில் அனுமதி கோரினர். கல்லூரிக்கு அனுமதி கோரி இருந்த மாணவர் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தமை மிகப் பெரிய சவாலாக அமைந்தது.

மாணவர்களுக்கு அமர்வதற்கு வாங்கு மேசையோ இடவசதியோ இருக்கவில்லை. கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை. எந்தவித பாகுபாடும் இன்றி மாணவர்களுக்கு அனுமதி வழங்கினார். மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பிப்பதற்காக ஆறு அறைகளைக் கொண்ட கட்டடத்தைக் கட்டினார். பெற்றோர்களின் உதவியுடன் மேசை வாங்குகளையும் இந்துக் கல்லூரி சபையினரின் அனுசரணையுடன் நல்ல அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களையும் பெற்று மாணவர்களின் கல்விக்கு ஆவன செய்தார்.

அமெரிக்கன் மின் பாடசாலை (சாமி பள்ளிக்கூடம்) மூடப்பட்டதன் காரணமாக காரைநகர் மேற்குப் பகுதி மாணவர்களின் நலன் கருதி சைவ ஆங்கிலப் பாடசாலையை நிறுவ வேண்டும் என காரைநகர் மேற்கைச் சேர்ந்த பெற்றோர்கள், கல்வியாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் தீர்மானித்தனர். இப்பாடசாலையை ஆரம்பிப்பதற் கான ஓர் ஆலோசனைக் கூட்டம் திரு. தியாகராசாவின் தலைமையில் அவர் இல்லத்தில் நடைபெற்றது. பாடசாலை யைத் தாமதமின்றி ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அதிபராக கடமையாற்ற திரு. க. கனகசபையும் ஆசிரியர்களாகக் கடமையாற்ற திருவாளர்கள் கு. பொன்னம்பலம், மு. சீவரத்தினம் ஆகிய மூவரும் இந்துக் கல்லூரியில் இருந்து விடுவிக்கப்பட்டனர். திரு. தியாகராசாவை யாழ்ரன் கல்லூரி அதிபராக பதவி ஏற்குமாறு பலர் வற்புறுத்தியும் தான் பொறுப்பேற்ற காரைநகர் இந்துக் கல்லூரி முன்நிலை எய்த வேண்டும் என்பதற்காக அக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். யாழ்ரன் கல்லூரியும் காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இணையாக முன்னேற்றம் அடைந்தது.



அதிபர் ஏ. கனகசபை காலத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடசாலை சிரேட்ட வித்தியாசாலை யாகி காரைநகர் இந்துக் கல்லூரி என்ற பெயரைப் பெற்றது. சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் (Senior School Certificate), மெட்ரிகுலேன் (Matriculation) ஆகிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தூரநோக்குடன் செயற்பட்ட திரு. கனகசபை, திரு. ந. நடராஜா K. C. அவர்களைப் பாடசாலைக்கு முன்பாக உள்ள காணியில் ஒரு மண்டபம் அமைத்து அன்பளிப்பு செய்யுமாறு வேண்டினார். காரைநகர் பாடசாலை களின் சுகாதார வார விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. ந. நடராஜா அவர்கள் தனது காணியில் மண்டபம் அமைத்து அன்பளிப்பு செய்வதாக உறுதியளித்தார். இவர்களது மேன்மை மிக்க பணி அனைவராலும் பாராட்டப்பட்டது.

திரு. நடராஜா அவர்களின் திடீர் மரணத்தின் பின்னர் அவரின் பாரியார் திருமதி. நடராஜா அவர்களால் அறுபதினாயிரம் ரூபாய் செலவில் நடராஜா ஞாபகார்த்த மண்டபம் அமைக்கப்பட்டது. மண்டபம் அமைக்கும் பணியில் திரு. தியாகராசா செயற்பட்டார். மாப்பாணஊரியைச் சேர்ந்த திரு. வீ. தம்பிப்பிள்ளை அவர்கள் இப்பணியில் சேர்ந்து உழைத்தார். 19. 08. 1950இல் கௌரவ நீதி அமைச்சர் Dr. L. A. ராஜபக்ஷ அவர்களால் நடராஜா ஞாபகார்த்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழக துணை வேந்தர் Dr. ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களால் அமரர் நடராஜாவின் உருவப் படம் திரை நீக்கஞ் செய்யப் பட்டது. திரு. தியாகராசா பாடசாலைக்குப் பின்புறமாக இருந்த காணியையும் திருமதி. தங்கம்மா நடராஜா அவர்களிடம் தர்ம ஆதனமாகப் பெற்று விளையாட்டு மைதானத்தை அமைத்தார்.

இரசாயனம், பௌதீகம், விலங்கியல், உயிரியல் ஆகிய பாடங்களுக்கான தனித்தனியான ஆய்வுகூடங்களை அமைத்தார். இவை உயர் தரத்தில் பேணப்பட்டு செயற்படும் ஆய்வுகூடங்களாக விளங்கின. 1955இல் மனையியல் ஆய்வுகூடம் திருமதி. என். ரி. சம்பந்தன் அவர்களாலும் 1956இல் புதிய நூலகம், புவியியல் அறை என்பன மனேஜர் திரு. ரி. முத்துசாமிப் பிள்ளை அவர்களாலும் திறந்து வைக்கப்பட்டன.

1948இல் காரைநகர் இந்துக் கல்லூரி என்ற பெயரில் சஞ்சிகை வெளியிடப்பட்டது. 1953, 1956, 1959ஆம் ஆண்டுகளில் “சயம்பு” எனும் கல்லூரி சஞ்சிகை வெளியிடப்பட்டது. 1950 ஆகஸ்ட் 19ஆந் திகதி முதல் 21ஆந் திகதி வரை மூன்று நாட்கள் கல்லூரியின் வைர விழாவும் 1963இல் பவள விழாவும் 1968இல் முத்து விழாவும் கொண்டாடப்பட்டன.

1919ல் ஸ்தாபிக்கப்பட்ட காரையூனியன் மலாயா சங்கத்தின் உறுப்பினர்கள் காரைநகருக்கு வருகை தரும் பொழுது பாடசாலைக்கு உதவிகள் வழங்கினர். திரு. தியாகராசா மலேசியா சென்று பழைய மாணவர்களிடம் நிதி சேகரித்து "சயம்பு ஞாபகார்த்த" கட்டடத்தை அமைத்து கீழ் மாடியில் வகுப்பறையும், மேல் மாடியில் நூலகத்தையும் ஆரம்பித்தார். 16.05.1959 ல் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. கட்டிட நினைவு பளிங்கு கல்லில் நிறுவுநர், நிர்வாகி, சமய ஆசாரசீலர் சயம்புவின் தன்னலமற்ற சேவையை நினைவு கொள்வதற்காக இம்மண்டபம் அமைக்கப்பட்டது. என பொறிக்கப்பட்டுள்ளது. இம்மண்டப அமைப்பு பணியில் அமரர் தியாகராசாவுடன் மாப்பானாவூரியை சேர்ந்த திரு. த. அருளையா ஈடுபட்டு உழைத்தார்.

இம்மண்டபத்தின் மேற்கு புறத்தில் நூல் நிலையத்தை அமைக்க அரசினால் வழங்கிய நிதியை விட மேலதிக நிதி தேவைப்பட்ட பொழுது நன்கொடையாளரிடம் நிதி பெற்று நூல் நிலையத்தையும் அதனோடு சேர்ந்த வகுப்பறை தொகுதியையும் அமைத்தார். அதிகரிக்கப் பட்ட பௌதீக வளங்களும் கல்லூரியின் அனைத்து இணைபாட செயற்பாடுகளும் ஒழுங்கமைக்கப் பட்டவாறு உரிய காலங்களில் நடைபெறுவதையும் பண்புசார் கல்வி வழங்குவதையும் அமரரின் மேற்பார்வை உறுதி செய்தது.

திரு. தியாகராசாவின் சேவைக்காலத்தில் உயர்தர வகுப்புக்கள் (H.S.C) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அன்றைய காலகட்டத்தில் யாழ்ப் பாணத்தில் சிறப்புத்தர அதிபர்கள் உள்ள பாடசாலை களில் காரைநகர் இந்துக் கல்லூரியும் ஒன்றாகும். கல்வித் திணைக்களத்தால் உயர் பதவிகள் வழங்கப்பட்ட போதும் அவற்றினை நிராகரித்து தான் வளர்த்த, நேசித்த கல்லூரியின் தரத்தை சிறப்புத் தரத்துக்கு (IAB) உயர்த்தினார். யாழ் மாவட்டத்திற்கு புகழ் சேர்த்த கல்லூரிகளின் வரிசையில் காரைநகர் இந்துக் கல்லூரியையும் உயர்த்திய பெருமைக்கு உரியவர். திரு. தியாகராசா. சிறப்புத்தர பதவியில் உயர் நிலை சம்பளம், ஓய்வூதியம், என்பவற்றுக்கு காத்திராது 02. 04. 1970 இல் ஓய்வு பெற்று மாணாக்கர் பணியை நிறைவேற்றி மக்கள் பணி ஆற்ற ஆரம்பித்தார்.

பண்புசார் கல்வியை வழங்கவும் மாணவர் ஆற்றலை வெளிப்படுத்தவும் கற்பதைக் கற்று அதற்குத் தக நின்று, கற்றது செலச் சொல்லும் தகைமை உடைய ஆற்றல் மிகு புகழ் பூத்த ஆசிரியர்களை ஆசிரியர் குழாத்தில் இணைத்துக் கொண்டார். ஆங்கில புலமை மிக்க திரு. ந. சபாரத்தினம். (யாழ் இந்துக் கல்லூரி அதிபர், வடமாகாண ஆசிரிய சங்கத் தலைவர் – NPTA, அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் – ACTU, பத்திரிகை ஆசிரியர், நூல் ஆசிரியர்), திரு. ஏ. எஸ் கனகரத்தினம் பீ. ஏ. (அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திரு. மு. வைத்திலிங்கம் (ADEN) (சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர், சேர் பொன்னம்பலம் இராமநாதனின் வாழ்க்கை வரலாற்று நூலை இரண்டு பாகங்களாக ஆங்கில மொழியில் எழுதியவர்). திரு. மு. இளையதம்பி (இலங்கை, உலக, ஐரோப்பிய, வரலாற்று நூல்களின் ஆசிரியர், சைவசித்தாந்த தத்துவ நூல் ஆசிரியர்), திரு. மா. வைத்தியநாதன் BSc (வைத்திஸ்வரா வித்தியாலய அதிபர், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர்), திரு. மு.மு. நடராஜா (இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர் பதவி பெற்று வட்டுக்கோட்டை தொகுதியின் பிரபல பாடசாலை களின் அதிபராக கடமையாற்றியவர்) திரு. ஆ. திருநீலகண்டசிவம் (சென்னைப் பல்கழைக்கழகத்தில் ஆங்கிலப் பாடத்திற்கு தங்கப் பதக்கம் பெற்றவர். காரைநகர் கொத்தணி அதிபராக கடமையாற்றியவர். வடமாகாண ஆசிரிய சங்கத்தின் அலுவலர்) செல்வி இரத்தினேஸ்வரி இராஜரட்னம் (அதிபர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) திருவாளர்கள் ஆர் கந்தையா. எம் பொன்னம்பலவாணர். வே. சுப்பிரமணியம். ஆகியோர்களின் அர்ப்பணிப்புமிக்க நீண்டகால சேவையும் பாடசாலையின் வளர்ச்சியில் காத்திரமான பங்கை வகித்தது.

திரு. தியாகராசா அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களை அரவணைத்து சென்றமை கல்லூரியின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. கல்விப் போதனையிலும் பண்புடனும் பணிவுடனும் செயற்பட ஒழுக்கம் மிக்க மாணவரை உருவாக்குவதிலும் அல்லும் பகலும் அமரர் தியாகராசாவின் உள்ளம் ஈடுபட்டிருந்தது. திறமை மிக்க உதாரண புருராக நிருவாகத்தை நடாத்தி மாணவர் சமுதாயம் சீரிய எதிர்காலத்தை எதிர்கொள்ள கலங்கரை விளக்கானார். கல்வித் திணைக்களத்தின் காத்திரமான பணிகளை பெறுவதற்கு அதற்குப் பொருத்தமான பெற்றோர்களை கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி கருமம் ஆற்றினார். கல்லூரி உள்ளக நிர்வாகத்தில்

கல்வித்திணைக்கள அதிகாரிகள் தலையிட எத்தனித்த சமயத்தில் தன்னைப் பணியிலிருந்து விடுவிக்குமாறு வேண்டிநின்றார்.

சமூகம் எதிர்பார்த்த கல்வியை வழங்கியமையால் நகர்புற பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்வது அரிதாக காணப்பட்டது. கற்றல் கற்பித்தல் சுமூகமாக நடைபெற்றமையால் பிரத்தியேக வகுப்புக்களுக்கு செல்ல வேண்டும் என்ற தேவை மாணவருக்கு இருக்கவில்லை.

நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்தரு பணியை ஆற்றக்கூடிய பயனுறு பிரஜைகளை உருவாக்குவதே பாடசாலைகளின் பணி என்பதற்கு செயல் வடிவம் கொடுத்தவர் அமரர் தியாகாராஜா. அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் கடமையாற்றிய அதிபர் இன்றும் நினைவு கூறப்படுகின்றார் என்றால் அமரர் தியாகராசா "வரலாற்று அதிபர்" எனும் பெயருக்கு பொருத்தமான பண்புகளைக் கொண்டிருந்தமையே காரணமாகும்.

**அமரர் கலாநிதி. தியாகராசாவின் அரசியல் வாழ்வு**

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்காக பல அமர்வுகளை 1944இல் நடாத்திய சோல்பரி ஆணைக்குழு முன்பாக இலங்கைக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி தனது கருத்தை முன்வைத்தார். 1952ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் சுயேட்சை அபேட்சகராக (சமவுரிமை கருத்துக்களை முன்வைத்து) ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்டு இரண்டாவது இடத்தைப் பெற்றார். 1956 ஆண்டு தமிழ் மக்களின் அரசியற் செயற்பாடு தொடர்பாக ஒப்பீட்டு ஆய்வு (Comparative Study) செய்து தனது கருத்தை வெளியிட்டார். 1970ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி நடைபெற்ற ஏழாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டை தொகுதியில் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டு பாரளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இருந்தவர். இப்பல்கலைக்கழகம் 1974இல் பரமேஸ்வரா கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது. திரு. தியாகராசாவின் வேண்டுகோளுக்கு அரசாங்கம் மதிப்பளித்து யாழ்ப்பாண கல்லூரியில் (Jaffna College) விஞ்ஞானப் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாண வளாகத்தின் இன்னொரு பிரிவை ஆரம்பித்தது.

இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் சாலை, கிராமிய வைத்தியசாலை, தபாலகம், மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம், புதிய பாதைகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவை, வேணன் அணைக்கட்டு, வேதரடைப்பில் இருந்து முல்லைப் புலவு நோக்கியும் சாம்பலோடை நோக்கியும் அணைக்கட்டுகள் என்பனவற்றை அமைத்தார். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் அலுவலகம் (சுற்றுலா பணிமனை – Circuit Office) ஒன்றை செயற்பட வைத்தார். காரைநகர் பாடசாலைகளின் கல்வி, பௌதீக வள அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

காரைநகர் இந்துக் கல்லூரியில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் செலவழிக்கப்படாத பணத்தை வருடத்தின் இறுதி மாத ஆரம்பத்தில் பெற்று வருடம் முடிவடைவதற்கு முன்னர் பல நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை உரிய காலங்களில் நிறைவேற்றியமைக்காக அதிபர் திரு. மு. மு. நடராஜா யாழ்ப்பாண மாவட்ட 1AB பாடசாலைகள் அதிபர்களின் சந்திப்பில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. W. D. C. மகதந்தில்ல அவர்களால் பாராட்டப்பட்டார். புகழ் பெற்ற ஆசிரியர்களுக்கு நியமனங்கள், இடமாற்றங்கள் வழங்கப்பட்டு ஆசிரியர் வளம் உயர் நிலை அடைந்தது. க.பொ.த (உ.த) வகுப்புகளில் 150இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். பொறியியல், மருத்துவம், என்பனவற்றுடன் ஏனைய பீடங்களுக்கும் மாணவர்கள் அதிகளவில் அனுமதி பெற்றனர். வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம், மாவடி, ஊர்காவற்றுறை போன்ற அயற் கிராம மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் காரைநகர் இந்துக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றனர். அமரர் திரு. தியாகராசா கல்வி மேல் கொண்ட பற்று உறுதிக்கு அதிபர் திரு. மு. மு. நடராஜா செயல் வடிவம் கொடுத்தார்.

காரைநகருக்கு ஒரு வைத்தியசாலை நிறுவுவதற்கான ஆலோசனைக் கூட்டத்திற்கு திரு. தியாகராசாவின் இல்லத்திற்கு வருகை தருமாறு அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்கள் அழைக்கப்பட்டனர். பழைய டிஸ்பென்சரியில், வாரிவளவு, துறைமுகம், ஆலக்கன்றடி போன்ற இடங்களில் வைத்தியசாலை அமைக்கப்படல் வேண்டும் எனக் கருத்துக்கள் முன்வைக்கப்

பட்டன. திரு. தியாகராசா அமையப் போகும் வைத்தியசாலை காரைநகருக்கு அயலில் உள்ள கிராம மக்கள் சிகிச்சை பெற, வெளியூரில் இருந்து வருகை தரும் வைத்தியசாலை அலுவலர்களுக்கும் காரைநகர் மக்கள் அனைவருக்கும் மத்திய இடமான மகப்பேற்று நிலையத்தை வைத்தியசாலையாக தரம் உயர்த்துதல் பொருத்தமானது எனத் தெரிவித்தார். அரசின் உதவியை எதிர்பாராது காரைநகர் வர்த்தகப் பெருமக்களின் உதவியுடன் வைத்தியசாலையின் ஆரம்ப வேலையை ஆரம்பிப்பதாகவும் தெரிவிக்கப் பட்ட போது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. காரைநகர் வர்த்தக பெருமக்களின் உதவியுடன் கட்டப்பட்ட வைத்தியசாலையின் செயற்பாடுகள் மிகக் குறுகிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு அமரரின் பதவிக் காலத்தில் ஆண், பெண் வார்ட், வெளி நோயாளர் பகுதி என்பன ஆரம்பிக்கப்பட்டன. அமரர் திரு. தியாகராசா அபிவிருத்தி பணிகளில் மற்றவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து, கருத்தொற்றுமை பெற்று கருமமாற்றியமையால் அவரின் செயற்றிட்டங்கள் வெற்றி பெற்றது மாத்திரமல்லாது காலத்தால் அழியாது நிலைத்து நிற்கின்றன.

வட்டுக்கோட்டை தொகுதியில் ஏனைய கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பாக அப்பகுதி பெரியோர்களின் கருத்துக்கள்:

வைத்தியசாலைகள் வளமுறச் செய்தீர்
கல்விச்சாலைகள் கவினுற அமைத்தீர்
மாதிரி கிராமங்கட்கு மின் ஒளி
நல்கி மிளிர்ந்திடச் செய்தாய்
குடி தண்ணீர் குறித்துமே யீந்து
தண்ணளி சுரக்கும் தயாளனாகினாய்
பலநோக்குச் சங்கங்களை பண்புற நடத்தி
சிறப்புறச் செய்தனை, சீர்சால் செம்மால்
விவசாயத்தினை விஸ்தரித்தாய்

திரு. ச. விசுவநாதர்
இளைப்பாறிய ஆசிரியர்

மின் விஸ்தரிப்பு, பாடசாலைத் தர உயர்வு, அஞ்சலகத் தர உயர்வு, மருத்துவ மனை விரிவாக்கம், கலாசார மண்டப அமைப்பு, நீதிமன்ற விஸ்தரிப்பு, நலவியற் பாதுகாப்பு போன்ற வேலைகளை சங்கானைப் பகுதியில் செயற்படுத்தினார்.

திரு. எஸ். வைரமுத்து
தலைவர், பட்டின சபை
சங்கானை

இதுவரை இருள் மண்டிக் கிடந்த கிராமங்கள் மின் ஒளி பெற்று மிளர்கின்றன. போக்குவரத்து வசதியற்றுக் கிடந்த மூலை முடுக்குகள் எல்லாம் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டன. கல்விக்கூடங்கள் புனரமைக்கப்பட்டன. பாலர் கல்வி அபிவிருத்தி, விவசாய நலத் திட்டங்கள், நெசவு நெய்தல், எண்ணெய் வடித்தல் என்பனவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

திரு. வ. செல்லத்துரை – தலைவர்
திரு. சி. சின்னத்துரை – செயலாளர்

**கிராம அபிவிருத்தி சங்கம் பிராம்பத்தை**

வட்டுக்கோட்டை தொகுதியின் அரசியல், பொருளாதாரம், தொழில், விவசாயம், கல்வி, கலாசாரம், போக்குவரத்து, சுகாதாரம், குடிநீர் விநியோகம், மீன்பிடி முதலிய சகல துறை அபிவிருத்திக்கும் திரு. தியாகராசா வழங்கிய சாதனைகள் அவருக்கு முந்திய அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களும் சாதித்தவற்றிலும் பார்க்க கூடுதலானவை, சிறந்தவை, உயர்ந்தவை என்றால் மிகையாகாது.மாதகல் கந்தசாமி

1979ஆம் ஆண்டு யூலை மாதம் சுயேட்சை அபேட்சகராக போட்டியிட்டு பாராளுமன்றம் செல்லவில்லை.

தேர்தலுக்குப் பின்னர் இந்தியா சென்று கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு இலங்கையும் தென் ஆசியாவின் பொருளாதார ஒத்துழைப்பு (ளுசை டயமெய யனெ ஞழரவா யுளயைெ நுஉழழெஅஉை ஊழழிநசயவழைெ) என்ற நூலை எழுதினார். இந்நூலுக்கு முகவுரை எழுதிய யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் “கலாநிதி தியாகராசா இந்த நூலில் இலங்கையின் பொருளாதார பிரச்சினைகளை பிராந்திய ரீதியான பார்வையில் பகுப்பாய்வு செய்துள்ளார். பொருளாதார ஒத்துழைப்பிற்கான தென் ஆசியா சம்மேளனம் (South Asian Association for Regional Cooperation – SAARC) உதயமாவதற்கு முன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நூலில் கருத்திற் கொள்ளப்பட்டவை சார்க் அமைப்பு இலக்குகளாக இருப்பதனால் இந்நூல் சரியான திசையில் எடுக்கப்பட்ட முதல் படி எனக் குறிப்பிடலாம். இந்தப் பின்னணியில் கலாநிதி தியாகராசாவின் ஆய்வு இருப்பதால் முக்கியத்துவம் பெறுகின்றது. அவர் மிகக் கவனத்தையும் ஆக்கபூர்வமான பரிசீலனைகளையும் விடயத்தின் எல்லா அம்சங்களிலும் செலுத்தியுள்ளார்.

கலாநிதி. தியாகராசாவின் புலமை மிக்க அனுகு முறையும், அரசியல் அனுபவங்களுடன் இணைந்த செயற்பாடு மிக்க இந்நூல் பொருளாதார வல்லுனர் களுக்கும் அரசியல் விஞ்ஞானிகளுக்கும் ஆர்வம் ஊட்டுவதாக அமையும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

1981ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளராக யாழ் மாவட்ட சபை தேர்தலில் யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தியை விருத்தி செய்வதற்கான இலக்குடன் போட்டியிட்டதனால் அவரது உயிர் பறிக்கப்பட்டது.

அமரரின் இறுதிக் கிரியையின் போது அஞ்சலி செலுத்தவும், இரங்கல் உரை நிகழ்த்தவும், அன்றைய பிரதமர் திரு. ஆர். பிரேமதாச உட்பட பல அமைச்சர்களும் முக்கிய பிரமுகர்களும் அன்னாரின் இல்லத்திற்கு வருகை தந்தனர். பிரதமர் பிரேமதாச அவர்கள் தனது உரையில் தான் காரைநகர் கிராமத்தின் வழி நெடுகிலும் சோகமே உருவான மக்கள் கூட்டத்தைக் கண்டதாகவும் அதற்குரிய காரணத்தை அமரரின் இல்லத்தை கண்ணுற்ற போது உணர்ந்ததாகவும் தெரிவித்தார். ஏழு ஆண்டுகள் அரசாங்கத்தை ஆதரித்த பாராளுமன்ற உறுப்பினர் வாழ்ந்த இல்லத்தை பார்த்த போது மக்களின் சோகத்திற்கான காரணம் உண்டு என்பதை புரிந்து கொண்டதாக தெரிவித்தார்.

அன்னாரின் பூதவுடல் காரைநகரைச் சுற்றி எடுத்து வரப்பட்டு வலந்தலைச் சந்திக்கு கிழக்கே அன்னாரின் சிந்தனையில் உருவான வேணன் அணைக்கட்டுக்கு மேற்கே மழை நீர் ஏந்தி தேக்கும் பகுதியில் சிதை மூட்டப்பட்டு அக்கினியுடன் சங்கமமானார்.

வேணன் அணைக்கட்டுக்கு நீர் ஏந்தும் பிரதேசம் கடல் மண்ணும் களி மண்ணும் சேர்ந்த மணற் தன்மையுடைய பிரதேசம் என்பதால் புற்கள் முளைப்பதற்கு ஏது நிலை எதுவும் இல்லை. அப்பகுதியில் எந்தவோர் இடத்திலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு புற்கள் முளைத்திருக்கவில்லை ஆனால் அவர் தகனஞ் செய்யப்பட்ட இடத்தில் புற்கள் முளைத்திருக்கின்றமையை காரைநகர், பொன்னாலை, தாம்போதி வழியே செல்லும் மக்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இது பூமாதேவி தன் உத்தம புத்திரனை நினைவில் வைத்திருப்பதற்கான சான்றோ!!

ஒருவர் உள்ளத்தில் உறைந்து நிற்கும் உணர்வுகளை, சிந்தையில் தோன்றும் கனவுகளை செயலில் காணலாம். அமரர் தியாகராசாவின் இல்லத்திற்கு சென்றவர்கள் விருந்தினர்களை வரவேற்கும் வரவேற்பு மண்டபத்தில் இரு படங்களை காணத் தவறியிருக்க மாட்டார்கள். அடிமைத் தளையில் கட்டுண்டு இருந்த பாரத தேசத்துக்கு விடுதலை வேள்வியை நடாத்திய அகிம்சா மூர்த்தி காந்திஜி, அமெரிக்க நாட்டின் சமூக விடுதலைக்காக போராடி வெள்ளை மாளிகையை அணிசெய்த அதிபுகழுக்குரிய ஆபிராகம் லிங்கன் ஆகியோரின் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. காந்தியையும் லிங்கனையும் போல் மானிட வர்க்கத்திற்கு பணி செய்து இவர்களுக்கு ஏற்பட்ட நிகழ்வுகள் போல இவர்கள் வழி பரமசிவன் பாதங்களை சென்றடைவேன் எனும் செய்தியை உணர்ந்திருந்தாரா? என்று எண்ணத் தோன்றுகின்றது. "ஊழி பெயரினுந் தாம் பெயரார்" என்ற முதுமொழிக்கு இலக்கணமானவர்.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லியவண்ணம் செயல்.

என்ற வள்ளுவர் வாக்கிற்குச் சவால் விடுத்து சொல்லவல்லவனும் சொன்னதைச் செய்யவல்லவனும் யான் என்பதை செய்து காட்டியவர்.

அண்ணல் காந்திஜியை சந்தித்த பத்திரிகை நிருபர் தாங்கள் இவ்வுலகிற்கு விடுக்கும் செய்தி என்ன எனக் கேட்ட பொழுது "என் வாழ்வு என் செய்தி" எனத் தெரிவித்தார்

"My Life is My Message"

அமரர் கலாநிதி ஆ. தியாகராசாவின் வாழ்வும் அவரது செய்தியாகும்.

அமரர் தியாகராசாவால் ஆக்கப்பட்ட ஆங்கில நூல்கள்:

1. Economic Development of Ceylon
2. India and India Lessons to Learn
3. Tea industry of Ceylon (Research Study)
4. Sri Lanka and South Asian Economic Cooperation
   A conceptual and institutional framework for accelerated development
   Thesis submitted for Degree of Doctor of Philosophy – The University of Madras

கட்டுரையாளர்: எஸ். கே. சதாசிவம் – கலாநிதி ஆ. தியாகராசாவின் மாணவனும், அவர் பணிகளில் இணைந்து செயற்பட்டவரும் ஆவார்.

# தத்துவகலாநிதி பண்டிதமணி சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள்



காரைநகர் திருவூரில் சைவப்பண்பாட்டின் எழுச்சிக்கு வித்திட்ட ஆலயங்களுள் சிறப்புப் பெறுவது ஈழத்துச் சிதம்பரம் என வழங்கப்பெறும் காரைநகர் சிவன் கோவிலாகும். இதனை திண்ணபுரம் சுந்தரேசுவரர் ஆலயம் எனவும் அழைப்பர். இக் கோயில் காரைநகர் கோயில்கள் அனைத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. இத்தகைய பெருமை மிக்க கோயிலின் பண்பாட்டுப் பின்னணியில் தொடர்புபெற்ற ஒரு சிறந்த சிவாச்சாரிய மரபில் வந்தவர்தான் மூதறிஞர் தத்துவகலாநிதி சிவத்தமிழ்வித்தகர் பண்டிதமணி சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள்.

காரைநகருக்கு அணிசெய்து வரும் அறிஞர் வரிசையில் தனக்கென ஓரிடத்தை வகுத்துக்கொண்ட சிவத்திரு க. வை. குருக்களின் வாழ்வு கனிந்த வாழ்வாகும். குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை அழுக்காறின்மை, அவாவின்மை ஆகிய எண்குணங்களுக்கு இருப்பிடமாக விளங்கியவர் அந்தணச்செம்மல் சிவத்திரு க. வை. குருக்கள் அவர்கள். சுருங்கக் கூறின் சிவத்திரு க. வை. குருக்கள் அவர்கள் வள்ளுவனார் வகுத்துக் கூறிய மனிதநேய உண்மைகளாகிய அன்புடைமை, பண்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்க முடைமை, அறிவுடைமை போன்றவற்றையே தமது செல்வமாகக் கருதி வாழ்ந்தவர். குருக்கள் ஐயா சைவப் பாரம்பரியத்திற்கும் சிவாச்சாரிய பாரம்பரியத்திற்கும் நல்லதோர் இலக்கண புருடராக திகழ்ந்தவர் எளிமையான வாழ்வையே தனது வாழ்வாகக் கொண்டு விளங்கிய பண்புடையவர் பிறர் நலம் பேணும் பண்பும் பிறர்க்கு உதவும் பண்பும் மிக்கவராய் இருந்தார். அவர் கடமை உணர்வும், செயற் திறன் மிக்க ஆற்றலும் கொண்ட கர்ம வீரன் ஆவார்.

சிவனடி மறவாத சிந்தையாளராக விளங்கி வந்தவரும் சைவத்துக்கும் செந்தமிழுக்கும் அரும்பணிகள் ஆற்றி வந்தவருமான சான்றோராகிய சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், தத்துவக்கலாநிதி, பண்டிதமணி க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் தமது 98 ஆவது அகவை நிறைவுபெற்று 99 ஆவது அகவை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் 25-04-2015 சனிக்கிழமை அதிகாலை 3:00 மணி போல் சிவபதம் - திருவடிக்கலப்பு எய்தினார்.

குருக்கள் ஐயா கனடா சைவசித்தாந்த மன்றத்தின் காப்பாளர்களில் ஒருவராகவும், "அன்புநெறி" சிறப்பாசிரியர்களில் ஒருவராகவும் விளங்கி மன்றத்தின் பணிகள் சிறப்புற நடை பெற்றுவர, ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், சைவசமயகுரவர் பாடசாலை மாணவரின் வளர்ச்சியில் பாராட்டுகளும், ஊக்குவிப்புகளும் அளித்தவர். "அன்புநெறி" யின் திருவருட்செல்வர் விழா, திருவாதிரை-திருவாசக விழா மலர்கள் என்பவற்றுக்கெல்லாம் அவ்வப்போது அருளாசி உரைகளும் கட்டுரைகளும் எழுதியும், அருமையான கட்டுரைகளைத் தேடி அளித்தும், மற்றும் அருமையான சிறந்த நூல்களையும் அளித்து மன்றத்திற்கு பெருமையும் உயர்வும் அளித்த பெருமகனாவார்.

குருக்கள் ஐயா அவர்கள் நல்லாசிரியராக, ஆளுமை மிக்க அதிபராக, பத்திரிகையாளராக, சமூகத்தொண்டராக, எழுத்தாளராக, பதிப்பாசிரியராக விளங்கியவர். அவர் ஆன்மீகவாதியாக, சிவனடிமறவாத சிந்தையாளராக, திருமுறைகளை தினமும் ஓதுபவராக தமது திருவடிக்கலப்பு நிகழும்வரை வாழ்ந்து திருவாசகப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே சிவபதம் எய்தியவர்.

இவரது தந்தையார் சிவத்திரு ச. கணபதீசுவரக்குருக்கள் (1888-1967) ஈழத்துச் சிதம்பரத்தில் 64 ஆண்டுகள் சிவாசாரியாராகப் பணிபுரிந்தவர். சைவசமய வளர்ச்சிக்கு அளப்பரிய பணியாற்றியவரும் "நாவலருக்குப் பிறகு அருணாசலந்தான்

இந்நாட்டில் ஒரு மனிதர்" என்று நாவலர் பெருமானின் தமையனார் மகனாகிய ஸ்ரீமத் த. கைலாயபிள்ளை அவர்களால் போற்றப்பட்டவருமாகிய சைவப்பெரியார் திரு. ச. அருணாசலம் அவர்களது மாணவர் சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள். இவர் ஈழத்துச்சிதம்பரத்தை மையமாகக் கொண்டு அரை நூற்றாண்டுக்கு மேலாக சைவத்தை வளர்த்த சிறப்புக்குரியவர் வேத சிவாகமங்கள் மற்றும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர் ஆலயக் கிரியைகள் ஆற்றுவதிலும் நல்ல ஆற்றலுள்ளவராக விளங்கியவர். திருவாசகம், உபநிடதங்கள் ஆகியவற்றிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சமயம் சம்பந்தமான ஐயங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு பல எண்ணிக்கையானோர் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இவரை நாடி வந்தனர். இவர் எழுதிய சமயக் கட்டுரைகளும் ஈழத்துச் சிதம்பரம் என்னும் நூலும் அறிஞர்களுக்குப் பெரிதும் உவந்தவையாயிருந்தன.

சிவத்திரு க. வை. குருக்கள் அவர்களின் தாயார் சிவயோக சுந்தராம்பாள் ஆவார். இவரது மூதாதையர்களும் கல்வி கேள்விகளில் சிறந்த புலமைத்துவம் பெற்றவர்கள். இவர் மதுரைச் தமிழ்ச்சங்கப் பரீட்சகரும் சிறந்த தமிழ் அறிஞரும் நூலாசிரியரும் உரையாசிரியரும் பதிப்பாசிரியரும் ஆகிய பிரம்மஸ்ரீ கா. சிதம்பர ஐயர் அவர்களின் மகளாவர். காரைநகர் கார்த்திகேயப் புலவரின் பேர்த்தியாவர். காரைநகரில் பிரபல நொத்தாரிசுவாகஇருந்து பணியாற்றிய பிரம்மஸ்ரீ கா. சி. மகேசசர்மா கு. சு. யு. ஏ அவர்களின் சகோதரியாவர். காரைநகர் தந்த நல்லறிஞர் பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவர் (1819–1898) சைவம் வளர்த்த பெருமைக்குரியவர். நாவலர் பெருமானின் குருவான இருபாலைச் சேனாதிராச முதலியாரைத் தமக்கும் குருவாகப் பெற்றவர். காமிகம், காரணம், முதலிய ஆகமங்களிலும் புராண இதிகாசங்களிலும் திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் சோதிடத்திலும் நிரம்பிய புலமைத்துவம் மிக்கவர். வரகவி எனப் போற்றப்படும் அளவிற்கு சிறந்த கவித்துவத் திறன் கொண்டவராதலால் புலவர் என்ற பட்டத்தையும் பெற்றவர். சிறந்த நாடக ஆசிரியருமாவர். இவர் இயற்றிய திண்ணபுர அந்தாதி தமிழகத்திலும் நல்ல வரவேற்பைப் பெற்ற நூலாகும். நாவலரின் சொற்பொழிவுகளை ஒழுங்காக குறிப்பெழுதி வைத்தவர். எனவே நாவலர் வழி சமயப்பணி ஆற்றும் வாய்ப்புப் பெற்றவர். திக்கை அந்தாதி, திக்கை நாயகர் மும்மணிமாலை, திருப்போசை வெண்பா, நகுலேசா யமக அந்தாதி, வண்ணை திரிபந்தாதி போன்ற நூல்களை உருவாக்கிவர்.

இவ்வாறு பல்துறை வல்லுனராக விளங்கிய இம்மகானது வழிவந்த சிவயோக சுந்தராம்பாள், சிவத்திரு. க. வை. குருக்கள் தமது மூதாதையர் போல் தமிழிலும் சைவத்திலும் நல்லறிஞனாக உருவாக வழிகோலியவர். கார்த்திகேயப் புலவரின் தந்தையார் பிரம்மஸ்ரீ முருகேசு ஐயரும் சிறந்த புலவராகவும் முத்தமிழ் வித்தகராகவும் பல நூல்களின் ஆசிரியராகவும் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய சிறந்த சைவப் பாரம்பரியமும் தமழ்ப் புலமைத்துவம் மிக்க சந்ததியில் வந்த பெற்றோருக்கு (சிவத்திரு ச. கணபதீசுவரக் குருக்கள் அவர்களுக்கும் சிவயோக சுந்தராம்பாள் அவர்களுக்கும்) சிவத்திரு வைத்தீசுவரக்குருக்கள் 1916 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி மகனாகப் பிறந்தார். இவர் உத்தரகோசமங்கை என்னும் சிவாலயத்தில் பரம்பரையாக பூசை செய்த அந்தணர் மரபில் உதித்தவர்.

தமது ஆரம்பக் கல்வியை, தந்தையார் சிவத்திரு ச. கணபதீசுவரக் குருக்களிடத்திலும் பண்டிதர் ச. பஞ்சாட்சரக் குருக்கள் மற்றும் பண்டிதர் சி. சுப்பிமணிய தேசிகர் ஆகியோரிடத்திலும் பெற்றவர். ஒருவன் தான் சார்ந்துள்ள சமயத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு கற்க வேண்டிய நூல்களை ஐயந் திரிபறக் கற்றுத் தெளிய வேண்டும் என்று நாவலர் காட்டிய நல்வழிக்கேற்ப சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் சமயம், தமிழ், மற்றும் சமஸ்கிருதம் சார்ந்த கல்வி அறிவை விருத்தி செய்தார். தாம் கற்க வேண்டிய நூல்களையும் கல்வியையும் மகாவித்துவான் கணேசையா போன்ற தக்கவர்களிடம் பாடங்கேட்டுக் கற்றறிந்தார்.

குருக்கள் தமது புலமைத்துவத்தை மேலும் விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் பின்னர் பரமேசுவர பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் கற்றுப் பண்டித பரீட்சையிலும், பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையிலும் சித்தியடைந்ததன் மூலம் செந்தமிழ்ப் புலமை மிக்க நல்லறிஞராகத் திகழும் வாய்ப்பினைப் பெற்றார்.

இவ்வாறு தமது கல்வியறிவில் சிறந்து விளங்கிய சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் 1940 ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். பணியாற்றிய காலத்தில் கொழும்பு விவேகானந்த சபையால் நடத்தப்பட்டு வருகின்ற அகில இலங்கைச் சைவசமய பாடப்பரீட்சைக் குழுவில் அங்கம் வகித்துப் பெருஞ் சேவை செய்து வந்தார். அன்றியும் மாலை நேரத்தில், தினகரன் பத்திரிகையில் செய்திப் பிரிவில் பணியாற்றினார். ஞாயிற்றுக் கிழமைகளில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருந்த கைதிகளுக்கு அறிவுரை வழங்கி வந்தார். பின்னர் அவரது ஆசிரியப்பணி பல்வேறு பாடசாலைகளிலும் தொடர்ந்ததன் மூலம் இப்பணியில் தமது அனுபவத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்தினார். சிவத்திரு குருக்கள் அவர்கள் அதிபராகப் பணி புரிந்து 1970 ஆம் ஆண்டு தமது ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் மாணவர்களது அறிவை விருத்தி செய்யும் நோக்கில் நூல்கள் பலவற்றை எழுதி வெளியிடுவதன் மூலம் தமது கல்விப்பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். தமது பெற்றோர் வழியிலும் பேராசான்கள் மூலமும் தாம் பெற்ற தமிழ்ப் புலமையை மற்றவர்களுக்கு ஒழிவு மறைவின்றி வாரி வழங்க சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் என்றும் பின்னின்றதில்லை. அவர் ஆக்கிய நூல்களும் பதிப்பித்து வெளியிட்ட நூல்களும் அவரது அயராத முயற்சிக்குரிய சான்றுகளாக அமைகின்றன.

சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்களின் நிறுவன ரீதியான பணிகள் அடுத்துச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும். காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் தாபகராக விளங்கியவர் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள். இவ்விரு நிறுவனங்கள் ஊடாக தமது நீண்டகால அனுபவத்தினைச் சமகால இளந் தலைமுறை

யினரின் நன்மைக்காகப் பகிர்ந்து கொள்வதில் இவர் மிக்க ஆர்வமுடன் விளங்கியவர். கடமையில் அவர் கடைப்பிடித்து வரும் ஒழுங்கு இவ்விரு நிறுவனங்களும் சிறந்து வளர்ச்சியடைடயக் காரணமாக அமைந்தது.

தமது தமிழ்ப் புலமையை மற்றவர்களின் அறிவு விருத்திக்காகப் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஏற்ற பல நூல்களை சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் ஆக்கியவர். இவரது நூலாகிய "காரைநகரில் சைவசமய வளர்ச்சி (1982) தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடாக அமைந்தது.

சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் பதிப்பித்த நூல்களின் வரிசையில் கந்தர் மட சுவாமிநாத பண்டிதரின் "திருமுறைப் பெருமை", பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவரின் "திண்ணபுர அந்தாதி", "தன்னை அந்தாதி", "திருப்போசை வெண்பா", "திக்கை அந்தாதி", மகாவித்துவான் F.X.C நடராசாவின் "நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும்", "வினைத் தொகை", "தெரிநிலை வினையெச்சம்", பண்டிதர் மு. கந்தையாவின் "நாவலர் பிள்ளைத் தமிழ்", "ஷேத்திரத் திருவெண்பா", திரு. ச. சபாபதி அவர்களின் "அருள் நெறித் திரட்டு" ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் சிறப்பு மலர்களுக்குரிய ஆசிரியராக இருந்து வெளியிட்டவற்றுள் "காரைநகர் சைவ மகாசபைப் பொன்விழா மலர்", "காரைநகர் மணிவாசகர் சபைப் பொன் விழா மலர்" (1993), "காரைநகர் – வியாவில் ஐயனார் கோயில் கும்பாபிஷேக மலர்" ஆகியவற்றுடன் திருவாதிரை மலர்கள் 5 ஐயும் குறிப்பிடலாம்.

திருவாசக பாராயண சூழலில் வளர்ந்ததனாலும், தாயார் திருவாசகத்தில் ஏற்படுத்திய பற்றுணர்வினாலும் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்களுக்கு திருவாசகத்தில் தீராத பற்று ஏற்பட்டது. அதுவே மணிவாசகர் சபையை ஆரம்பிக்க ஏதுவாயிற்று.

சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களால் யோகர் சுவாமிகளுடைய ஆசியுடன் காரைநகர் மணிவாசகர் சபை 01. 01. 1940 ஆரம்பிக்கப் பெற்றது. இச்சபையின் வளர்ச்சிக்குப் பல சைவச் சான்றோர் உதவியதையும் குருக்கள் ஐயா நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். காரைநகர் வாழ் சைவப் பெருமக்களது அன்பிற்கும் அபிமானத்திற்கும் உரிய உன்னதமான அன்பராகவே குருக்கள் ஐயா திகழ்ந்துள்ளார். அவரது சமயப் பணியில் காரைநகர் மணிவாசகர் சபையின் தாபிதமும் தொடர்ந்து அச்சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுமே முக்கியத்துவம் பெற்றன. இச்சபையின் மூலம் காரைநகரில் மக்களிடையேயும் இளந்தலை முறையினர் இடையேயும் திருவாசகக் கலாச்சாரத்தினைத் தோற்றுவித்தவர் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள். இச் சபைக்கும் தமிழகத்துக்கும் தொடர்பினை ஏற்படுத்தும் வகையில் பெரும்பாலான ஆதீனங்களுடன் நெருக்கமான உறவை வளர்த்தவர் குருக்கள் அவர்கள். 1955 ஆம் ஆண்டு முதல் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவைக் காலத்தில் மணிவாசகர் விழா நடைபெறத் தொடங்கியது. அந்த ஆண்டு தொடக்கம் விழாக்கள் தொடர்ந்து நடைபெறச் செய்வதிலும் தமிழகத்திலுள்ள அறிஞர்களுடனும் எம் நாட்டு அறிஞர்களுடனும் தொடர்பு கொண்டு அவர்களை மணிவாசகர் விழாக்களில் சொற்பொழி வாற்றச் செய்வதிலும் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் பெரும்பணி ஆற்றி வந்தவர்.

குருக்கள் ஐயா தனது தந்தையார் அருமையாகச் சேர்த்த பழைய கிடைத்தற்கரிய ஆகமங்கள், பத்ததிகள், சமய நூல்கள் இலக்கிய நூல்கள் உள்ளிட்ட சிறந்த ஒரு நூலகத்தைப் பேணி வந்தவர். அவற்றைப் பாதுகாத்து தாம் நிறுவிய மணிவாசகர் சபைக்கு 6000 நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். ஆய்வுகளின் போது அறிஞர்களுக்குத் தேவைப்படும் முக்கியமானவற்றையும் மற்றும் மிக அருமையானவையுமான நூல்களை மனமுவந்து உபகரித்து உதவி வந்தவர் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள்.

குருக்கள் அவர்கள் மிக எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு வந்தவர் பெருமை, பாராட்டு. கௌரவம் எதனையும் எதிர் பார்க்காமல் கடமை ஆற்றும் கர்ம வீரன். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற திருநாவுக்கரசு நாயனாரின் வாக்கிற்கேற்ப வாழ்ந்து வந்தவர். அனைத்து அன்பு நெஞ்சங்களோடும் சளைக்காமல் கடிதத் தொடர்பு கொண்டு தமது அன்புப் பிணைப்பையும் உறவையும் வளர்த்துக் கொள்வதோடு காரைநகரில் தாம் தாபித்த நிறுவனங்களின் வளர்ச்சிக்காக அனைவரையும் அரவணைத்துச் செயலாற்று வதில் வல்லவராக விளங்கி வந்தவர்.

குருக்கள் ஐயா அவர்கள் எழுதிய, பதிப்பித்த நூல்கள் பல. ஏட்டுப்பிரதிகளில் இருந்த பலவற்றை அச்சமைத்துப் பதிப்பித்துள்ளார். தமிழ்நாட்டில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பல நூல்களைப் பதிப்பித்தது போல், ஈழத்தில் பண்டிதமணி க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களும் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். அவர் பதிப்பித்த நூல்களுள் தலை சிறந்து விளங்குவது நவாலியூர் புலவர்மணி சோ. இளமுருகனார் ஆக்கிய "திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம்" ஆகும். இந்நூலின் உரையாசிரியர் நூலாசிரியரின் வாழ்க்கைத் துணைவியாராகிய பண்டிதைமணி இ. பரமேசுவரியார் ஆவார். இந்நூலில்,

"அந்தணர்க்குண் மணியனையான் அருங்கலைகள்
மிகப் பயின்றான் அருமை ஆசான்
சந்தமுஞ் சிவனன்பு தழைக்கின்ற
உள்ளத்தான் தகைசால் நண்பன்
கந்தமலி பூம்பொழில் சூழ் திண்ணபுரங்
கவினோங்குங் கருத்து மிக்கான்
வந்தவருக்கு அமுதளிப்பான் வண்பெயர்கொள்
வைத்தீசுவரக் குருக்கள்!"

எனப் புலவர்மணி சோ. இளமுருகனார் பண்டிதமணி க. வைத்தீசுவரக் குருக்கள் ஐயாவைப் போற்றிப் பாடியுள்ளார்.

தமிழுக்கும் சைவத்திற்கும் கடந்த பல தசாப்தங்களாக அரிய பணியாற்றி வந்த சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களுக்கு அகவை 79 ஆகும் போது அகில இலங்கை கம்பன் கழகம் 1995 ஆம் ஆண்டு "மூதறிஞர்" என்னும் பட்டத்தை

வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தது.

கனடா சைவ சித்தாந்த மன்றம், செப்ரெம்பர் 22, 2001 இல் குருக்கள் ஐயா அவர்களின் 85 ஆவது அகவை நிறைவின் போது "சிவத்தமிழ் வித்தகர்" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்த தோடு அவர் ஆற்றிய சைவத்தமிழ்ப் பணிகளை ஆவணப்படுத்தி "வைத்தீசுவரர் மலர்" என்பதனையும் வெளியிட்டுப் போற்றிப் பெருமை பெற்றது.

குருக்கள் ஐயாவின் 86 ஆவது அகவை நிறைவின்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவரின் அறுபது ஆண்டுக ளுக்கு மேலான சைவத் தமிழ்த் தொண்டுகளை மதிப்பீடு செய்து அவருக்கு "தத்துவக் கலாநிதி" என்ற பட்டத்தை 12-10-2002 இல் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்நிகழ்வு குருக்கள் ஐயாவிற்கும் பல்கலைக் கழகத்திற்கும் பெருமை கொடுப்பது மட்டுமல்ல சைவத்தமிழ்ப் பெருமக்களுக்கும் பெரும் மகிழ்வையும் நிறைவையும் கொடுத்தது.
தத்துவக் கலாநிதி சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தமது 91 ஆவது அகவையில், புலவர்மணி, பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்களால் இயற்றிய ஆண்டிகேணி ஐயனார் புராணம் டிசம்பர் 2007 இல் உரையுடன் காரைநகர் மணிவாசகர் சபை மூலம் வெளியீடு செய்வித்தார்.

பண்டிதமணி சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தமது 95 ஆவது அகவையில் தாம் முன்னர் பதிப்பித்த திண்ணபுர அந்தாதி (மூலமும் உரையும்) என்ற நூலின் மூன்றாம் பதிப்பினை, கனடா சைவசித்தாந்த மன்றம் மூலம் யூன் 2011 இல் வெளியீடு செய்வித்தார்.

சிவத்தமிழ் வித்தகர் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தமது 97 ஆவது அகவையில் தாம் பலகாலமாகத் தொகுத்துக் கொண்டிருந்த சைவக்களஞ்சியம் என்ற நூலை தொகுப்பாசிரியராக இருந்து, வியாவில் ஐயனார் தேவஸ்தானம் மூலம் டிசம்பர் 2013 இல் வெளியீடு செய்வித்தார்.

சான்றோராகிய குருக்கள் ஐயா அவர்கள் தமது 98 ஆவது அகவையில் தாம் தாபித்த காரைநகர் மணிவாசகர் சபை, 75 ஆண்டுகள் நிறைவுகண்டு பவளவிழாவின் தொடக்கமாக டிசம்பர் 2014 இல் நடைபெற்ற மணிவாசகர் சபையின் பவள விழா (1940 – 2015) மலர் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மகிழ்வோடும் மனநிறைவுடனும் எல்லோரையும் ஆசீர்வதித்தார்.

அமரர் தத்துவ கலாநிதி, பண்டிதமணி, சிவத்தமிழ் வித்தகர் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களது 99 ஆவது அகவை நிறைவு பெற்று 100 ஆவது அகவை ஆரம்பிக்கும் போது, ஐயா அவர்கள் பதிப்பித்த யாழ்ப்பாண-கந்தர்மடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதபண்டிதர் அவர்கள் எழுதிய திருமுறைப் பெருமை என்னும் நூலை செப்ரெம்பர் 22, 2015 இல் கனடா சைவ சித்தாந்த மன்றம் வெளியீடு செய்தது. இந்நூலை காரைநகரிலும் அதே தினத்தில் குருக்கள் ஐயாவின் மக்களின் விருப்பத்திற் கமைய வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் வெளியீடு செய்யப் பெற்றது.

அமரர் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தால் 27-12-2016 இல் வெளியிடப் பெற்றது. நூற்றாண்டு மலர் ஆசிரியர் திரு பா. துவாரகன் அவர்கள்.

அமரர் சிவத்திரு க. வை. குருக்கள் அவர்களின் முதலாண்டு திருவடிக்கலப்பு நினைவு வெளியீடாக மன்றம் ஏற்கனவே பதிப்பித்த திருவாசகம் நூலின் நான்காம் பதிப்பை ஐயாவின் நினைவு வழிபாட்டில் கனடா சைவசித்தாந்த மன்றத்தால் வெளியிடப் பெற்றது.

அமரர் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களின் நூற்றாண்டு நிறைவு செப்ரெம்பர் 22, 2016 அன்றாகும்.

சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் சிவானந்த ஞான வடிவேயாகி சிவபெருமான் திருவடி நீழலில் பேரின்பம் பெறுவார். அவரின் அன்பர்கள் உள்ளங்களில் என்றும் கலங்கரை விளக்காக நின்று ஒளி ஏற்றுவார்.

தி. விசுவலிங்கம்
தலைவர்
சைவசித்தாந்த மன்றம், கனடா

# நான் பேச நினைப்பதெல்லாம் ..

என்னருகே நீயிருக்க
உன்னோடு முன்னோக்கி
நான் வலிக்க
எங்கள் சுகங்களோ
இப்பயணத்தில்
தோன்றிவிழும் நதியாக....

உலகம்
எத்தனை வளர்ச்சி கண்டாலும்
எனக்கும் உனக்கும்
இப்பயணம் போல்
எதுவும் அமையாதடி

கட்டி வைத்த காலம் முதல்
கண்மணியே உனை வைத்து
காலினால் மிதித்து வலிகையிலே
காணுகின்ற வலியே
தனி சுகம் சுகம்

பொத்திவைச்ச மல்லிகையே
பூரிப்பாய் நீயிருந்து-கையில்
கட்டிவந்த பலகாரத்தை
பக்குவமாய் தருகையிலே-உன்
பருவத்தை கொஞ்சம் தொட்டு
பாசமதை நாம் வளர்த்து
வாழ்க்கையில் பாதிவழி
வந்துவிட்டோமடி
பசுமையதை வாழ்வில்
நிறைத்துவிட்டோமடி

மெல்ல மெல்ல நான் வலிக்க
மெதுவாக தென்றல் எமைத்தாக்க
சுற்றியுள்ள வயல் எல்லாம்
சுந்தரத் தமிழை நினைப்பூட்ட
எட்டுக்கட்டை எடுத்து
"நான் பேச நினைப்பதெல்லாம் .." நான் பாட
என்னையும் ரசித்து
எதிர்பதையும் நீ ரசித்து
எதிர் பாட்டு நீ இழுக்க
எதிர்த்து வந்த காற்று
எல்லோருக்குமிதை ஒலிபரப்ப
என்னடி சொல்வேன் இச்சுகத்தை

ஊர்கதையை நீ விச
உன்கதையை நான் பேச
வெட்கம் வந்து எனை கிள்ள
வேறு எதை நான் சொல்ல
சொர்கமடி கண்ணே இப்பயணம்
சொகுசு கார் தருமா? இச்சுகத்தை



# காரைநகர் சைவமகா சபை வரலாறு

(1967ம் ஆண்டு நடைபெற்ற பொன்விழாவின் போது வெளியிடப்பட்ட விழா மலரில் வெளியான கட்டுரை)




இற்றைக்கு ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன், நமது கிராமத்தவரும் சிறந்த சைவாபிமானியுமாகிய திரு.க.கதிரவேலு அவர்கள், தமது உள்ளத்தில் எழுந்த பேரார்வத்தினால், திருவாளர்கள் மு.திசைநாயகம், இ.நாகலிங்கம், ஆ.முருகேசு,இ.கந்தையா, ஆ.ச.கதிரைவேல், வே.தம்பிஜயா, அ.சின்னத்தம்பி, க.நவரத்தினம், பிரமஶ்ரீ கா.சி.மஹேசசர்மா முதலானவர்களை ஒன்று கூட்டிச் சமூகத் தொண்டு செய்யத் தொடங்கினார்கள். இவர்களது பெரு முயற்சியால் ஆனந்த வருஷம் பங்குனி மாதம் 2ஆம் திகதி (15.3.1915) ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில், திரு.மு.திசைநாயகம் அவர்கள் தலைமையிற் கூடிய கூட்டத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்,“காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்“ என்ற பெயருடன் ஒரு சங்கம் ஆரம்பமானது. நமது கிராமத்து மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றமடையச் செய்வதே அப்போது அச் சங்கத்தின் நோக்கமாக இருந்தது.

மேற்படி சங்கம் தனது நோக்கத்திற்கமைய மாணவர்களைச் சேர்த்து, சமயம், தமிழ்மொழி என்பனவற்றையும், பிற பாடங்களையும் போதித்து வந்தது. இதற்கு இளைஞர்களும் மற்றையோரும் ஆதரவுகாட்டி வந்தனர். இதனால் ஊக்கமடைந்த அங்கத்தவர்கள், குறித்த சங்கத்தை ஒரு பெரும் சங்கமாக்கும் நோக்கத்துடன், மேற்படி சங்கத்தின் பெயரை,“காரை இந்து வாலிப சங்கம்“ என்று 1918ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் மாற்றினார்கள். பின்வருவோர் காரிய நிருவாக சபையினராகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. பொ.வேலுப்பிள்ளை அவர்கள்
(இவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஆங்கில வித்தியாலயத்தின் (காரைநகர் இந்துக் கல்லூரியின்)காரைநகரைச் சேர்ந்த முதலாவது அதிபரும்,பேராசிரியர் இ.கனகசுந்தரம், பேராசிரியர் தி.சிவகுமாரன் ஆகியோரின் பேரனும் என்பது குறிப்பிடத்தக்கது)

உப தலைவர்கள்: திரு.மு.திசைநாயகம் அவர்கள்
திரு.ஐ.ஆறுமுகம் அவர்கள்
பிரமஶ்ரீ ச.பஞ்சாட்சர ஐயர் அவர்கள்

காரியதரிசி: திரு.இ.நாகலிங்கம் அவர்கள்

உப காரியதரிசி: திரு.இ.கந்தையா அவர்கள்

தனாதிகாரி: திரு.ஆ.ச.கதிரவேல் அவர்கள்

உப தனாதிகாரி: திரு.க.நமசிவாயம் அவர்கள்

கல்வி விருத்திக் காரியதரிசி:
திரு.சு.இராமநாதன் அவர்கள்

கல்வி விருத்தி உப காரியதரிசி:
திரு.சி.வே. தம்பிஜயா அவர்கள்

நிருவாக சபை அங்கத்தவர்கள்:
திரு.வே.சபாபதி அவர்கள்
பிரமஸ்ரீ கா.சி. மஹேசசர்மா அவர்கள்

இச் சங்கமானது சமயப் பிரசங்கங்கள் செய்வித்தும், சமய வகுப்புகள் நடத்தியும் சமயத்தை வளர்த்து வந்தது. அக்காலத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலைத்(காரை இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியராயிருந்த பிரமஸ்ரீ ஈ.கே.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் சமய வகுப்புக்களை நடத்திவந்தார்கள். பிரமஸ்ரீ ச.பஞ்சாட்சர ஐயர் அவர்களும் திரு.மு.திசை நாயகம் அவர்களும் இவருக்கு உதவியாக இருந்தார் கள். இவ்வாறாக "இந்து வாலிப சங்கம்" சிறப்பாக நடந்து வந்ததால் கிராமத்தின் மத்தியான ஓர் இடத்தில், சங்கத்துக்குச் சொந்தக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு நிருவாகசபையார் விரும்பினர். அதன்படி இப்போது கட்டடம் இருக்கும் இடமான பூதனடைப்பு என்னும் காணியில், இரண்டு பரப்பு நிலத்தை, அதன் சொந்தக்காரர் திருமதி வே.வள்ளியம்மையிடம் நன்கொடையாகப் பெறுவதற்குக் காலஞ்சென்ற திரு.இ.நாகலிங்கம் அவர்களின் பெருமுயற்சியால் ஓர் உடன்படிக்கை செய்து, சித்தார்த்தி வருஷம் ஆடி மாதம் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபையினர் அத்திவாரம் இட்டனர். அங்கத்தவர்களதும் பிறரதும் பொருளுதவி 1921 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் நடந்தது. சில மாதங்களின் பின் ஒரு நூல்நிலையம் தொடங்கப் பட்டுப் பலரும் வந்து வாசித்துப் பயனடையும் நன்மை உண்டானது.

இவ்விதமாக வளர்ந்து வந்த வாலிபர் சங்கமானது, 1924 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி சேர். வை.துரைசுவாமி அவர்கள் தலைமையில் ஒன்பதாவது வருஷாந்தக் கூட்டத்தை நடத்தியது. அக்கூட்டத்தில் பிரசங்கஞ் செய்த ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்கள், இளைஞர் முதியோர் என்ற பாகுபாடின்றி யாவரும் பயனடையவும் தொண்டு செய்யவுங் கூடியதாக,"இந்து வாலிபர் சங்கம்" என்ற பெயரைச் "சைவ மகாசபை" என மாற்றுவதன் நன்மையைக் கூறினார்கள். அவர் கூற்றுப்படி பெயர்மாற்றம் நிகழ்வதாயிற்று. சபையில் பெரிய கூட்டங்கள் நடத்துவதற்கும் தேசிய வகுப்புக்கள் வைப்பதற்குமாகப் பெரிய மண்டபம் ஒன்று தேவைப்பட்டது. அதனை இரத்தாட்சி வருஷம் கார்த்திகை மாதம் 27ஆம் திகதி (12-12-1924) கட்டி முடித்தனர். அதற்கு ரூபா ஆயிரம் வரையிற் செலவாகியது. மேற்படி வகுப்புக்களை நடாத்த ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டார். 1925ஆம் ஆண்டில் சபையின் பத்தாவது வருடாந்தக் கூட்டம் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

தொழிற் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக, நெசவுப் பாடசாலையொன்றை நடத்தும் பொருட்டுக் காரை மலாய ஐக்கிய சங்கத்தினர் சபைக்கு 1200 ரூபா நன்கொடையாகக் கொடுத்தார்கள். சபையில் இடவசதி இல்லாதபடியால் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை மனேஜர் திரு.இ.நாகலிங்கம் அவர்கள், தமது பாடசாலையில், சபை ஆதரவில், நெசவு வகுப்பொன்றை இரண்டு ஆண்டுகள் நடத்திய பின் தமது சொந்தப் பொறுப்பில் சில ஆண்டுகள் நடத்தினார்கள். பின்னர் பணமுடை காரணமாக இம்முயற்சி கைவிடப்பட்டது.

இச்சபையின் அங்கமாக வியாவிற் கடற்கரையில் ஒரு மடாலயம் கட்டுவதற்குத் தேவையான முயற்சிகள் செய்யப்பெற்று, ருதிரோற்காரி வருஷம் சித்திரை மாதம் 11ஆம் திகதி மடாலயக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டது. இம்மடாலயம் சம்பந்தமான வேலைகளைக் கருங்காலி பலுகாடு என்னும் குறிச்சிகளிலுள்ளவர்கள் செய்யச் சம்மதித்திருந்தனர். இம்மடாலயத்தில் ஒரு சைவ ஆசாரியரைக் குடியிருத்தவும், புத்தகசாலை நடத்தவும், பிரசங்கம் முதலானவை செய்யவும் சபையினர் எண்ணியிருந்தனர். மடாலயம் தொடங்கிய நிலம் திரு.அ.கனகசபை முகதாவில், 237ஆம் இலக்கத்தில் முடிந்த உறுதியினால் சபைக்குத் தரும சாதனஞ் செய்யப்பட்டது. சபைக் கட்டடமுள்ள நிலமும் 1936ஆம் ஆண்டு மார்கழி மாதம் 10ஆம் திகதி திரு.வே.கந்தசாமி அவர்களிடம் 500 ரூபா விலைக்கு அறுதி வாங்கப்பட்டது.

சபைக் காரியாலயமும் மண்டபமும் பழுதுற்றிருந் தமையால் பலவசதிகளும் பொருந்திய ஒரு மண்டபத் தைக் கட்டுதற்கான முயற்சி தொடங்கப்பட்டது. அப்போதைய நிருவாகசபையார் பெரும் பிரயாசையுடன் நமது கிராமத்திலும், இலங்கையில் பல பாகங்களிலும், மலாயாவிலும் பணம் சேர்த்து 1940ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில், சபையார் அங்கீகரித்த மாதிரிப்படி புதிய கட்டடத்திற்குரிய வேலைகளைத் தொடங்கினார்கள். 1941ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வேலை ஒரு அளவுக்கு முடிந்தது. இதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம் 1700 ரூபாவாகும். இவ்வேலைகள் காரியதரிசி திரு.இ.அம்பலவாணர், தனாதிகாரி திரு.சி.தம்பிப்பிள்ளை என்போரின் நன்முயற்சியால் நிறைவேற்றப்பட்டன. சபை மண்டபத்தின் நாலுமூலைகளிலுமுள்ள அறைகளுள் தென்மேற்கு அறை திரு.ஆ.சங்கரப்பிள்ளை அவர்களின் உதவியுடன் சபையினராலும், வடமேற்கு

அறை முகாந்திரம் க.முத்துக்குமாரு அவர்களாலும், தென்கிழக்கு அறைகாரை அபிவிருத்திச் சபையாரா லும், வடகிழக்கு அறை சபை தொடங்கிய காலத் தலைவர் திரு.மு.திசைநாயகம் அவர்கள் நினைவாக, பிரமஸ்ரீ கா.சி.மஹேச சர்மா திரு.அ.கணபதிப்பிள்ளை ஆகியோர் முயற்சியாலும் கட்டுவிக்கப்பட்டன.

சபைக் கட்டட நிலத்துக்கு முன்புறமாக இருந்த சிறுதுண்டு நிலத்தை மலாய் நாட்டில் வைத்திய கலாநிதியாக விளங்கும் நமது கிராமத்தவர் திரு.ச.கணபதிப்பிள்ளை அவர்கள் 1300 ரூபாவுக்கு வாங்கி 5.3.1953இல், சபைக்கு நன்கொடையாக அளித்திருக்கின்றார்கள். அவர்களது செயல் நம்மவ ருக்கு முன்மாதிரியாக அமையும் என எதிர்பார்க்கின் றோம். கட்டடத்தில் எஞ்சியிருந்த வேலைகளை முடித்து அழகு செய்த காரை இந்துக் கல்லூரி அதிபர் திரு.ஆ.தியாகராசா M.A., M.Lit அவர்களுக்கும், ஆசிரியர் திரு.மு.ஆ.கந்தையா அவர்களுக்கும், திரு.ச.நல்லதம்பி (சம்பந்தர் கண்டி) அவர்களுக்கும் சபை கடமைப் பட்டுள்ளது. இவர்கள் பிறருடைய உதவியோடு இவ்வேலைகளைச் செய்து ஒப்பேற்றி னாலும் அன்னாரின் பிரயாசை மெச்சத்தக்கது. கிழக்கு வாயிற்கதவு வேலைகள் பூச்சு வேலைகளை, நிருவாகசபையர், அபிமானிகளிடம் சேர்த்துக் கொடுத்த 3000 ரூபா உதவியுடன் செய்வித்தவர் திரு. மு.கு. சுப்பிரமணியம் அவர்களாவர். மேற்படி தொகையில் 1000 ரூபா உதவிய பெருமை திரு.ச.வே.பொ. சீவரத்தினம் அவர்களைச் சாரும்.

1955 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி, S.102 ஆம் இலக்கத்தில் பொதுஸ்தாபனச் சட்டத்தின் கீழ் சபை பதிவுசெய்யப்பட்டது. இதற்கான வேலை களைச் செய்து ஒப்பேற்றியவர் கொழும்பு, காரை அபிவிருத்திச் சபைத் தலைவரும் நியாயவதியுமாகிய திரு.வே.தில்லைநாதன் B.A அவர்களாவர். (இவர் இச்சபையின் முன்னாள் தலைவர் திரு.பொ.வேலுப் பிள்ளை(பொன்னுடையார்) அவர்களின் மகனும் பேராசியர் தி.சிவகுமாரன் அவர்களின் தந்தையும் என்பது குறிப்பிடத்தக்கது) மலசலகூடம் கட்டுவதற்கு வேண்டிய பணமுதவியும், கட்டட வேலைகளைச் செய்வித்தும் நிறைவேற்றியவர் கள் திரு.க.பரமநாதர் அவர்களும் திரு.சோ.அம்பல வாணர் அவர்களுமாவர்.

காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் திரு.க.சிவகுருநாதர் அவர்கள் ஞாபகமாக, அவர்களது மகன் திரு.க.சி.நட ராசா அவர்களின் நன்கொடைப் பணத்தினால், 1965ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி தொடக்கம் வாரந்தோறும் தேவாரவகுப்பு நடைபெற்று வருகின்றது. அவர்களது பரோபகாரசீலம் மதிக்கத்தக்க தொன்று.

“திசைநாயகம் ஞாபகச்சின்ன” அறை, பூசை அறையாக இருக்கின்றது. அங்கு வெள்ளிக்கிழமை தோறும் பூசை, செபம், தியானம் முதலியன நடைபெறுகின்றன. இதிற்பலர் ஈடுபட்டு நன்மை பெறுகின்றார்கள்.

நமது சபைக்காரியங்கள் நன்மையாக நடக்கவேண்டும் என்ற விருப்பத்தினால் காலத்துக்குக் காலம் புத்திகூறியும் பொருளுதவி செய்தும் வருகின்ற காரை அபிவிருத்திச் சபையாருக்கு(கொழும்பு) எமது நன்றியுரியதாகுக. திரு.வை.சுந்தரமூர்த்தி அவர்கள் சர்வோதய இயக்க மூலம் சபையைப் பெரும் மத்திய நிலையமாக்கவும், காரைநகருக்கான சகல காரியங் களையும் பொறுப்பேற்றுச் செய்யும் வல்லமையுள்ள தாக்கவும் பாடுபட்டு வருகிறார்கள். இவர்களது முயற்சிகள் விரைவில் ஒப்பேறவேண்டும் என விரும்புகின்றோம். இந்தவிஷயஞ் சம்பந்தமாக, திருவாளர்கள் ச.வைத்திலிங்கம் வே.கந்தையா என்பவர்கள் சபையின் பதினொராம் வருஷாந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காரை மலாய ஐக்கிய சங்கம், சபையின் இளமைக் காலந்தொட்டுச் சபையைக் கண்காணித்துக் காலத்துக்குக் காலம் வேண்டிய பொருளுதவிகள் செய்து வருகின்றது. அதன் அங்கத்தவர்கள் இங்கு வரும்போது, சபை வேலைகளைக் கவனித்து ஊக்கப்படுத்தி உறுதியுரைகள் கூறித் தளரவிடாது செல்கின்றனர். அவர்களுக்கு எப்போதும் சபை கடமைப்பட்டுள்ளது.

இச் சைவமகாசபையானது அரைநூற்றாண்டுக் காலத்தில், இடையூறுகளைத் தாண்டி வளர்ச்சி பெற்றமை, இதனைத் தொடங்கிய பெரியார்களது மனத்தில் இடம்பெற்றுள்ள நற்சிந்தனையாலும், கடவுள் அருளாலுமேயாம்.

இச்சபையில் தங்கி நிரந்தரமாயிருந்து சேவை செய்யத்தக்க பாதுகாவலர் அவசியம் வேண்டப்படுவர். அங்கத்தவர்களும் தருமசீலர்களும் இதற்காவன செய்வார்களாக. பாதுகாவலர் தங்கியிருத்தற்குச் சமையலறை வசதியுடன் கூடிய ஒரு சிறு கட்டடம் அமைப்பித்து உதவுவதாகத் தமது பெயர் வெளி வருதலை விரும்பாத பேரன்பரொருவர் வாக்களித்து 1000ரூபா முற்பணமாக உதவியுள்ளார். அவர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சபைத் தொண்டுகள்

1. **நூல் நிலையம்:** 1926ஆம் ஆண்டில் 347 தமிழ்ப்புத்தகங்களும் 279 ஆங்கிலப் புத்தகங்களும் இருந்தன. அந்த ஆண்டில் மாத்திரம் 126 புத்தகங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. 13 பத்திரிகைகளும் வரவழைக்கப்பட்டன.

2. **சமயப்பணி:** ஆரம்பகாலந்தொட்டுச் சமய வகுப்புகளும் சமய பாடப் பரீட்சைகளும் நடைபெற்ற வந்தன. 1926ஆம் 1927ஆம் ஆண்டுகளில் பெருந்தொகையான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். சிவஞானசித்தியார் வகுப்பு பரமேஸ்வரக் கல்லூரி உப அதிபர் திரு.மு.ஞானப்பிரகாசம் B.A., B.Sc. அவர்களால் நடாத்தப்பட்டது. அவர்களுக்குச் சபையாரின் நன்றி உரித்தாகுக. ஸ்ரீமத் சி.சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் தமிழ்ப் பாலபண்டித வகுப்பு 1935ஆம் 1936ஆம் ஆண்டுகளில் நடாத்தப் பட்டது. பலர் அவ்வகுப்பில் கற்றுப் பயனடைந்தனர். இவர்களால் இவ்வாண்டு களுக்கு முன்னும் பின்னும் தமிழ் இலக்கண இலக்கிய வகுப்புகள் நடத்தப்பட்டன வென்பது குறிப்பிடத்தக்கது.

3. பிரசுரங்கள்: Our young men and their Culture, நரகசதுர்த்தசி ஸ்நானம், திருமுறைப் பெருமை, நித்தியகருமம், நடராஜவடிவம், தில்லைத்திருநடனம், குருகலவித்தியாலயம், மஹோற்சவவிளக்கம், புதுவருஷ சோபனம், திருவெம்பாவை விளக்கம் என்பன சபையா ரால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டன.

ஆரம்ப அங்கத்தவர்களுள், திருவாளர்கள் இ.கந்தையா, ஆ.ச.கதிரைவேல், அ.சின்னத்தம்பி, க.நவரத்தினம் என்போர் ஜீவவந்தர்களாக இருக்கின்றார்கள். இப்பெரியார்களுக்கு எமது வணக்கம் உரித்தாகுக.

**காரைநகர் சைவமகாசபையின் போஷகர்கள் நாமாவலி**

1. திரு.க.முத்துக்குமாரு அவர்கள்
2. திரு.ஆ.சங்கரப்பிள்ளை அவர்கள்
3. திரு.ச.நல்லதம்பி அவர்கள்
4. திரு.ந.நடராசா K.C அவர்கள்
5. திரு.அ.நாகலிங்கம் அவர்கள்
6. திரு.ச.வைத்திலிங்கம் அவர்கள்
7. திரு.இ.அம்பலவாணர் அவர்கள்
8. திரு.பொ.வே.வைத்தியலிங்கம் அவர்கள்
9. திரு.V.முருகேசு அவர்கள்
10. டாக்டர் S.கணபதிப்பிள்ளை அவர்கள் (மலாயா)
11. திரு.அ.தங்கவேலு அவர்கள்
12. திரு.கு.சங்கரப்பிள்ளை அவர்கள்
13. திரு.சி.ச.குமாரசாமிப்பிள்ளை அவர்கள் (யாழ்ப்பாணம்)
14. திரு.அ.கந்தையா அவர்கள்
15. திரு.மு.கு.சுப்பிரமணியம் அவர்கள்
16. திரு.மு.சிவபாதம் அவர்கள்
17. திரு.வே.கணபதிப்பிள்ளை அவர்கள்
18. திரு.க.சி.நடராசா அவாகள் 65
19. திரு.சு.செல்லையா அவர்கள் (மலாயா)
20. திரு.சி.கனகசபை J.P அவர்கள் (யாழ்ப்பாணம்)
21. திருமதி.தங்கம்மா நடராசா அவர்கள் 66
22. திரு.ஆ.தியாகராசா M.A அவாகள
23. திரு.வீ.வன்னியசிங்கம் B.A அவர்கள்
24. திரு.மா.வைத்தியநாதன் B.A அவர்கள்
25. திரு.க.பரமநாதர் அவர்கள்
26. திரு.சோ.அம்பலவாணர் அவர்கள்
27. திரு.இ.வே.கந்தையா அவர்கள் (மலாயா)
28. திரு.ஆ.பரஞ்சோதி அவர்கள் 67 (மலாயா)
29. திரு.அ.சிவபாதம் அவர்கள்

**கௌரவ அங்கத்தவர்கள்**

1. ஸ்ரீமத் சி.சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்
2. பிரமஸ்ரீ கா. சி.மஹேசசர்மா அவர்கள்

**சீவிய அங்கத்தவர்கள்**

1. திரு.சி.ஆ.கணபதிப்பிள்ளை அவர்கள்
2. திரு.ச.அருணாசலம்பிள்ளை அவர்கள்
3. திரு.சோ.சின்னத்தம்பி அவர்கள்
4. திரு.நா.பொன்னம்பலம் அவர்கள்
5. திரு.வே.அருணாசலம்பிள்ளை அவர்கள்
6. திரு.K.பொன்னையா அவர்கள்
7. திரு.A.T.ஆறுமுகம் அவர்கள்
8. திரு.அ.சண்முகம் அவர்கள்
9. திரு.க.கதிரவேலு அவர்கள்
10. திரு.மா.பரமநாதர் அவர்கள்
11. திரு.ச.அப்பாத்துரை அவர்கள்
12. திரு.ச.சுப்பிரமணியம் அவர்கள்
13. திரு.பொ.செல்லப்பா அவர்கள்
14. திரு.A.மாரிமுத்து அவர்கள்
15. டாக்டர் S.சுப்பிரமணியம் அவர்கள்
16. திரு.K.A.செல்லையாபிள்ளை அவர்கள்
17. திரு.C.S.K.நமசியவாயம் செட்டியார் அவர்கள்
18. திரு.இ.வை.பொன்னம்பலம் அவர்கள்
19. திரு.K.E.சின்னத்துரை அவர்கள்
20. திரு.சி.க.ஆ.கதிரவேலு அவர்கள்
21. திரு.மு.வைத்திலிங்கம் அவர்கள்

22. திரு.அ.தேவராசா அவர்கள்
23. திரு.அ.கனகசபை அவர்கள்
24. திரு.ச.அருணாசலம் அவர்கள்
25. திரு.K.K.சுப்பிரமணியம் அவர்கள்
26. திரு.S.K.முருகேசு அவர்கள்
27. திரு.V.நாகலிங்கம் அவர்கள்
28. திரு.P.M.சங்கரப்பிள்ளை அவர்கள் (வட்டுக்கோட்டை)
29. திரு.சி.நவரத்தினம் அவர்கள்
30. திரு.க.செல்லையா அவர்கள்
31. திரு.ஆ.கோவிந்தபிள்ளை அவர்கள்
32. திரு.இ.ஆ.கந்தையா அவர்கள்
33. திரு.E.V.கார்த்திகேசு அவர்கள்
34. திரு.K.வேலுப்பிள்ளை அவர்கள்
35. திரு.S.R.கந்தையா அவர்கள்
36. திரு.மு.இரத்தினராசா அவர்கள்
37. திரு.S.R.ஆறுமுகம் அவர்கள்
38. திரு.A.V.அருளம்பலம் அவர்கள்
39. திரு.இ.நாகலிங்கம் அவர்கள்
40. திரு.S.துரைசாமி அவர்கள்
41. திரு.S.சிவயோகம் அவர்கள்
42. திரு.சி.இ.செல்லத்துரை அவர்கள்
43. திரு.K.A.கனகசபை அவர்கள்
44. திரு.A.நல்லதம்பி அவர்கள்
45. திரு.S.ஆறுமுகம் அவர்கள்
46. திரு.V.செல்லையா அவர்கள்
47. திரு.வை.சுந்தரமூர்த்தி அவர்கள்
48. திரு.அ.மு.தில்லைநாதன் அவர்கள்
49. திரு.அ.கணபதிப்பிள்ளை அவர்கள்
50. திரு.மு.சபாபதிப்பிள்ளை அவர்கள்
51. திரு.ச.அம்பலவாணர் அவர்கள்
52. டாக்டர் P.சிவசோதி அவர்கள்
53. திரு.பொ.ஆறுமுகம் அவர்கள்
54. திரு.அ.சுப்பிரமணியம் அவர்கள்
55. திரு.வே.த.ஆ.அருணாசலம் அவர்கள்
56. திரு.சு.சிங்காரவடிவேலு அவர்கள்
57. திரு.அ.வ.பொன்னுத்துரை அவர்கள்
58. திரு.வே.நாகலிங்கம் அவர்கள்
59. திரு.க.கோவிந்தபிள்ளை அவர்கள்
60. திரு.வே.கந்தையா அவர்கள்
61. திரு.இ.சுப்பிரமணியம் அவர்கள்
62. திரு.வே.இராமலிங்கம் அவர்கள்
63. திரு.மு.ஆ.கந்தையா அவர்கள்
64. திரு.க.பத்மநாதன் அவர்கள்
65. திரு.ச.பாலசுப்பிரமணியம் அவர்கள்
66. திரு.S.M.கனகரத்தினம் அவர்கள்
67. திரு.N.சிவகுரு அவர்கள்
68. திரு.மு.பொன்னுத்துரை அவர்கள்
69. திரு.சி.முத்தையா அவர்கள்
70. திரு.K.ஆறுமுகம் அவர்கள்
71. திரு.V.M.சண்முகம் அவர்கள்
72. திரு.த.சுந்தரமூர்த்தி அவர்கள்
73. திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள்
74. திரு.செ.கனகசபை அவர்கள்
75. திரு.ச.க.முருகேசு அவர்கள்
76. திரு.K.R.ஹரிஹரசாஸ்திரிகள் அவர்கள்
77. திரு.K.நவரத்தினம் அவர்கள்
78. திரு.ஆ.முருகேசு அவர்கள்
79. திரு.க.வைத்தியலிங்கம் அவர்கள் (ஊர்காவற்றுறை)
80. திரு.க.ஆறுமுகம் அவர்கள் 67
81. திரு.வ.பொன்னுத்துரை அவர்கள்
82. திரு.த.பூபாலசிங்கம் அவர்கள்
83. திரு.சோ.திருச்சிற்றம்பலம் B.A அவர்கள்
84. திரு.அ.இராசையா அவர்கள்
85. திரு. பொ. பாலசுப்பிரமணியம்

**கடந்தகால உத்தியோகஸ்தர்கள் 1915 - 1965**

**தலைவர்கள் செயலாளர்கள் தனாதிகாரிகள்**

1. திரு.மு.திசைநாயகம்
   திரு.இ.நாகலிங்கம்
   திரு.ஆ.ச.கதிரைவேல்
2. திரு.பொ.வேலுப்பிள்ளை(11ஆண்டு)
   திரு.வி.அ.நாகலிங்கம்
   திரு.கு.செல்லையா
3. திரு.வீ.நமசிவாயம்
   திரு.மு.பொன்னம்பலவாணர்
   திரு.இ.கந்தையா
4. திரு.ச.கணபதிப்பிள்ளை
   திரு.இ.அம்பலவாணர்
   திரு.வே.சுப்பிரமணியம் J.P.
5. திரு.க.முத்துக்குமாரு (10ஆண்டு)
   திரு.ச.ஆறுமுகம்
   திரு.சி.தம்பிப்பிள்ளை
6. திரு.ச.நல்லதம்பி
   திரு.அ.தேவராசா
   திரு.மு.வைத்தியலிங்கம்
7. திரு.A.V.குலசிங்கம்
   திரு.மு.அம்பலவாணர்
   திரு.ஆ.அம்பலவாணர்
8. திரு.சி.சுப்பிரமணிய தேசிகர்
   திரு.பொ.நவரத்தினம் M.A
   திரு.அ.கணபதிப்பிள்ளை
9. திரு.இ.நாகலிங்கம்
   திரு.அ.நாகலிங்கம்
10. திரு.அ.கணபதிப்பிள்ளை
    திரு.ச.சுந்தரம்பிள்ளை
11. திரு.மு.ஆ.கந்தையா

திரு.கா.நடசாசா

**சபைக்கு வருகை தந்து சொற்பொழிவாற்றிய பெரியார்கள்**

1. சேர்.வை.துரைசுவாமி (1924)
2. ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா
3. ஸ்ரீமத் சுவாமி சதானந்தா
4. ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தா
5. மகாத்மா காந்தியடிகள்
6. ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார்
7. பண்டித் ஜவஹர்லால் நேரு
8. ஸ்ரீமதி கமலா நேரு
9. ஸ்ரீமதி இந்திரா காந்தி
10. ஸ்ரீமத் கமலாதேவி சட்டோபாத்தியாய
11. சுவாமி சச்சிதானந்த ராஜயோகிகள்(சங்கரசுப்பையர்)
12. ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள்
13. ஸ்ரீமத் நாகலிங்க சுவாமிகள்
14. திரு. சத்தியமூர்த்தி
15. சாத்தூர் வழக்கறிஞர் திரு.தூ.ச.கந்தசாமி
16. டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை
17. கோவை.ஸ்ரீ.சுப்பிரமணிய முதலியார் (சம்பந்த சரணாலயத் தம்பிரான்)
18. கோவை. ஸ்ரீ.எம்.இராமச்சந்திரன் செட்டியார்
19. தூத்துக்குடி.சைவத்திருவாளர் ந.சிவகுருநாதபிள்ளை
20. ஸ்ரீ.ச.சச்சிதானந்தம்பிள்ளை
21. சித்தாந்த சாபம் ஈசானசிவாச்சாரியர்
22. பெருஞ்சொற் கொண்டல் க.முருகேச முதலியார்
23. திரு.அ.ச.ஞானசம்பந்தன்
24. திருப்புகழ்மணி ரி.எம்.கிருஷ்ணசுவாமி ஐயர்
25. சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம்பிள்ளை
26. மகாவித்துவான் சி.அருணைவடிவேலு முதலியார்
27. பண்டிதமணி சு.நவநீதகிருஷ்ண பாரதியார்
28. பண்டிதர் வே.மகாலிங்கசிவம்
29. டாக்டர் ஜே.சீ.குமரப்பா
30. திரு.சு.நடேசபிள்ளை
31. கௌரவ வி.வி.கிரி
32. கௌரவ எம்.எஸ்.ஆனே
33. சித்தாந்த சிகாமணி க.வச்சிரவேலு முதலியார்
34. திரு.ஈ.டபிள்யூ.அரியநாயகம்
35. திரு.மு.ஞானப்பிரகாசம்
36. வித்துவான் கி.வா.ஜகந்நாதன்
37. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
38. டாக்டர் பீம்சேன் சச்சார் (1966)

நன்றி: காரைநகர் சைவமகா சபை பொன்விழா மலர்

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# காரைநகர் சைவ மகா சபை
# KARAINAKAR SAIVA MAHA SABAI

ஆரம்பம் 1915

பிரதான வீதி, காரைநகர். மின்னஞ்சல்:- Karainagarsaivamahasabai@gmail.com

**போசகர்கள்**
சிவஸ்ரீ சிறினிவாச ஐயர்
சிவஸ்ரீ மேரு கிரீசுவர சர்மா

**தலைவர்**
மருத்துவர் ப. நந்தகுமார்

**துணைத் தலைவர்**
திரு.வே. சிற்சபேசன்

**செயலாளர்**
திரு. ஆ. பரம்சோதி

**துணைச் செயலாளர்**
திரு. பொ. ஆறுமுகம்

**பொருளாளர்**
திரு. ந. பரஞ்சோதி

**பத்திராதிபர்**
கலாநிதி யோ. வீரமங்கை

**செயற்குழு உறுப்பினர்கள்**
திரு. ஒ. சுவாமிநாதன்
திரு. இ. ஜெயராமன்
திரு. சு. குலராசசிங்கம்
திரு. வே. சபாலிங்கம்
திரு. கா. குமாரவேலு
திரு. க. நிமலதாசன்
திரு. தெ. லிங்கேஸ்வரன்
திரு. ப. தவராசா
திரு. க. கிறிஸ்கந்தநாதன்
திரு. த. சிவரூபன்
திரு. செ. சண்முகம்
திரு. ப. அன்பரசன்
திரு. வே. நடராசா
திரு. ப. தனஞ்சயன்
திரு. சு. இரவீந்திரன்
திருமதி. பா. நாகேஸ்வரி
திருமதி. றொ. கலாசக்தி
செல்வி. இ. சித்ரா
செல்வி. த. நாகேஸ்வரி

## காரை வசந்தம் மண்ணின் மகத்துவத்தை எடுத்தியம்ப இறைசிவன் அருள் கிடைக்கட்டும்

மண்ணை விட்டு புலம் பெயர்ந்தாலும் அதன் பற்றுதலை மறவாமல் "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றின வானிலும் நனிசிறந்ததே" என்ற வாக்கிற்கிணங்க எம் காரை மண்ணின் பெருமைகளை பறைசாற்றும் நிகழ்வாக காரை வசந்தத்தை ஒழுங்குபடுத்தி செவ்வனே தொடர்ந்து முன்னெடுத்துவரும் கனடா காரை கலாச்சார பேரவையினரை வாழ்த்துவதில் நூற்றாண்டு கண்ட பழம் பெரும் சபையான எமது சைவ மகா சபை பேருவகை அடைகிறது.

சுவாமி விபுலானந்தரால் பெயரிடப்பட்டு மகாத்மாகாந்தி போன்ற மகான்களும்இ பெரியோர்களதும் கால்தடம் பதிக்கப்பட்ட சைவத்தின் மேன்மையை தொண்டை அன்புமயமான பக்தி நெறியை முன்னெடுப்பதற்காக ஈழத்திலேயே முதலில் நிறுவப்பட்ட சைவ மகா சபை எனும் முத்திரையை பொதித்த எமது காரைநகர் சைவ மகா சபையானது நூற்றாண்டு காணும் இத்தருணத்தில் சில தசாப்தங்களின் பின் தற்போது புதுமெருகு பெற்று புதுப்பொலிவுடன் செயலாற்றிக்கொண்டு இருக்கின்றது என்ற செய்தியை எம் புலம் பெயர் உறவுகளுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

புதிய யாப்பு சீர்திருத்தத்துடன் காரை வாழ் சகல மக்களையும் உள்ளடக்கி புனருத்தாரணம் செய்யப்பட்ட நூற்றாண்டு நிறைவின் தருணத்திலே புலம் பெயர்ந்து கனடா வாழ் எமது காரை சொந்தங்கள் எமது சபையை சிறப்பித்து மலர் ஆக்கங்களை வெளியிடுவதில் நாம் மட்டற்ற மகிழ்வு அடைகின்றோம்.

எமது எதிர்கால சந்ததிக்கு சைவத்தினதும் தமிழனதும் பண்பாட்டு அடையாளங்களை கொண்டு செல்வதிலே அர்பணிப்புடன் செயலாற்றி வரும் காரை கனடா கலாச்சார பேரவையின் பணிகள் பாரட்டுக்குரியவை.

இந்தப் பணிகள் எதிர்காலத்தில் மேலும் சிறப்புறவும் தாயகத்தில் அல்லலுற்று நிற்கின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்கள்இ ஆதரவற்ற சிறார்கள் உட்பட நலிவுற்ற மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் அறப்பணிகளில் காத்திரமான வகையில் பங்கேற்கவும் அன்பே சிவமாய் அமர்ந்திருக்கின்ற ஈழத்துச் சிதம்பர பெருமானின் அருளாசி வேண்டி எமது சபையின் வாழ்த்துரையை நிறைவு செய்கின்றோம்.

நன்றி

வைத்திய கலாநிதி ப. நந்தகுமார்
தலைவர்,
காரைநகர் சைவ மகா சபை

# சைவமகாசபை - காரைநகர்.
## ஆரம்பம் 1915

காரைநகரின் வரலாற்றில் தொன்மைமிகு சைவசமயத்தின் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் பழம் பெருமைகளையும் பேணிப் பாதுகாத்ததில் காரைநகர் சைவ மகா சபைக்கும் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. பயன்தரும் செயலுறுதி மிக்க பெரும் நிர்வாகத்தைக் கொண்டு இந்தியா, இலங்கைச் சான்றோர்கள் பலரைகாரை மண்ணில் காலடி பதிய வைத்த பெருமை கொண்டது இச் சைவ மகா சபையாகும்.

காரைநகரின் சைவ அபிமானியான திரு.க.கதிரவேலு அவர்கள் ஏற்பாட்டில் திருவாளர்கள் மு.திசைநாயகம், இ.நாகலிங்கம், ஆ.முருகேசு, இ.கந்தையா, ஆ.ச.கதிரைவேல், வே.தம்பிஜயா, அ.சின்னத்தம்பி, க.நவரத்தினம், பிரம்மஸ்ரீ கா.சி.மஹேசசர்மா முதலானவர்கள் ஒன்று கூடி ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில், ஆனந்த வருஷம் பங்குனி மாதம் 2 ஆம் திகதி(15.03.1915) திரு.மு.திசைநாயகம் அவர்கள் தலைமையில் "காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம்" என்ற பெயருடன் ஒரு சங்கம் தொடங்கினார்கள்.

இச்சங்கம் மாணவர்களுக்கு சமயம், தமிழ்மொழி என்பவற்றையும் ஏனைய பாடங்களையும் போதித்து வந்தது. சங்கத்தின் செயற்பாடுகள் சிறப்புற்று வருவதைக் கண்டுஅங்கத்தவர்கள் இச் சங்கத்தைப் பெரும் சங்கமாக்கும் நோக்குடன் 1918ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆம் திகதி "காரை இந்து வாலிபர் சங்கம்" என்ற பெயரில் மாற்றம் செய்தனர். இதன் முதலாவது தலைவராக திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாசாலை(காரை இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியர் திரு.பொ.வேலுப்பிள்ளை (பொன்னுடையார்) விளங்கினார்.

இவ்வாறு வளர்ந்து வரும் நிலையில் திருமதி.வே. வள்ளியம்மையிடம் பெற்றுக் கொண்ட நன்கொடைக் காணியில் இச்சங்கத்துக்காக சிறிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது. இக்கட்டிடம் பல வழிகளிலும் பலருக்கும் பயன்பட்டது. இச்சங்கத்தில் 1924 ஆம் ஆண்டு ஆனி



மாதம் 14 ஆம் திகதி உரையாற்றிய ஸ்ரீமத்சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஆலோசனைப்படி இச்சங்கத்தை "சைவ மகாசபை" எனப் பெயர் மாற்றினர்.

சபை தொடர்ந்து வளர்ச்சி பெற்ற போது சபைக்கு முன்புறம் இருந்த சிறுதுண்டு நிலமும் 5.3.1953இல் சைவ அபிமானியும்மருத்துவ கலாநிதியுமாக மலாய் நாட்டில் விளங்கிய திரு.ச.கணபதிப்பிள்ளை அவர்களால் வாங்கி நன்கொடையாக வழங்கப்பட்டது. சைவ அபிமானியும்,காரை அபிவிருத்திச் சபைத் தலைவரும் நியாயவாதி(Advocate)யுமாக விளங்கிய திரு.வே.தில்லைநாதன் B.A அவர்களின் முயற்சியால் இச்சபை S102 ஆம் பொது ஸ்தாபனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு முழுமை பெற்ற சபையாக விளங்குகிறது.

தொடர்ந்து பல சைவ அன்பர்களால் நிதி உதவி பெறப்பட்டு பல நற்காரியங்கள் இச்சபையினால் செய்யப்பட்டன. நான்கு கோணங்களிலும் ஒவ்வொரு அறையும் மேற்கு புறத்தில் அரங்கும் கொண்ட பெரிய ஒன்றுகூடல் மண்டபம் கட்டப்பட்டதுடன் நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டது. மலசல கூட வசதியும் செய்யப்பட்டது.

மேலும் காரை மலாய் ஐக்கிய சங்கம் காலத்துக்குக் காலம் நிதியுதவி செய்தும் அச்சங்க அங்கத்தவர்கள் இச்சபைக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் சபை வேலைகளைக் கவனித்து ஊக்கப்படுத்தி உறுதியுரைகள் வழங்கிச் செல்வதும் வழக்கம். கொழும்பில் இயங்கிய காரை அபிவிருத்திச் சபையும் காலந்தோறும் நிதி உதவி, ஆலோசனை வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து வந்துள்ளது.

தொழிற்கல்வியை மையமாகக் கொண்டு நெசவுப் பாடசாலை ஒன்றும் தொடங்கப்பட்டுப் பின்னர் பணமுடை காரணமாக இம்முயற்சி கைவிடப்பட்டது. செல்வி.நல்லபிள்ளை நாகமுத்து அவர்களின் முயற்சியால் சர்வோதய சைவ மாதர் சங்கம் இச்சபையின் ஆதரவில் தொடங்கப்பட்டது. வியாவில் கடற்கரையில் மடலாயமும் அப்பகுதிசைவ அன்பர்களின் உதவியுடன் சைவ ஆசாரியார்களை குடியிருத்துதல் நூல் நிலையம் நடத்துதல் பிரசங்கம் செய்வித்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு தொடங்கப்பட்டது.

இச்சபை பல பேரறிஞர்களை காரைநகர் மண்ணுக்கு வரவழைத்து நற்போதனைகளை மக்கள் கேட்கும் படி செய்தமை இச்சபையின் செயற்கரிய தொண்டாக அமைந்தது. அவ்வாறு அழைக்கப்பட்டு நற்போதனை வழங்கியவர்களில் சிலர்,

1. சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி
2. ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா
3. மகாத்மா காந்தி அடிகள்
4. இராஜகோபலச்சாரியார்
5. பண்டிற் ஜவஹர்லால் நேரு,
   ஸ்ரீமதி. கமலா நேரு
6. ஸ்ரீமதி. இந்திராகாந்தி
7. டாக்டர். ரா.பி.சேதுப்பிள்ளை
8. பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார்
9. வித்துவான் கி.வா.ஜகநாதன்
10. பேராசிரியர்.சிங்காரவேலன்
11. திரு.அ.ச.ஞானசம்பந்தன்
12. ஆத்மஜோதி.நா.முத்தையா

என இன்னும் பலர் வந்து உரையாற்றினர். (வருகை தந்தோர் பெயர் விபரங்களைச் சைவமகாசபை பொன்விழா மலரில் காண்க)திரு.ச.ஆ.பாலேந்திரன் ஆக்கிய "காரைநகர் தொன்மையும் வன்மையும்" என்ற நூலில் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் சமூகத்துக்கு வழங்கிய நல்வரவுப் பத்திரிகைப் பிரதி இடம் பெற்றுள்ளமை சிறப்பு அம்சம் ஆகும்.

வித்துவான் சோ.இளமுருகனாரின் ஈழத்துச் சிதம்பர புராணத்தில் 146 ஆவது பாடலில் சைவ மகா சபையின் தொண்டு பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.
காரை மாதேவி கையிற் பிடித்த அழகிய மணி விளக்காக சைவமகாசபை இயங்குகிறது. காரைநகர் என்ற பெண்மணி கையில் ஏந்திய கை விளக்கே சைவமகாசபை. 1915 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மேற்படி கட்டிடத்தில் ஒரு நூல்நிலையமும் வாசக சாலையும் உண்டு. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4–6 மணி வரையும் பிரார்த்தனைக் கூட்டமும் சைவப் பிரசங்கமும் இடம்பெறும். சபை ஆதரவில் நடைபெறும் வளர்ந்தோர் கல்வி நிலையத்தில் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் தேச வளர்ச்சிக் குரிய பல பிரசங்கங்கள் நடைபெறுகின்றன.

நால்வர் குருபூசைகளும் அவ்வக் காலங்களில் நடைபெறுகின்றன. சைவத் துறையிலும், தேச வளர்ச்சித் துறையிலும், தமிழ் வளர்ச்சித் துறையிலும், இசைத் துறையிலும் இன்னும் இன்னோரன்ன பல துறைகளிலும் இச்சபை தொண்டாற்றி வருகின்றது.

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள சிறந்த அறிஞர்கள் காலத்துக்கு காலம் விசேட தினங்களில் சொற்பொழிவுக்காக இங்கு அழைக்கப்படுகின்றனர்.

மேலை நாட்டுநாகரிகப் பற்றின் மிகுதியால் சைவப் பற்றுக் குறைந்து சமய உண்மைகளை அவமதித்து, கடவுள் வழிபாட்டை மறந்து, பேரளவிலே சைவர்களாக வாழும் மக்களை இச்சபை தனது விடாமுயற்சியாலே நல்லறிவு பெற்று உண்மைகளை உணர்ந்து, கடவுளை வழிபட்டு உண்மைச் சைவர்களாக வாழ்வதற்கு நல்ல வழிகளைக் காட்டி வருகின்றது என இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

திரு.ஆசைப்பிள்ளை அரசரட்னம் ஆக்கிய Your Country & Your College என்னும் நூலில் சைவ மகா சபை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. "Saivamaha Sabai" at Thangodai, Karainagar to promote education, religion & culture in the year 1924 by Muhandiram K.Muthukumaru as its president more details are dealt by Mr.S.Thambirajah B.Sc in his article". அந்நூலில் திரு.சி.தம்பிராஜாB.Sc(மாஸ்டர்)அவர்கள் எழுதிய "கடல்சூழ் காரைநகர்" என்னும் கட்டுரையில் சைவ மகா சபையின் தோற்றம், பணிகள் பற்றிக் குறிப்பிட்டு அச்சபையில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் தலைவராக இருந்த லண்டன் கேம்பிறிஜ் யூனியர் பரீட்சையில் சித்தியடைந்து அரச சேவையில் சேர்ந்த முதற் காரைநகர்ப் பெருமகன் முகாந்திரம். க.முத்துக் குமாரு அவர்கள் என்றும் இவர் முதற் காரைநகர் கிராமக்கோட்டு நீதவானாகவும் இருந்தவர் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் இச்சபை மாணவர்கள் நலன் கருதி செய்த தொண்டுகள் பல. அவையாவன:

1. சைவசமய வகுப்புகள் – திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் வித்தியாசாலை(காரை இந்துக் கல்லூரி) தலைமை ஆசிரியர் பிரமஸ்ரீ ஈ.கே.சுப்பிரமணிய ஐயர் அவர்களால் நடத்தப்பட்டது
2. சமயத் தேர்வுகள் நடத்துதல்.
3. சிவஞான சித்தியார் வகுப்பு – பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு.க.ஞானப்பிரகாசம்B.A, B.Sc அவர்களால் நடத்தப்பட்டது.
4. தமிழ்ப் பாலபண்டித வகுப்பு – ஸ்ரீமத்.சி.சுப்பிர மணிய தேசிகர் அவர்களால் நடத்தப்பட்டது.
5. இலக்கண இலக்கிய வகுப்பு–மேற்படி தேசிகரால் நடத்தப்பட்டது.
6. திருவிளையாடற் புராண வகுப்பு, பெரிய புராண வகுப்பு, திருமுறை வகுப்புகள்.
7. தேவாரங்களைப் பண்ணுடன் பாடுதல், பிழையற எழுதுதல், போட்டிகள் நடத்திப் பரிசில்கள் வழங்குதல்.
8. சமயகுரவர் சம்பந்தமான பேச்சுப் போட்டிகள், குருபூசைகள் நடத்துதல்.
9. காந்தி விழா, பாரதி விழா, வள்ளுவர் விழா போன்ற பெரியோர்களுக்கான விழாக்கள் நடத்துதல்.
10. வளர்ந்தோர் கல்வி
11. சர்வோதய மாதர் சங்கம் – 1952ல்
12. பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடுதல் – (விபரங்கள் பொன்விழா மலரில் காண்க.)
13. நூல் நிலையம் – 1926ஆம் ஆண்டில்347 தமிழ் நூல்கள் 279 ஆங்கில நூல்கள் 13 நாளிதழ்கள் – (நூல் நிலையத்துகுரிய நூல்கள் இன்றும் செல் அரிக்கப்பட்ட நிலையில் உள்ளன)

1967–1975 வரையான காலப்பகுதியில் வரலாற்றுப் பதிவுகள் எதையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் சபை தொடர்ந்து இயங்கி வந்தது.

முன்னைநாள் சைவ மகாசபையின் செயலாளரும் யாழ் மாவட்ட செயலகஇளைப்பாறிய பிரதம அதிகாரியுமாகிய திரு.அ.கனகசபை அவர்களது அஞ்சலி உரை மூலம் 1975–85 ஆண்டு காலப் பகுதியில் திரு.மு.ஆ.கந்தையா அவர்கள் சைவமகா சபையின் தலைவராக இருந்து சைவசமய வகுப்பு களை நடத்தியும், திரு.க.ஞானப்பிரகாசம் அவர்கள் மூலம் பெரியபுராண வகுப்பு, சிவஞானசித்தியார் வகுப்பு, திருவிளையாடற் புரண வகுப்பு ஆகியவற்றை நடத்துவித்ததுடன், முதியோர் வகுப்பும் இடம் பெற்றது எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் திருவாளர்கள், வச்சிரவேலு முதலியார், ஆ.ச.ஞானசம்பந்தன், வித்துவான் மு.மு, நடராஜன் ஆகியவர்களை வரவழைத்து சமய விரிவுரைகளை நடத்தியும் அவ்விழாவிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பையும் ஏற்று நடத்தினார் என்பதும் சைவ மகா சபையின் கட்டிடப் பணிக்கு நிதி உதவி புரிந்ததுடன். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலையை காரைநகரில் வரவேற்பதற்குரிய வரவேற்புச் சபை இயக்குனராகவும் பணியாற்றினார் எனவும்,விக்டோரியா கல்லூரி பிரிவுபசார மலர் மூலம் அறியப்படுகிறது.

திரு.மு.ஆ.கந்தையா அவர்கள் காரைநகர் சைவமகா சபையில் 1975–1985 வரை தலைவராக விளங்கிய காலத்தில் சமயகுரவர்களின் குருபூசையை நடத்தி, காரை வாழ் சிறார்களிடையே சைவ வாழ்வு சுடர் விட்டு ஒளிரப் பேச்சுப்போட்டிகள், திருமுறைப் போட்டிகளை நடத்தியும் வந்தார் என்று திருமதி.சரஸ் வதி யோகலிங்கம்(ஆசிரியை) கந்தையனார் கருத்து மலர் என்ற நூலில் தெரிவித்துள்ளார்.

1985ன் பின்னர் சர்வோதய இயக்கத் தலைவர் திரு.வை.சுந்தரமூர்த்தி அவர்கள் இப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். ஆனால் வரலாற்று ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.
இடப்பெயர்வுக்கு முன்னர் பேராசிரியர் வே.இராம கிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற பூரணை விழாக்களில் தமிழருவி.த.சிவகுமாரன், இளையதம்பி தயானந்தா போன்றோரின் கவியரங்கமும், திருமதி. விஜயலக்ஷ்மி ஜேக்கப் அவர்களின் வயலின் இசைச் கச்சேரியும் இச்சபையில் இடம் பெற்றன.

இருந்தபோதும்நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1991 இல் மக்கள் இடம் பெயர்ந்ததால் 1996 வரை இச்சபையின் செயற்பாடுகள் தேக்க நிலையில் இருந்தன. 1997 இல் இச்சபை மீளத் தொடங்கப்பட்டு கட்டிடம் புனரமைப்புச் செய்யப்பட்டு மறுபடியும் இயங்கி வருகிறது. புலம்பெயர் வாழ் அன்பர்கள் இச்சபையில் இயங்கி வந்த வாசிகசாலைக்கு சமய நூல்கள் அன்பளிப்புச் செய்வதாகவும் கூறியுள்ளனர்.
சைவமகா சபைக்குரிய நூல்கள் 650ஐ 1997 இல் திரு.வை.சுந்தரமூர்த்தி அவர்களது மகன் திரு.சு.சத்திய மூர்த்தி (வங்கியாளர்) அவர்கள் காரை பிரதேச சபை பொறுப்பதிகாரி திரு.ஆ. இராஜநாயகம் அவர்களிடம் கையளித்தார். செல் அரிக்கப்பட்ட நிலையில் இருந்த அந்நூல்களைப் பிரதேசசபை பொறுப்பதிகாரி கையேற்றார். எனினும் 2002 ஆம் ஆண்டில் மீளவும் அந்நூல்களை திரு.வை.சுந்தரமூர்த்தி அவர்கள் பெற்றுச் சென்று விட்டார். அவை கிடைக்கப் பெற்றால் அவற்றுடன் வரலாற்று ஆவணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1998–2004 காலப்பகுதியில் திரு.க.தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள் இச்சபையின் தலைவராக இருந்து சபையின் பணிகளை ஆற்றியுள் ளார். ஆனால் அவரால் எதையும் நினைவுகூர்ந்து கூற முடியவில்லை.

காரைநகர் சைவமகா சபை இளைஞர் சங்கம் 11.08.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி அளவில் சிவத்திரு.சிவபாதசுந்தர நாதர் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் புனரமைப்புக் கூட்டம் ஒன்றை நடத்தியது.

இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருவாளர்.க.மகேசன் அவர்கள் “மேன்மை கொள் சைவநீதி” என்ற பொருள் பற்றி உரையாற்றினார். “சமூக நலன் பேண இளைஞர்களின் பங்களிப்பு“என்ற பொருளில் திரு.க.தில்லையம்பலம், திரு.ப.ஐங்கரன், திரு.அ.சாந்தகுமார், செல்வி.ந.சைதன்யதேவி ஆகியோர் உரையாற்றினர் இவ்வாறு சபையின் பணிகள் மீண்டும் சிறப்பாக நடைபெறத் தொடங்கின.

இளைப்பாறிய அதிபர் திரு.க.தில்லையம்பலம் அவர்கள் தலைமையில் 2004.12.22ஆம் திகதி புதன்கிழமை பி.ப.3.00மணி அளவில் சபையின் பரிபாலனக் கூட்டம் இடம் பெற்றது. காரைநகர் சைவமகாசபை, சைவ மாதர் சங்கம், சைவ இளைஞர் சங்கம், சர்வோதய சமாஜம், சைவ ஆதீனம் ஆகியன இணைந்து செயற்படுதல் பற்றி ஆராயப்பட்டது. இக்காலப் பகுதியில் திரு.ஆ.இராஜநாயகம் அவர்களே செயலாளராக இருந்தார்.

முன்னாள்அதிபர்கள் ந.பரமசிவம், வி.கனகேந்திரம், செ.இராமுப்பிள்ளை மற்றும் திரு.ஆ.கபில், சு.குணரத்தினம், வெ.நடராசா(கச்சியப்பர் மன்றம்) எஸ்.மார்க்கண்டு, ஆ.நமசிவாயம், சி.கந்தசாமி, ஆ.ச.இசை ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். திரு.கணபதிப்பிள்ளை ஏகாம்பரம் அவர்களும் இச்சபையின் செயலாளராகப் பணியாற்றினார்.

பிரதேச சபையின் பொறுப்பதிகாரி திரு.ஆ.இராஜ நாயகம் அவர்கள் இச்சபையின் செயலாளராக இருந்த காலப் பகுதியில் அன்னாரது முயற்சியால் செயலகத்தின் உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.செல்வநாயகம் அவர்களின் உதவியால் இச்சபைக்கு ரூபா இரண்டு லட்சம் (ரூ.2,00,000/=) நிதியுதவி வழங்கப்பட்டு கட்டிடம் புனருத்தாரணம் செய்யப்பட்டதுடன் ரூ.50,000/= பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து சபை இயங்கத் தொடங்கப்பலரும் இச்சபையின் செயற்பாடுகளை ஊக்குவித்தனர். அவுஸ்திரேலியா காரை நலன்புரிச்சங்கம் மின் இணைப்பு, கூரை வேலை, கதவு வேலை போன்ற வற்றிற்காக ஒன்றரை லட்சம்ரூபா (ரூ.1,50,000/=) நிதி உதவி வழங்கியதுடன் பிளாஸ்ரிக் கதிரைகளும் (ரூ.50,000/=) வழங்கியது. எனினும் பாதுகாப்பு இன்மையால் இன்று கதிரைகள் எதுவும் இல்லை.

இந்து கலாசார அமைச்சராக இருந்த அமரர். திரு.தி.மகேஸ்வரன் அவர்கள் சபைக்கு சுற்று மதில் கட்ட மூன்று இலட்சம்ரூபா(ரூ.3,00,000/=) நிதி உதவி இந்து கலாசார அமைச்சின் மூலம் வழங்கினார். இச்சபையின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் போதிய மனிதவளம் பற்றாக்குறையாக இருந்தமை பெரும் வேதனைக்குரியது.

இருந்தபோதும் பூரணை தினக் கருத்தரங்கும் பொங்கல் விழாவும் மங்களகரமாக 15.01.2005 அன்றுஇடம் பெற்றுசபை மீண்டும் களை கட்டியது. எமது கலாசாரத்தையும், பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாக்க தமிழர் திருநாளாம் பொங்கல் விழா இடம் பெற்றமை பெருமைக்குரியதும் பாராட்டுக்குரியதும் ஆகும். இவ்விழா இன்று வரை திரு.செல்லையா சண்முகம் அவர்களால் தொடர்ந்து செய்யப்பட்டு வருவது பெருமைக்குரியது.

சபையின் பணிகள் போற்றத்தக்க வகையில் எழுச்சி பெற்றன. ஆன்மீக தியானக் கருத்தரங்கு தைப்பூச தினத்தன்று 25.01.2005 செவ்வாய்கிழமை பி.ப.3.30 மணியளவில் சிவத்திரு.சிவபாதசுந்தரநாதர் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் தொடங்கப் பட்டது. 2002 தொடக்கம் சைவமகா சபை மண்டபம் தனது ஆரம்பகால நோக்கை நிறைவு செய்யும் வகையில் காரைச் சிறார்களின் கல்விப் பணியில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்துள்ளது.

சபை மண்டபம் பௌர்ணமி தின விழா, ஆசிரியர் தின விழா, கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பதினான்கு (14) முன்பள்ளி மாணவர்களுக்கான செயற்பாட்டு நிகழ்ச்சிகள் முன்பள்ளி மாணவர் விளையாட்டுப் போட்டிகள் யாவும் இடம் பெறும் பொது மண்டபமாக பயனுள்ள வகையில் செயலாற்றி வருகிறது.இச்சபை வாசிகசாலை என்ற சிறப்புப் பெயருக்கமையஇன்று வரை உதயன் நாளிதழ் இங்கு வாசிக்கக் கிடைக்கின்றது.

இன்று சிவத்திரு.சிவபாதசுந்தரநாதர் தம்பிரான் சுவாமிகள் (தலைவர்), திரு.வே.சிற்சபேசன் (செயலாளர்), திரு.செ.சண்முகம் (பொருளாளர்), திரு.க.ஏகாம்பரம் (உதவிச் செயலாளர்), திரு.க.தில்லையம்பலம் முதலான உறுப்பினர்கள் இச்சபையின் நலன் கருதி பணியாற்றி வருகின்றனர்.

காரைநகரில் தொண்டு மனப்பான்மையுடன் சேவையாற்றுவதற்கு வேண்டிய ஆளணிப் பற்றாக் குறை பெரும் குறையாக நிலவுகின்ற போதும், கல்விமான்களினதும் பேரறிஞர்களினதும் எண்ணத் தில் உருவாகி சைவம், தமிழ், கலைத்துறைகளில் பணியாற்றி மக்களை உண்மைச் சைவர்களாக வாழ வழிகாட்டி இன்று எமது நாட்டில் மட்டுமல்ல உலகம் வாழ் உறவுகளின் நினைவுகளிலும் நிலைத்து, நூற்றாண்டு விழா (2015 இல்) காண விழையும் காரைநகர் சைவமகா சபையின் வரலாற்றுப் பெருமையைப் பேணிப் பாதுகாக்க எல்லாம் வல்ல மணற்காட்டு முத்துமாரி அம்பாளின் கருணையையும் ஆடும் கூத்துப் பெருமானாகிய சௌந்தராம்பிகா சமேத ஆண்டி கேணி ஐயனாரையும் வேண்டிப் பணிந்து நிற்கின்றோம்.

உசாத்துணை நூல்கள்


1. காரைநகர் சைவமகாசபை பொன்விழாமலர் – பதிப்பு 1967
2. ஈழத்துச் சிதம்பர புராணம்–வித்துவான் சோ.இளமுருகனார்– பக்கம்160, 146ஆம் பாடல்
3. காரைநகர் மான்மியம் – வித்துவான் F.X.C.நடராசா – பதிப்பு தை 2001, பக்கம்75
4. காரைநகர் தொன்மையும் வன்மையும்– திரு.ச.ஆ.பாலேந்திரன்டீ.யுபதிப்பு ஜீன்2002, பக்கம் 231
5. Your Country & Your College by Asaipillay Arasaratnam Page26.54, 14/9/2004
6. மு.ஆ.கந்தையா– விக்ரோறியாக் கல்லூரி – பிரிவுபசார மலர் – பக்கம் 25,26.
7. கந்தையனார் கருத்துமலர்


செம்மொழிச் செல்வி, அறநெறிச் செல்வி, தமிழ்த் திலகம், சிவநெறிப் பிரசாரகர் பண்டிதை. செல்வி.யோகா சோமசுந்தரம்B.A., Dip.in.Ed.



**Deepa Balachandran,** B.A. (Hons.), B. Ed., J.D.

**Criminal Defence Lawyer**

**Edward H. Royle & Associates, LLP**

## Know Your Rights*

## Have you been charged with assault?

It is a serious offence to assault a loved one. Section 265(1) of the Criminal Code defines assault in various ways. While most people recognize that hitting someone is an assault, many do not realize that even holding up your fist in a threatening manner qualifies.

In Ontario, police tend to have a zero tolerance policy for domestic charges. If any allegation is made that can support a conviction, charges will be laid, no matter how minor the alleged assault is.

It is important to note that it is not the complainant who is laying the charge. After police are contacted, the police lay the charge. Once a charge is laid, the complainant does not have the ability to drop the charge.

**If you are facing a criminal charge, you can depend on me to advocate for you and help you through the process.** As an experienced Criminal Defence Lawyer at Edward Royle & Associates, one of the largest criminal defence firms in the country, I understand the crippling effects a criminal conviction can have on your work prospects, travel and reputation. Efficiency and confidentiality are the hallmark of my practice. In addition, I also speak Tamil.

For a free consultation, contact me at

**647-622-3911.**

*Please note: The material on this advertisement is not intended as legal advice. If you are the alleged victim/complainant (not the person charged), I cannot offer advice. Please contact your local Victims Services office for assistance.

# Good news for Karainagar/Casuarina Beach Visitors!



**Looking for a place to vacation and rest your tired spirits? Take in the beauty of Karainagar while you stay at a newly renovated house, complete with modern amenities, located opposite the Karainagar Hindu College. Fully furnished and with the option of cooking facilities is available for rent on a daily basis.**

**For further information**

**contact 647-818-7443 or saibooks9@gmail.com**

# SOUTHERN AROMA

*Redefining the South Indian dining experience with a modern twist.*

@Southern Aroma
@SouthernAroma.ca

www.SouthernAroma.ca

# get 10 %

Located at **7200 Markham Rd. Unit 14**

(Markham & Denison)

Tel: **905-554-2255**

Get 10% off your next meal at Southern Aroma.

Offer expires November 30, 2016.



# Educating Their Minds and My Heart: Volunteering Overseas in Rural Jaffna

The courtroom dramas, the heated advocacy to protect the rights of my clients, the gratifying moment of proving their innocence are all aspects of my job that I love. But at times, I am reminded that my role is limited. My contact with clients often only happens as a result of their involvement with the criminal justice system. My relationship is perhaps best described as reactive, and this limited interaction often leaves me wanting. It was during such a time that I came across an interesting volunteering opportunity with comdu.it.

Founded by young professionals and students, comdu.it is an independent, Toronto-based network of changemakers interested in making meaningful connections between the diaspora and community-based, long-term sustainable development efforts in Sri Lanka.
Through its Associateship Program, comdu. it seeks to facilitate short-to-mid-term placements of diaspora technical experts in Sri Lanka. Comdu. it focuses on strengthening grassroots organizations that serve vulnerable communities in war-impacted, under-developed, rural and remote areas of the country. It was through this program that I applied to teach English as a Second Language in rural Jaffna.

Oori is located in the backwaters of Karainagar and does not enjoy the same privilege and wealth as the rest of the islet. The area disproportionately suffered and continues to suffer in the aftermath of the war. Following the end of the conflict, the area's residents were forcibly relocated to poorly supported camps. Oori is largely forgotten but for the work done by a few community groups. Even the sound of an auto is so out of place that it sparks excitement and curious stares.



The people of Oori rely predominantly on fishing for their survival. With issues over fishing quotas and rights and environmental factors, this often means that there is very little money to even provide for basic necessities such as food. Malnourishment is an issue that needs to be addressed and while schools provide free lunches to all students, this meal is often composed solely of rice and lentils. As a result, the children in Oori are petite in stature, and especially so in comparison to their counterparts in urban centres such as Jaffna and Colombo.

The Church of the American Ceylon Mission (CACM), one of comdu.it's local partners, operates the after-school program in Oori. The free program serves the educational needs of nearly 120 students and runs from 3:30 to 6:00 pm, Monday to Thursday and again on Saturdays. As part of this program, I was assigned to teach students in Grades 6 to 8.

My kids, as I call them, were like any students in Toronto in wanting to test the boundaries and challenge their teacher at every turn. On my first day, they quizzed me on my Tamil reading and writing skills. My first class found out that I could do neither and by the time I went to teach my next class, the whole school knew. They were quick learners,

and both witty and mischievous.

In anticipation of my trip and after consulting the Sri Lankan teaching curriculum guidelines, I prepared lesson plans. However, at times, we would spend longer than I anticipated on certain lessons. I found that many of the concepts that I thought would be familiar to my kids were, in fact, a mystery. For instance, during a lesson on identifying proper nouns, the majority of my kids had not heard of Rio Ice Cream in Jaffna. Likewise, despite living in Karainagar, they had only been to the nearby Casaurina Beach once and that too because the Church had taken them.

The kids were also surprised by my habit of giving them printouts to complete. Initially they thought they were being given a quiz. However, as soon as I told them the printouts were worksheets for them to complete at home, the printouts “mysteriously” vanished for the next day. When I implemented the rule that the sheets had to be done in class, I realized that some of my kids did not even know how to spell their own names. Each sheet had a different version of the child's name, if that portion of the sheet was completed at all. As a result, some lessons took longer than others and some were done away with completely so as to focus on the practical needs of the students. To be able to understand local needs first-hand and to immediately adapt myself to meet those needs was one of the best lessons that I learned through comdu.it's program.

More often than not, I was also on the receiving end of the children's caring attitude as they often rescued me from the ever menacing threat of the mussu kutty. And it's these experiences that are most reflective of my time in Oori. At one point, in trying to manage the growing mussu kutty crisis, the leaves of palm trees and dirt were being burned when the flame grew out of control and caught on to the tops of nearby trees and one of the pods used for teaching. With the closest fire department located in Kayts, it was the children who ran to get water from the well and teachers who tried to get tables and chairs from the burning pod. Within a matter of minutes, the fire had claimed the pod and a tree climber was called to stifle the fire on the trees. In Canada, on the other hand, we would be concentrating our efforts on safety as opposed to trying to salvage the building. And herein lies the security we Canadians feel in knowing these things can and will be replaced and that too in a timely manner.

There is a saying that tells us, “If you have food in your fridge, clothes on your back, a roof over your head and a place to sleep, you are blessed.” To that I'd add, if you don't have a memory of war and have never suffered through the agony of not knowing how you will survive, then you owe it to give back. I think I've been blessed to not know those things. Somehow, I got to be one of the “lucky” ones who survived and came to Canada at a young age so that my only recollections of war are those imprinted in my mind by the media. In a sense, I owe a debt to somebody to make our world a better place, in whatever way I can.

I'm grateful to comdu.it for giving me the opportunity to pay back some of that debt.

-Deepa Balachandran

Deepa practices at one of the largest criminal defence law firms in the Greater Toronto Area. She completed her J.D. at the University of Ottawa, B.Ed. in Intermediate to Senior Education at Lakehead University, and B.A. (Hons.) in English at the University of Toronto. She participated in comdu.it's Associateship Program in 2015-16. To learn more about how the program, please visit http://comdu.it.



தீபா பாலச்சந்திரன் அவர்கள்,
காரை மண்
பெருமை கொள்ளும்
முன்னாள் ஆசிரியர்
அமரர் வித்துவான்
மு. சபாரத்தினம் அவர்களின்
பேத்தியார் என்பது
இச்சந்தர்ப்பத்தில்
குறிப்பிடத்தக்கது.


வீடு, வியாபார நிலையங்கள்
வாங்க, விற்க...
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc.
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated
கமல் நவரட்ணம்
Kamal Navaratnam
Sales Representative
Direct: 416-671-4815
E mail:kamalhomesale@gmail.com
Trust and reliable services


ROGERS MOTORS
Service & Repairs
Rajah
Class Lic. Automotive Master Technician
45 Munham Gate, Unit # 7
Tel: 416-755-1846
Scarborough, ON. M1P 2B3
Fax: 416-755-9476

# காரைநகர் அபிவிருத்திச் சபை

புதிய வீதி (சிவன் கோவில் வீதி) காரைநகர், இலங்கை

**KARAINAGAR DEVELOPMENT SOCIETY**

New Road (Sivan kovil Veethy) Karainagar, Sri Lanka

Regd No : KR/AGA/SS/NGO/2006/02 Tel : 021 221 1757 E-Mali : kas20131@gmail.com



**போஷகர்**
திரு.தி.பரமேஸ்வரன்

**தலைவர்**
திரு.ப.விக்கினேஸ்வரன்

**உப தலைவர்**
திரு.மு.சு.வேலாயுதபிள்ளை

**செயலாளர்**
திரு.இ.திருப்புகலூர்சிங்கம்

**உபசெயலாளர்**
திரு.கை.நாகராஜா

**பொருளாளர்**
திரு.க.பாலச்சந்திரன்

**நிர்வாகசபை உறுப்பினர்கள்**
திரு.வே.சபாலிங்கம்
திரு.ந.பாரதி
திரு.இ.சிவசுப்பிரமணியம்

Dr.சு.நடராசா
திரு.இ.ஜெயராமன்
திரு.சி.கபிலன்
திரு.மு.பரந்தில்லைராசா
திரு.நா.பாலகிருஸ்ணன்
திரு.சி.குமாரசேகரன்
திரு.வே.முருகமூர்த்தி

**உள்ளகக் கணக்காய்வாளர்**
திரு.சு.அகிலன்


"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

என்ற புனிதமான வாக்குடன் புலம் பெயர் காரை உறவுகள் தம் சொந்த மண்ணை நேசிப்பது கண்டு மகிழ்வடைகிறேன். கனடா காரை கலாசார மன்றம் இவ்வாண்டும் காரை மக்களை ஒன்றிணைத்து காரை வசந்தம் நிகழ்வினை ஏற்பாடு செய்து நடாத்தும் பெரும் பணி பாராட்டுதற்குரியது. இந்நிகழ்வின் ஊடாக அனைவரும் ஒற்றுமைப்பட்டு தங்களையும் ஒரு பலமான சக்தியாக மாற்றுவதுடன் பிறந்த மண்ணுக்கும் சேவைசெய்ய முன்வருமாறு மன்றத்தினரை தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். பொதுசேவையில் ஈடுபடுவர்களிடம் சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, பொறாமைப்படாமை ஆகிய பண்புகள் இருத்தல் அவசியம்.

இன்று காரைநகரிலுள்ள எல்லா அரச நிறுவனங்களும் பல்வேறு ஆளணிப் பற்றாக்குறைகளுடன் இயங்குவதைப் பார்க்கின்றோம். இதனால் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதில்லை. கிராமிய பொருளாதாரத்தினை மேம்படுத்த மக்கள் தயங்குவதும் எமது பலவீனம். எமது மக்களின் சோம்பேறித்தனம் பெரும்பாலான குடும்பங்கள் பிறரின் கரங்களை எதிர்பார்க்கும் நிலைமைக்குத் தள்ளியுள்ளது.

இங்கு பல்வேறு போட்டி நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன. இது விளையாட்டு, கலைத்துறையினரையும் விட்டுவைக்கவில்லை. எமது இலக்கை அடைவதற்கு இவை துணைபுரிகின்றனவா என்று சிந்திக்க மறுக்கின்றனர். சமூக, பொருளாதார, கல்வி, கலை, சுகாதார, விவசாயமேம்பாடு தொடர்பாக பணியாற்றுபவர்களுக்கும், கொடைவள்ளல்களுக்கும் உறுதுணையாக இருப்பதற்குப் பதிலாக அவர்களுக்குக் பத்திரிகைகள், இணைத்தளங்கள், முகநூல்கள் ஊடாக சேறு பூசுகின்றனர். இவை தீர விசாரிக்காது ஊடாகத்துறையினரால் மேற் கொள்ளப்படுவதால் கல்வி, சுகாதாரம் உட்பட அரசதுறையினரின் விருப்பமற்ற நிலையங்களாக எமது சேவைநிலையங்கள் மாற்றம் பெற்றுள்ளன.

கடந்த காலங்களில் எமது வைத்தியசாலைத் தேவைகள் தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் கதைத்த பொழுது அவர்கள் ஊடாக அநாகரிகம் தொடர்பாக பிரஸ்தபித்தனர். அத்துடன் சிறப்பாக பணியாற்றிய பொறுப்பு வைத்தியர் ஊடாக அச்சுறுத்தல் காரணமாகவே அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இன்று புலமைப்பரிசில் பெறுபேறு வந்தவுடன் ஆசிரியர்களையும் அதிபர்களையும் தூற்றி எழுதுகின்றனர். 82.∴.மாணவர்கள் சித்தி பெற்றதாக கல்வித்துறையினர் அறிக்கைப் படுத்திய நிலையில் அதனை 69.∴.என மிகவும் குறைத்துக் காட்டி ஊடாக அநாகரிகத்தினை அரங்கேற்றியுள்ளனர். இதனால் கஸ்டப்பட்டுப் பணிபுரியும் அதிபர், ஆசிரியர்கள் இடமாற்றம் பெறமுயற்சிக்கின்றனர். இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு எமது ஊரின் பெயரில் இயங்கும் இணையத்தளம் பொறுப்பெடுத்துக் கொள்ளவேண்டும்.

கனடா காரை கலாசார மன்றம் காரை வசந்தம் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு 2013 இலும் இவ்வாண்டிலும் என்னை அழைத்திருந்தனர். அழைப்புக்கு நன்றி தெரிவிப்பதுடன் வருகை தராமைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். தங்களது ஆரம்ப பாடசாலை வைப்புநிதி ஒரு ஆரோக்கியமான செயற்திட்டம். எமது மாகாணத்தில் பல பாடசாலைகளில் இவ்வாறான நிரந்தரவைப்புகள் பழையமாணவர், நலன்விரும்பிகள், புலம் பெயர் அமைப்புக்களினால் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தினை மீறி பணத்தை மீளப்பெற திணைக்களம் எக்காலத்திலும் அனுமதிக்காது எனவே இந்த நிதி காலங்காலமாக தங்களது சேவையைப் பறைசாற்றும் என்பதில் ஐயமில்லை.

தங்களது மன்றம் காரை மக்களுக்குச் செய்யும் பல்வேறு சேவைகளுக்கு காரைநகர் அபிவிருத்திச்சபை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரைவசந்தம் 2016 சிறப்புறவும் தங்களது பணி தொடரவும் எல்லாம் வல்ல திண்ணபுரத்தில் உறையும் சுந்தரேஸ்வரப் பெருமான் அருள் கிடைக்கப் பிராத்தித்து வாழ்த்துகிறேன்.

ப.விக்கினேஸ்வரன்
தலைவர்
காரைநகர் அபிவிருத்திச் சபை


BALA SELVAM
JEWELLERY
FOREIGN MONEY EXCHANGE





உங்கள் எண்ணம் போல்
வண்ணம் கொண்ட தரமான
தங்க நகைகளுக்கு நாடுங்கள்

துரித பணமாற்றுச் சேவை
வாரத்தில் 7 நாட்களும்

416-264-4000
2480 Eglinton Ave., #6, Scarborough, ON. M1K 2R4



# புற்று நோய் குணப்படுத்தலில் தொலைத் தொடர்பாடலின் பங்கு

**பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன்**

புற்று நோய் என்பது உயிரணுக்களின் கட்டுப்படுத்த முடியாத அபரீத வளர்ச்சி. நூற்றுக்கு மேற்பட்ட வகையான புற்று நோய்களினால் 82 இலட்சம் மக்கள் ஒவ்வொரு வருடமும் உயிரிழக்கின்றார்கள். அடுத்த இரண்டு தசாப்தங்களில் உயிரிழப்போரின் எண் ணிக்கை 70 சதவீதத்தினால் அதிகரிக்கும் என உலக சுகாதார நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது.

தற்போது மூன்று வகையான புற்று நோய் சிகிச்சை அளிக்கும் முறைகள் உள்ளன. இதில் ஒன்று Chemotheraphy எனப்படுகின்ற புற்று நோய் மருந்து விநியோக அமைப்பு(drug delivery system) ஆனால், இந்த புற்று நோய் மருந்து விநியோக அமைப்பானது, ஆரோக்கியமான உயிரணுக்களையும் சேதப்படுத்தி பக்க விளைவு களையும் ஏற்படுத்துகின்றது.

எப்படி திறமையான புற்றுநோய் மருந்து விநியோக அமைப்பை வடிவமைத்து புற்று நோய் உயிரணுக் களை மட்டுமே சேதப்படுத்துவது என்பதே தற்போ தைய புற்றுநோய் ஆராய்ச்சியாளர்களினது சவாலாக உள்ளது. இதற்காக Nano Robot எனப்படுகின்றத கண்ணுக்கு தெரியாத, இரத்தத்தில் உள்ள சிவப்பு உயிரணுக்களைவிட சிறியதான செயற்கை இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்த Nano Robotகள் புற்று நோய் மருந்தை காவிச்சென்று ஆரோக்கியமான உயிரணுக்களை சேதப்படுத்தாமல், புற்று நோய் உள்ள இடத்தை அடைந்தவுடன் கதவை திறந்து மருந்தை விநியோகிக்கின்றன. அண்மையில் அமெரிக்க வுநஒயள மாநிலத்தில் உள்ள Houston என்னுமிடத்தில் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிலையத்தில் இந்த Nano Robot மருந்து விநியோக முறையை எலிகளில் பரீட்சித்து வெள்ளியும் அடைந்துள்ளார்கள்.

இரத்த ஓட்டத்தில் செல்லும் Nano Robot களை ஒழுங்குபடுத்தி புற்றுநோய் உயிரணுக்களை விரைவாக அடைந்து சேதப்படுத்துவதற்கு பொருத் தமான தொடர்பாடல் (communication) முறை அத்தியாவசியமாகின்றது.

நாம் எமது நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தும் தகவல் தொடர்பு அமைப்பானது மின்காந்த அலைகள்(Electromagnetic wave) அடிப்படையாக கொண்டது. ஆனால் இந்த மின்காந்த அலைகளை அடிப்படையாக கொண்ட தகவல் தொடர்பு அமைப்பானது, இரத்த ஓட்டத்தில் செல்லும் Nano Robot களை ஒழுங்கு படுத்த பொருத்தமற்றது. ஏனென்றால் மின்காந்த அலைகள் திரவ ஊடகத்தில் தேய்வடைகின்றன.

எனவே எப்படி Nano Robot களை ஒழுங்குபடுத் தலாம்? எப்படி தொடர்பாடல் மேற்கொள்கின்றன என்று பார்ப்போமானால், அவைகள் இரசாயன சமிக்ஞை (Chemical signal) மூலம் தொடர்பாடல் மேற்கொள்கின்றன.

உதாரணமாக அந்துப்பூச்சிகள்(Moth) 1.9கி.மீ தூரத்திற்கு தொடர்பு கொண்டு துணையைத் தேடுகின்றன. இதை Pheromone Signaling என்பார்கள். தமிழ் திரைப்பட பாடலில் வரும் “பறவையை கண்டான் விமானம் படைத்தான்” என்பது போல, உயிரினங்கள் பயன்படுத்தும் இரசாயன தொடர்பாடல் மூலம் இந்த Nano Robot களை ஒழுங்கு படுத்த முடியும். இந்த தொடர்பாடலை Molecular Communication என்கின்றோம். இந்த தொடர்பாடல் ஆராய்ச்சியானது தற்போது ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது. இந்த ஆராய்ச்சியில் வெற்றி பெற பல ஆண்டுகள் ஆகாலாம். இதில் வெற்றி பெற்றால் கோடிக்கணக்கான உயிரணுக்களை புற்று நோய் என்னும் கொடிய நோயில் இருந்து காப்பாற்ற முடியும்.

# Australia Karai Cultural Association

# அவுஸ்திரேலிய காரை கலாச்சார சங்கம்

2016 - 2017

தலைவர்
# J/MEIHANDAN VIDYALAYAM, KARAINAGAR

Mrs. P.Chandarajah
Principal.

வரவு செலவு அறிக்கை ...10.../.10.../2016...

| திகதி | விபரம் | வரவு | திகதி | விபரம் | செலவு |
|---|---|---|---|---|---|
| 01.06.2016 | மீதி/கீ/கொ/வ | 10,541.00 | 12.06.16 | தரம் 5 புலமைப் பரிசில் கருத்தரங்க வளவாளர் கொடுப்பனவு | 2000.00 |
| 01.06.2016 | வரவு | 29250.00 | | | |
| | | | 15.06.16 | சிற்றுண்டி பணம் | 800.00 |
| | | | 15.06.16 | தரம் 5 வளவாளர் கொடுப்பனவு | 1200.00 |
| | | | 17.6.16 | தரம் 5 வளவாளர் கொடுப்பனவு | 1200.00 |
| | | | 30.6.16 | பின்னூட்டல் வகுப்பு | 2500.00 |
| | | | 21.07.16 | சுற்றாடல் கொ/வு | 990.00 |
| | | | 30.07.16 | தரம் 5 செயலமர்வு வளவாளர் கொடுப்பனவு | 1200.00 |
| | | | | மீதி/கீ/கொ/வ | 29901.00 |
| | | 39791.00 | | | 39791.00 |

| திகதி | விபரம் | வரவு | திகதி | விபரம் | செலவு |
|---|---|---|---|---|---|
| 01.08.16 | மீதி/கீ/வ | 29901.00 | 16.08.16 | தரம் 5 பரீட்சை மாதிரி வகுப்பு வளவாளர் கொ/வு | 3000.00 |
| | | | 19.09.16 | ஆறுதல் வினாத்தாள் கொள்வனவு | 1425.00 |
| | | | 22.09.16 | அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி வினாவிடை தரம் 2 3/4/5 | 1274.00 |
| | | | 30.09.16 | பின்னூட்டல் August Septem | 6000.00 |
| | | | | மீதி/கீ/கொ/வ | 18202.00 |
| | | 29901.00 | | | 29901.00 |

# யா/சுப்பிரமணிய வித்தியாசாலை,காரைநகர்
# J/SUBRAMANIYA VIDYASALAI,KARAINAGAR.

Mrs.G.Arulmoly
Principal
0776618081

11/10/2016



தலைவர்,

காரை கனடா கலாசாரமன்றம்,

கனடா.

ஊடாக

தலைவர்,

காரை அபிவிருத்திசபை,

காரைநகர்.

அன்புடையீர்

தங்கள் மன்றத்தினூடாக எமது பாடசாலைக்கு வழங்கப்பட்ட ரூபா பத்துலட்சத்திற்கான வட்டிப்பணத்தினூடாக எமது பாடசாலையின் பல தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக அமைந்தது. காரை அபிவிருத்தி சபையின் ஊடாக இந்நிதியை வழங்குவதற்கு உதவிய தங்களின் மன்றத்திற்கு பாடசாலை சமூகம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

G. Arulmoly.
....................................
MRS.G.ARULMOLY
Principal
அதிபர்
J/Subramaniya Vidyasalai.
Karainagar

# யா/சுப்பிரமணிய வித்தியாசாலை,காரைநகர்
# J/SUBRAMANIYA VIDYASALAI,KARAINAGAR.

Mrs.G.Arulmoly
Principal
0776618081

23/09/2016

தலைவர்,

காரை அபிவிருத்திச்சபை,

காரைநகர்.

ரூபா பத்து இலட்சத்திற்கான வட்டிப்பணத்திலான செலவு விபரம் (01.06.2016 இல் இருந்து இன்று வரை)

**கற்றல் கற்பித்தல்**

| | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 31.05.2016 | மீதி | 556.00 | - |
| 01.06.2016 | ஒதுக்கம் | 14625.00 | - |
| 13.06.2016 | சு.தம்பிராசா | | |
| | தரம்5செயலமர்வுக்கையேடு | - | 2500.00 |
| | உபசரணை | - | 1250.00 |
| 08.07.2016 | க.கவிதா வளவாளர்June | - | 3000.00 |
| 07.09.2016 | க.கவிதா வளவாளர்July | - | 3000.00 |
| 23.09.2016 | மீதி | - | 5431.00 |
| | | 15181.00 | 15181.00 |

**இணைபாடம்**

| | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 31.05.2016 | மீதி | 3450.00 | - |
| 01.06.2016 | ஒதுக்கம் | 5850.00 | - |
| 23.09.2016 | மீதி | - | 9300.00 |
| | | 9300.00 | 9300.00 |

# யா/சுப்பிரமணிய வித்தியாசாலை,காரைநகர்
# J/SUBRAMANIYA VIDYASALAI,KARAINAGAR.

Mrs.G.Arulmoly
Principal
0776618081

23/09/2016

## குடிநீர், மின் சிறுதிருத்தம்

| | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 31.05.2016 | மீதி | 1234.00 | - |
| 01.06.2016 | ஒதுக்கம் | 5850.00 | - |
| 20.09.2016 | அ.காண்டீபன் | - | 1250.00 |
| 23.09.2016 | மீதி | - | 5834.00 |
| | | 7084.00 | 7084.00 |

## சுகாதாரம் மற்றும் உணவு

| | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 31.05.2016 | மீதி | 170.00 | - |
| 01.06.2016 | ஒதுக்கம் | 2925.00 | - |
| 29.08.2016 | சி.நிர்மலா | | |
| | பாடசாலைச்சுத்தம் | - | 400.00 |
| 20.09.2016 | சோ.கோவிந்தசாமி | | |
| | பாடசாலைச் சுத்தம் | - | 500.00 |
| | ச.சந்திரதாசன் | - | 355.00 |
| 23.09.2016 | மீதி | - | 1840.00 |
| | | 3095.00 | 3095.00 |

G. Arulmoly.
MRS.G.ARULMOLY
Principal
J/Subramaniya Vidyasalai.
Karainagar

**யா/ வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலயம்**
**காரைநகர்.**

**J/ VALANTHALAI NORTH A.M.T.M. VIDYALAYAM**
**KARAINAGAR.**

11/10/2016



தலைவர்,
காரை அபிவிருத்திச் சபை,
காரைநகர்.

வாழ்த்துச் செய்தி

மேற்படி பாடசாலைக்கு தங்களால் வழங்கப்பட்டு வந்த நிலையான வைப்பிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு நாம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்விச் செயற்பாடு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. எம் மாணவர்களும் பாதிக்கப்படாத வகையில் முன்னெடுக்கக் கூடியதாக உள்ளது. இவ்வுதவியால் தரம் 5 மாணவர்கள் மிகவும் பயனடைகின்றார்கள். இவ்வருடம் சிறந்த பெறுபேற்றை பெறக்கூடியதாக உள்ளது.

மேலும் ஏனைய தரத்திலுள்ள மாணவர்களும் இதனால் பயனடைகிறார்கள். தங்களது மன்றச் செயற்பாடு மென்மேலும் வளர்ச்சியடைந்து காரைநகர் சிறார்களுக்கு தொடர்ந்தும் உதவிகளை செய்வீர்களாயின் காரைநகர் மண்ணிலுள்ள சிறார்கள் மிகவும் உயர்ந்த நிலையை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

உங்கள் செயற்பாட்டால் எமது பாடசாலை கல்வியின் அபிவிருத்தி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே தங்களால் வெளியிடப்படும் ஆண்டுவிழா மலர் வெளிவர வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

V.Viswanathan
Principal
J/ Valanthalai North A.M.T.M.Vid
Karainagar

யா/ வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலயம்
காரைநகர்.

J/ VALANTHALAI NORTH A.M.T.M. VIDYALAYAM
KARAINAGAR.

15/09/2016.

தலைவர்,
காரை அபிவிருத்திச் சபை,
காரைநகர்.

## வரவு செலவு அறிக்கை.

| விபரம் | வரவு | விபரம் | செலவு |
|---|---|---|---|
| கார்த்திகை மாத வட்டி | 29250.00 | கற்றல் கற்பித்தல் செயற்பாடு | 30673.45 |
| வைகாசி மாத வட்டி | 29250.00 | இணைப்பாடவிதானம் | 940.00 |
| | | திருத்தம் | 10240.00 |
| | | சுகாதாரம், உணவு | 4530.00 |
| | | மீதி | 12116.55 |
| மொத்தம் | 58500.00 | | 58500.00 |

மீதிக்கான செலவு விபரம்

* 3ந் தவணை தரம் 3,4,5 இற்கான ஆறுதல் பேப்பர்.
* சிறுவர் நாடகம்.
* சுகாதாரம்.

* மேற்படி நிதியினால் எமது பாடசாலையில் மாணவர்கள் மிகவும் பயன் உடையவர்கள் ஆகின்றார்கள்.

* தரம் 5 மாணவர்கள் இவ்வருடம் நடாத்தப்பட்ட கருத்தரங்கின் பயன்பாட்டால் 70 புள்ளிக்கு மேல் கூடிய மாணவர்கள் சித்தி பெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

V. Viswanathan
Principal
J/ Valanthalai North A.M.T.M.Vid
Karainagar

J/ VALANTHALAI SOUTH A.M.T.M SCHOOL - KARAINAGAR
யா / வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை – காரைநகர்

07/10/2016

தலைவர்,
காரை கனடா கலாசார மன்றம்,
கனடா.

## வாழ்த்துச் செய்தி

காரை கனடா கலாசார மன்றத்தின் ஆண்டு விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். காரைநகர் பிரதேச பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தியில் காரை கனடா கலாசார மன்றத்தின் பணி அளப்பரியது. காரைநகர் பிரதேச பாடசாலைகளின் வளர்ச்சி கருதி தேசிய சேமிப்பு வங்கியில் ரூபா ஒரு மில்லியனை வைப்புச் செய்து அதற்குரிய வட்டிப் பணத்தை பாடசாலைகளின் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு வழிசமைத்த கலாசார மன்றத்திற்கு பாடசாலை சமூகத்தின் சார்பில் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வட்டி வருமானத்தின் மூலம் பாடசாலை மாணவர்களின் கற்றல், இணைப்பாட விதானம், குடிநீர், சுகாதாரம் மற்றும் மாணவர்களுக்குரிய புலமைப் -பரிசில் மாதிரி வகுப்புக்கள், கணனிக் கல்விக்கு, இத்தான செயல் முறை பரிட்சைகள் போன்றவற்றை நடத்தக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டினை அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருந்தது. தொடர்ந்தும் இனி வரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை மேம் படுத்த முடியும் என எதிர் பார்க்கிறேன்.

J/ VALANTHALAI SOUTH A.M.T.M SCHOOL - KARAINAGAR
யா / வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை – காரைநகர்

07/10/2016

மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்காக வழங்கப்படுகின்ற நிதியினை அதிகரித்து வழங்கும் பட்சத்தில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை மேலும் ஊக்கமடைய வைக்க முடியுமென நம்புகின்றேன். அத்துடன் எமது பாடசாலையில் கட்டட வேலைகள் நடைபெறுவதால் பாடசாலையின் சில வகுப்புக்களை தனியார் ஒருவரின் வீட்டிலேயே நடத்தி வருகின்றோம். இதனால் நாம் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்தே பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றோம். இந்த வருடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமையை சேர்த்தனர்.

எமது பிரதேச பாடசாலைகளின் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குகின்ற, கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயற்படுகின்ற எமது புலம்பெயர் உறவுகளான காரை கனடா நலன்புரி மன்றத்தின் ஆண்டு விழா மலர் சிறக்க மருதடி வீரகத்தி விநாயகரை வணங்கி மலர் சிறப்புற வெளிவர வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

Principal
J/ Valanthalai South A.M.T.M.S
Karainagar

# J/ VALANTHALAI SOUTH A.M.T.M SCHOOL - KARAINAGAR

## யா / வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை – காரைநகர்

07/09/2016

| திகதி | விபரம் | காசு | வங்கி | திகதி | விபரம் | காசு | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|
| 05.11.15 | வட்டி வருமானம் | | 29,250.00 | | கணினி ஆசிரியர் செலவு | | 12,000 |
| | | | | | இணைப்பாட விதானம் | | 5 500 |
| | | | | | சுகாதாரம் | | 6 800 |
| | | | | | குடிநீர் | | 1 600 |
| | | | | | ஆறுதல் பரீட்சை | | 3 350 |
| | | – | 29250.00 | | | – | 29,250 |
| 05.05.16 | வட்டி வருமானம் | | 29,250 | 05/08 | உதவியாளர் செலவு | | 3,000 |
| | | | | | பொருள் செலவு | | 1,642 |
| | | | | 31/08 | மீ/செ | | 24,608 |
| | | | 29,250 | | | | 29,250 |
| 01/09 | மீ/வ | | 24,608 | | | | |

Principal
J/Valanthalai South A.M.T.M.S
Karainagar

**J/ VALANTHALAI SOUTH A.M.T.M SCHOOL - KARAINAGAR**

**யா / வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை – காரைநகர்**

07/[illegible]/2016

தலைவர்
காரை கனடா கலாச்சார மன்றம்
கனடா.

கல்வி அபிவிருத்தி நிதி செலவு விபரம்.

காரை கனடா கலாச்சார மன்றத்தின் நிலையான வைப்பில் வட்டி வருமானமாக 05.11.2015 இல் 29,250.00 ரூபாவும் 05.05.2016 இல் 29,250.00 ரூபாவும் கிடைக்கப் பெற்றது. இதன் மூலம் மாணவர்களின் கற்றல், இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்தி மாணவர்களை போட்டியில் பங்கு கொள்ள வைக்க முடிந்தது. மேலும் இந் நிதியின் மூலம் தரம் 4, தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களின் சுற்றாடல் சார் செயன்முறை விருத்தியை மேம்பாடடைய வைக்க முடிந்தது. இதன் மூலம் 2016 இல் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய, மாணவர்கள், தோற்ற இருக்கின்ற மாணவர்களுக்கு பெருந்துணையாக அமைந்தது. ~~அத்துடன், இந்நிதி மூலம் மெல்லக், கற்கும் மாணவர்களுக்கான~~ விசேட செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். மேலும் இனி வரும் காலங்களில் அதிகரித்த நிதி கிடைப்பின் மாணவர்களுக்கான கற்றல் செயற்றிட்டங்களை நடைமுறைப் - படுத்த முடியுமென நம்புகின்றேன். இந் நிதி கிடைப்பதற்கு உதவிய காரை கனடா கலாச்சார மன்றத்திற்கு பாடசாலை சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- நன்றி -

**Principal**
**J/Valanthalai South A.M.T.M.S**
**Karainagar**

# யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் த.க வித்தியாலயம்
# J/Karai Uri American Mission Tamil Mixed Vidyalayam

காரைநகர் Karainagar

19.09.2016

தலைவர்/செயலாளர்,
காரை அபிவிருத்திச் சபை,
காரைநகர்.

**நன்றி தெரிவித்தலும் வரவுசெலவு அறிக்கையும்**

காரை அபிவிருத்திச் சபை எமது பாடசாலைக்கு பல்வேறு வழிகளில் உதவிபுரிந்து வருவதையிட்டு பொருமகிழ்ச்சியடைகின்றோம். அவ்வகையில் அதிகஸ்டப் பிரதேசத்திலுள்ள எமது வித்தியாலயத்திற்கு காரை அபிவிருத்திச் சபையினுடைய நிலையான வைப்பிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானமானது மாணவர் கற்றல்ச் செயற்பாடுகள், பாடசாலை நாளாந்த நடவடிக்கைகள என்பவற்றிற்கு பேருதவியாக அமைகின்றது.

அவ்வகையில் தரம் 3,4,5 வகுப்புக்களிலுள்ள கற்றலில் இடர்படும் மாணவர்களைத் தெரிவுசெய்து பாடசாலைக்குப் பின்னரான பரிகாரக் கற்றல் செயற்திட்டத்தை அன்றாடம் பி.ப 1.30 – 2.30 வரை செயற்படுத்துவதன்மூலம் மாணவர் அடைவில் முன்னேற்றத்தை காணமுடிகின்றது. இதற்கு உறுதுணையாகவுள்ள காரை அபிவிருத்திச்சபைக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது பாடசாலை 129 மாணவர்களைக் கொண்டிருப்பதனாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம் என்பன நிதிரீதியாக வலுவற்றிருப்பதனாலும் தங்களிடமிருந்து கிடைக்கும் நிதியை அதிகரிப்பதன் மூலம் பாடசாலையின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்க உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

..........................................
அதிபர்

R. SRITHARAN
PRINCIPAL
J/URI A.M.T.M.VID
KARAINAGAR

❖ 05.01.2016 தொடக்கம் 31.08.2016 வரையான காலப்பகுதிக்குரிய வரவு செலவு அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் த.க வித்தியாலயம்
J/Karai Uri American Mission Tamil Mixed Vidyalayam
ஊரி, காரைநகர் Uri, Karainagar

## வருமான செலவீன அறிக்கை

| திகதி | விபரம் | தொகை | திகதி | விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 05.11.2015 | வரவு | 29250.00 | 05.02.2016 | வகுப்பறை வர்ணப்பூச்சு | 4327.50 |
| 05.05.2016 | வரவு | 29250.00 | 15.03.2016 | விளையாட்டுப்போட்டி | 7700.00 |
| | | | 23.03.2016 | கற்றலில் இடர்படும் மாணவர் செயற்திட்ட வளவாளர் கொடுப்பனவு ஜனவரி – மார்ச் | 6000.00 |
| | | | 25.03.2016 | கற்றலில் இடர்படும் மாணவர் செயற்திட்டம் - கற்றல் உபகரணங்கள் | 7460.00 |
| | | | 29.04.2016 | வளவாளர் கொடுப்பனவு –ஏப்ரல் | 2000.00 |
| | | | 03.05.2016 | கட்புல செவிப்புல அறை மின் இணைப்பு | 2100.00 |
| | | | 13.05.2016 | மேலதிக குடிநீர் கொடுப்பனவு | 1080.00 |
| | | | 29.06.2016 | வளவாளர் கொடுப்பனவு – மே | 2000.00 |
| | | | 30.06.2016 | மேலதிக குடிநீர் கொடுப்பனவு | 940.00 |
| | | | 30.06.2016 | கட்புல செவிப்புல அறை ஜன்னல் திரைச்சீலை பொருத்தல்கள் | 4810.00 |
| | | | 30.06.2016 | கட்புல செவிப்புல அறை ஜன்னல் திரைச்சீலை | 1950.00 |
| | | | 22.07.2016 | Trip switch மாற்றியது | 2400.00 |
| | | | 01.08.2016 | வளவாளர் கொடுப்பனவு – யூன், யூலை | 4000.00 |
| | | | 31.08.2016 | வளவாளர் கொடுப்பனவு – ஆகஸ்ட் | 2000.00 |
| | | | 31.08.2016 | மொத்தச் செலவு | 48767.50 |
| | | | | மீதி | 9732.50 |
| | மொத்த வரவு | 58500.00 | | | 58500.00 |

........................
தயாரித்தவர்

........................
அதிபர்

R. SRITHARAN
PRINCIPAL
J/URI A.M.T.M.VID
KARAINAGAR

உ

"கற்றாங் கொழுகு"

# யா/தோப்புக்காடு மறை ஞானசம்பந்த வித்தியாசாலை

## காரைநகர்

# J/THOPPUKKADU MARAIGNANASAMPANTHA VIDYASALAI

## KARAINAGAR

**திருமதி. ம.தேவராசா**
**அதிபர்.**
Mrs. M.Thevarajah SP.Maths.Trd.
Principal.
**Tele Phone : 021 321 1746 - 075 9847419**

தலைவர்,
காரை அபிவிருத்திச் சபை
காரைநகர்.

05.10.2016

கனடா - காரை கலாசார மன்ற வருடாந்த கலைவிழா மலருக்கான செய்தி.

எமது பாடசாலை 25 வருடங்களின் பின்னர் 01.01.2011ம் ஆண்டு மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆகும். தரம் 04 வரையும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை தொடர்ந்து தரம் 05 வரை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 48 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியானது படிப்படியாக வளர்ந்து வருவதை அவதானிக்க கூடியதாயுள்ளது. பாடசாலையின் அமைப்பும் படிப்படியாக கவின் நிலைக்கும் உட்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் தேசிய மட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்களும் உள்ளனர். 2013ம் ஆண்டில் 02 மாணவர்களும் 2015ம் ஆண்டு 02 மாணவர்களும் அதிகூடிய புள்ளிகளை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மாணவச் செல்வங்களின் கல்வி அபிவிருத்தியை எதிர்வரும் காலங்களில் நல்ல பெறுபேற்றை எடுக்கும் வகையில் தயார்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. இவர்கள் கோட்ட, வலய, சபைகள் ஆகிய மட்டங்களில் சாதனை படைத்துள்ளார்கள்.

தங்கள் மன்றத்தினால் வழங்கப்பட்ட ஒரு மில்லியன் வட்டிப் பணத்தின் ஊடாக கற்றல், கற்பித்தல், இணைபாடவிதானம், சுத்தம் சுகாதாரம், மின் இணைப்பு, சிறு திருத்தம் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தி வருகின்றமையை குறிப்பிடக் கூடியதாயுள்ளது. இப்பணத்தினூடாக மாணவர்கள் மகிழ்வான கற்றலுக்கு ஏற்ப பாடசாலையை மாற்றியமைத்து எதிர்கால மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கு ஏற்றதாக உள்ளது. மேலும் எமது பாடசாலை மண்டபத்தின் உள்ளே வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி சீர் குலையாமல் வளமாகப் பெற வகுப்பறைகள் தேவையாக உள்ளது. வாசிப்பு படிக்கத்தை ஏற்படுத்த நூலக அறையும் அதற்கான தளபாட வசதிகளும் தேவையாக உள்ளன. விளையாட்டு முற்றத்தினை சமன்நிலைப்படுத்த சீர்படுத்த வேண்டியுமுள்ளது.

* கற்றல், கற்பித்தலுக்கு - 15,000.00
* இணைப்பாடவிதானம் - 6,000.00
* சுத்தம், சுகாதாரம் - 3,000.00
* மின் இணைப்பு, சிறு திருத்தம் - 3,000.00
* பிற செலவுகள் - 2,250.00

மேலும் தாங்கள் வழங்கிய சிறந்த பணியினை பாடசாலை சமூகம் போற்றுவதுடன் மென்மேலும் தங்களது உதவியை நாடி நிற்கின்றோம்.

ம. தேவராஜ்

MRS.M.THEVARAJAH
Principal
J/Thoppukadu Maraignanasampantha Vidyasalai
Karainagar.



உ
சிவமயம்

# யா/ பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
# J/ Palavodai Hindu Tamil Mixed School

Karainagar,
Jaffna.
அதிபர்
Principal



காரைநகர்
யாழ்ப்பாணம்.

19/10/2016

தலைவர்,
காரை அபிவிருத்திச் சபை.

மேற்படி பாடசாலைக்குத் தங்களால் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியானது மிகவும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக உள்ளது. எமது பாடசாலையில் வறிய மாணவர்களே கல்வி கற்றுக் கொண்டிருப்பதனால் அவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் அவர்களின் கல்விக்கான உணவின் பங்களிப்பிலும், குடிநீர் வழங்குவதற்கும் மாணவர்களுக்கு கற்றல் கையேடுகள், தரம் 5 பயிற்சி வினாத்தாள்கள், கற்றல் உபகரணங்கள் வாங்குவதற்கும் விளையாட்டுப் போட்டி பங்களிப்பிலும் சிறுவர் அரங்கு நாடக உடைகள் தயாரிப்பதற்கும் மற்றும் பாடசாலையின் சிறு சிறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் இந்நிதியானது பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. எனவே தங்களின் இவ் உதவிக்கு மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

PRINCIPAL
J/Palavodai H.T.M.School
KARAINAGAR.

உ
சிவமயம்

**யா/பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

**J/Palavodai Hindu Tamil Mixed School**

Karainagar,
Jaffna.
அதிபர்
Principal

காரைநகர்
யாழ்ப்பாணம்.

03/10/2016

தலைவர்,
காரை அபிவிருத்திச் சபை,

காரை அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்ட நிதியின் வட்டி வருமானத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவு விபரம் வருமாறு.

(1) பாடசாலையின் நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரம் திருத்தியமைக்காக ஏற்பட்ட செலவு - ரூபா 8000.00
(2) விளையாட்டுப் போட்டிக்காக உடற்பயிற்சி ஆடைகள் வாங்கியமை - ரூபா 3000.00
(3) விளையாட்டுப் போட்டிக்காக வாங்கிய பரிசுப் பொருட்கள் - ரூபா 2000.00
(4) பாடசாலை சுத்தம் செய்வதற்கு ஏற்பட்ட செலவு - ரூபா 2000.00
(5) மாணவர்களின் கல்வி உணவுக்கான சமையல்கூலி (மாசி, பங்குனி, வைகாசி, ஆனி, ஆடி) - ரூபா 10000.00
(6) மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் - ரூபா 3000.00
(7) மாணவர்களுக்கான குடிநீர் - ரூபா 1250.00

மொத்தச் செலவு ரூபா 29250.00

மேற்படி தங்களால் வழங்கப்பட்ட நிதியின் வட்டி வருமானம் எமது பாடசாலை மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் பெரிதும் உதவியமைக்கு நன்றி கூறுகின்றோம். மேலும் தொடர்ச்சியாக இவ் உதவியினை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

PRINCIPAL
J/Palavodai H.T.M.School
KARAINAGAR.



# வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபரின் வாழ்த்து செய்தி

கனடா காரை கலாசார மன்றத்தினால் வெளியிடப் படும் காரை வசந்தம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன். யாழ் காரைநகர் வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் அதிபர் என்ற வகையிலும் காரை வசந்தத்திற்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துகளை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கனடா காரை காரை கலாசார மன்றத்தின் சமூகப் பொறுப்புடமை அதனை நிறைவேற்றுவதால் அதன் துடிப்புமிக்க செயற்பாடுகள் குறிப்பாக தயாக மண்ணின் கண்மணிகளாக திகழும் மாணவ மணி களின் அழகான எதிர்காலத்தினை கட்டியெழுப்புவதற் காக கனடா காரை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளும் பணிகள் தெய்வீகப் பணிகளைவிட மேலான புண்ணிப் பணியாகவே நான் பார்க்கின்றேன். நம்மவர்கள் திரைகடலோடி திரவியம் தேடுவதில் வல்லவர்கள் அதிலும் காரை மண்ணின் மைந்தர்களுக்கு அதில் ஒரு தனியாமுமை இருக்கின்றது. நாம் தேடிய செல்வத்தை அல்லது அதன் ஒரு பகுதியை தம்மை ஈன்றெடுத்ததாய் மண்ணின் பழமைகள் தளைத்தோங்க வேண்டும். எண்ணத்தோடு மனமுவந்து வழங்குவதும் வழங்கிய உதவிகள் பயனுள்ள வகையில் பயன்படுத்தப் படுகின்றதா என்பதனை கண்காணித்து வழப் படுத்துவதும் வேறெந்த பிரதேசங்களிலும் காண முடியாத தனிச் சிறப்பாக அமைந்துள்ளது. பாராட்டுக்குரிய இந்த திட்டமிட்ட உதவும் கரமாக தொழில்படும் கனடா காரை அபிவிருத்திச் சபையும் அதன் துணை அமைப்புகளும் வளம் பெற்று வலிமை பெற்று வாறுலகும் பூவுலகம் உள்ளவரை நிலை பெறவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் போரின் கோரக் கரங்களில் சிக்கி சீரழிந்து இனங்கானா முடியாத வகையில் சிதைக்கப்பட்டு உருகுலைந்த நிலையில் 2011 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ம் நாள் திறக்கப் பட்ட போது அந்தப் பள்ளியின் முதல்வராக நான் பணியேற்றேன். ஏந்த வசதிகளும் இன்றி எதிர்காலம் பற்றிய மனஏக்கத்துடன் இறைவனாலும் கைவிடப் பட்டவர்கள் என்ற நிலையில் வாழும் ஏழைப் பிள்ளைகளை அரவணைத்து அவர்களுக்கு அரிய கல்வியை வழங்கும் முயற்சியில் நான் ஈடுபட்ட போது அன்றைய நாள்கள் எனக்கு நம்பிக்கையூட்டியவர்கள் காரை அபிவிருத்திச் சபையினர் குறிப்பாக திரு.ஜங்கரன், திரு.ந.பாரதி போன்றவர்களது உற்சாகப்படுத்தும் செயற்பாடும் அவர்களது உதவிகளும் எமது இன்று எழுச்சி பெறுவதற்கு வழிவகுத்தது என்பதனை இவ்விடத்தில் வலியுறுத்துவது எனது பணியாக அமைகிறது. ஆனால் எமது மாணவர்கள் கல்விசார் எழுச்சிநிலையை அடைவதற்கு முக்கியபங்கை வழங்கியது கனடா காரை கலாசார மன்றம் மட்டுமே என்பதனையும் நான் இவ் வாழ்த்துச் செய்திக்கூடாக பதிவு செய்ய விரும்புகின்றேன்.

"நூலும் இன்றி வாலும் இன்றி வானில் பட்டம் விடுவோமா" என்ற நிலையில் நான் இருந்த போது நூலாகவும் (நல்ல நூல்களை தெரிவு செய்து பெற்றுத் தந்தவர்கள் கனடா காரை கலாசார மன்றம் கனடா வாலாகவும் நாம் கல்வி வானில் சிறகடிப்பதற்கு வலுவாகவும்) நின்று எமது மாணவர்கள் கல்விச் சாதனைகள் நிலைநாட்டுவதற்கும் பக்கபலமாக செயற்பட்டமையை நாம் என்றும் நினைவிருத் துவோம். கனடா காரை கலாசார மன்றத்தினர் எமது பாடசாலைக்காக காரைநகர் அபிவிருத்தி சபையின் பெயரில் பத்து இலட்சம் ரூபாவை நிரந்தரவைப்புச் செய்து அதன் வட்டிப்பணமாக ரூபா 29,250.00 ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை (வருடத்தில் ரூபா 58,500.00) எமது பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி கணக்கில் இதுவரை இரண்டு தடவைகள்


TECHSOURCE
Computer & Electronics Liquidators
தமிழர் நிர்வாகத்தில்
ஸ்கார்பரோ மற்றும் அஜெக்ஸில்
We repair
Power Jacks
Motherboards
Laptop Screens
Towers and Desktops
We Carry
Computers and Laptops
RAM & Hardrive for Laptop and Desktop
Batteries for Laptops
Power adapters for Laptops
All brand laptops
TVs
DVD players
DVR security cameras
All kinds of cables
Printer ink cartridges and toner
Indoor and Outdoor Antennas
Weekly Flyer 24 hours Newspaaper Every Friday
MOHAN - VIJI - KANNA
Tel: 416-757-9111
Fax: 416-757-5666
Computer Sales and Service
Cell phone Accessories
HWY 401
Ellesmere Rd
Berchmount Rd
Shropshire
Kennedy Rd
Midland Ave
Lawrence Ave E
(416) 757-9111
1260 Kennedy Rd. (Kennedy & Shropshire)
Between Lawrence & Ellesmere
(905) 686-8324
279 Kingston Rd. E (Salem & Kingston)
Opposite Walmart Plaza, Beside the Shoppers Drug Mart
TERMS AND CONDITIONS:
PRODUCTS ARE AVAILABLE IN LIMITED QUANTITIES. PRODUCTS ARE LIMIT 1 PER CUSTOMER. PRODUCTS MAY NOT BE EXACTLY AS SHOWN AND MAY NOT BE AVAILABLE AT ALL LOCATIONS. PRICES AND AVAILABILITY ARE SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. TECHSOURCECANADA IS NOT RESPONSIBLE FOR ANY MISPRINTS OF ERRORS. ALL TRADEMARKS BELONG TO THEIR RESPECTIVE OWNERS. ALL PRODUCTS ARE 3% CASH DISCOUNTED. IF NOT PAYING BY CASH OR DEBIT. 3% WILL BE ADDED TO THE TOTAL. PLEASE VISIT WWW.TECHSOURCECANADA.CA FOR MORE INFORMATION
Rossland Rd, E
Hardwood Ave N
Kingston Rd, E
Salem Rd
Lake Ridge Rd
401 Hwy Of Heroes


THE MORTGAGE LEADERS Lic. #10238
All your Mortgage Needs
* Purchase & Refinance
* 2nd Mortgage
* Renewal or Switch
* Home Equity Loan
* Quick Close
உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அணுகுங்கள்
Gnana Gunaratnam
Mortgage Agent, Lic: #M15000007
Cell: 647-857-2277
Email: gnanag69@gmail.com
VERICO The Mortgage Leaders Inc.
UPH3-885 Progress Avenue, Toronto, ON M1H 3G3
VERICO MORTGAGE BROKERS NETWORK
Each VERICO Broker is an independent owner operator.
® registered trademark of VERICO Financial Group Inc.

# Kajanth Grocery

**Video - Vegetable - Money Transfer, Meat**

துரித பணமாற்றுச் சேவை, உலர் உணவுப் பொருட்கள்,
உடன் மரக்கறி, கோழி, ஆட்டு இறைச்சி,
கணவாய், இறால், மீன்
இன்னும் பல...........



S&Rentals of
Tamil Movies
Audios & CD's
Video Transfer
from any systems

**தமிழ்ப் படங்கள் ஓடியோக்கள், சீடிக்கள்
மற்றும் வீடியோ பிரதிமாற்றம்**

**KUMAR**
**Tel : 416-240-0039**

**1708 JANE ST. YORK, ON. M9N 2S4**
**(Jane & Lawrence)**




5930 Finch Ave E, Scarborough, ON

416-292-2622 | 416-293-2622




*Fresh Produce Affordable Price*
*Fantastic Deals!!*

# 416-269-2622

2607 Eglinton Ave E, Scarborough, ON






10 Karachi dr, Markaham ON

905-471-2828

# ERAA SUPERMARKET & WHOLESALE

## தரம், மலிவு என்றதும் நினைவில் வருவது

## இரா சூப்பர் மார்க்கெட் அண்ட் கேட்டரிங்!!!

Doing Business for the past 21 years Eraa Supermarket brings you the best quality Fresh Vegetables, Fresh poultry, Meat and a wide variety of Canadian, Sri Lankan, Indian and International Groceries at an Unremarkable Low Price!!



ATLANTA
AUTO COLLISION CENTRE
& Towing
Battery case, cables, clamos: Cranking and charging system Steering & Drive Train Components
Coolant reading Heating system Hoses Timing belt
Brake fluid Windshield washer fluid Power steering fluid Transmission fluid Intake Filter
360 OO Body Inspection & Underbody Checkup
All lights and signals
Full System analysis using OBD2 port Cabin Air Filter
Brake pads, Rotors, Suspensions, and other Components
Tread Depth Wear Patterns Inflation Pressure
Full Exhaust System & Chassis
WE BUY SCRAP CARS From $100 to $2000
100% Customer Satisfaction
வாகன விபத்தில் உங்கள் தவறாயின்
We pay your Deductible.
Scan Me
Body Work · Air Condition · Engine Transmission
Tune-Up · Brake Job · Electrical Work
Off:416-599-3333 Towing: 416-910-9280
126 Select Ave, Unit 03, Scarborough, ON | atlanta.auto@outlook.com


Airport Sky Limousine
Private Limousine Services ✻ Airport Services ✻ Niagara Falls Tours
Dir: 416-593-7500
Cell/Text: 416-471-7710
Toll-free: 1.888.314.6360
E-mail: airportskylimo@gmail.com
www.airportskylimo.com

# With Best Compliments



# Pre Construction Condo
# New Developments
# Coming Soon Projects
# Featured Projects

## Please Call Ranjson at 647.406.6352




**Top 5% Sales Rep In Canada**

Ranjson Kanapathippillai
Sales Representative

Dir: 647-406-6352
Email: ranjson@rogers.com
**www.ranjson.com**

**HomeLife/Future Realty Inc.,*Brokerage****
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229 205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8

HOMELIFE
HIGHER STANDARDS


Special Care For Nervous Drivers
Driving For All Ages
Discount Certificate for car Ins (With full course)
Early Road Test Arrangements
Defensive Driving Course (C.S.C)
Individual Lessons are also Available
MILLENNIUM DRIVING SCHOOL
M.T.O. Approved Beginner Driver Edu. Course Provider
A. A. KANDASAMY
3098 Danforth Ave. Suite #D Scarborough, ON. M1L 1B1
Tel: 416 699 4747 Cell: 416 569 1421


Be Mortgage-Free
Faster
Professional Mortgage Solutions
by reputed mortgage professional with banking
and mortgage management experience
Sri T. Sridharan, B.Sc. AICB
Director/Mortgage Professional
FINMOR
FINANCIAL SERVICES
You deserve much more than you think
Dir: 416-953-3297 Fax: 416-287-2483 E-mail: sridharan@finmor.ca
10 Milner Business Court, Suite 208, Toronto, ON, M1B 3C6

## காரைநகர் செய்தித் துளிகள்:

– காரைநகர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு கனடா காரை கலாசார மன்றத்தினால் வழங்கப்பட்ட நிலையான வைப்பு நிதியின் வட்டியினை பாடசாலை அடிப்படைத் தேவைகளுக்காகப் பயன்படுத்துவது தொடர்பான முன்னேற்ற கூட்டம் செப்ரெம்பர் 15இல் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் ஓய்வு நிலை வட மாகாணக் கல்விப் பணிப்பாருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் காரைநகர் மாணவர் நூலகத்தில் இடம்பெற்றது.இதில் காரைநகர் கோட்ட பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

– சுவிஸ் காரைஅபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் அதன் மொழி,கல்வி,கலைமேம்பாட்டுக் குழுவினரின் ஒழுங்கமைப்புடன் காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்டமாணவர்களுக்காகஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வருகின்ற பல்வேறு திறன்களை உள்ளடக்கிய போட்டிகள் செப்ரெம்பர் 24ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் காரைநகர் இந்துக் கல்லூரியில் இடம்பெறுது.

– காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் பரிசளிப்பும் கலைவிழாவும் ஒக்ரோபர் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் இடம்பெறுது.இவ் விழாவில் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டார்.

– சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சினால் ஒக்ரோபர் 01 முதல் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு பாற்சிசுக்களுக்கான பரிசில்களாக மேலதிக நிதி உதவி வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிறக்கும் இரட்டைக் குழந்தைகளுக்காக ஒரு மாதத்திற்கு ஐயாயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு 60 ஆயிரம் ரூபாவும் மூன்று குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான குழந்தைகளைப் பிரசவிக்கும் போது ஒரு மாதத்திற்கு பத்தாயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவும் வழங்கப்பட உள்ளதாக வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– காரைநகர் பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் ஆண்டு இதழான கலங்கரை – 2016 இதழுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. காரைநகர் பிரதேசத்தின் கலை,இலக்கியம்,தொல்லியல்,பண்பாடு ஆகியவற்றை ஆவணப்படுத்துகின்ற வகையில் வெளியிடப்படுகின்ற கலங்கரை ஆண்டிதழ் இவ்வாண்டும் வெளியிடப்படவுள்ளது.

இம் மலரில் பிரசுரிப்பதற்காக காரைநகர் பிரதேசம் பற்றியதான அல்லது வாழ்ந்துகொண்டிருக்கின்ற மற்றும் மறைந்த ஆளுமைகளின் சரித்திரம் சாதனைகள் தொடர்பான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.டிசெம்பர் மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும் இம் மலருக்கான ஆக்கங்களை நவம்பர் மாத இறுதிக்குள் வழங்குமாறு காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு அறிவித்துள்ளார்.

– கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் காரைநகர் கோட்டத்தில் பத்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை – பாரதி டர்ணிகன் (177புள்ளி) மா.சாளினி (161 புள்ளி)

யாழ்ற்ரன் கல்லூரி –செல்வராசா தர்சிகா (160 புள்ளி) சிவநாதன் அபிநஜா (158 புள்ளி) கருணேஸ்வரன் மிதுசா (157 புள்ளி)

ஊரி அ.மி.த.க.பாடசாலை – காண்டீபன் ஜதுர்சிகா (170 புள்ளிகள்)

மெய்கண்டான் வித்தியாசாலை –புவிராஜசிவம் கஸ்தூரி (160 புள்ளி)

வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலையம் – முரளிதரன் வஜிதரன் (167 புள்ளி)

சுப்பிரமணிய வித்தியாசாலை – கிருஸ்ணமூர்த்தி ஆர்த்திகா (164 புள்ளி)

வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை– ஜெகதீஸ்வரன் சாகித்தியா (158புள்னிகள்)

– காரைநகர் பிட்டியெல்லைக் கிராமத்தில் வெள்ளத்தினால் பாதிப்படைந்த 09 குடும்பங்களிற்கு எஸ்.கே.நாதன் நற்பணி மன்றத்தின் பணிப்பாளர் பரோபகாரி சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்கள் வீடமைப்பதற்கான காணிகளை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார்.

– காரைநகர் சீனோர் படகுத் தொழிற்சாலையை மீளப் புனரமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா ஆகஸ்ட் 23இல் இடம்பெற்ற போது கடற்தொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நினைவுக் கல்லினைத் திறந்து வைத்தார். இந்த ஆரம்ப விழாவில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்தகொண்டனர்

288 மில்லியன் ரூபா செலவில் புனர் நிர்மாணம் செய்யப்பட உள்ள காரைநகர் படகுத் தொழிநிசாலையில் சர்வதேசத் தரத்திலான மீன்பிடிப் படகுகள் உற்பத்தி செய்யப்பட உள்ளது.இந்த படகுத் தொழிற்சாலையின் புனரமைப்புப் பணிகள் 2017 யூலை மாதம் நிறைவு பெற்றதும் தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட உள்ளது. 1990 இல் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கு முன்னர் இந்த தொழிற்சாலையில் வடபகுதியைச் சேர்ந்த 1500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

– காரைநகர் அல்லின் வீதியில் உள்ள மிகப் பழமையான சிறிய முருகன் ஆலயம் ஒன்று ஆகஸ்ட் 21 இல் பாலஸ்தானம் செய்யப்பட்டு அந்த ஆலயம் முற்றாக இடித்தளிக்கப்பட்டமை அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

– காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்திய மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு யூலையில் இடம்பெற்றது. தமிழருவி த.சிவகுமாரன் அவர்களின் சிறப்புச் சொறிபொழிவும் கலை நிகழ்வுகளும் தமிழருவி தலைமையிலான சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெற்றது.

– காரைநகர் இந்துக்கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் யூலை 08 இல் கல்லூரியின் பதிலதிபர் திருமதி கலாநிதி சிவநேசன் தலைமையில் இடம்பெற்றது.வடக்கு மாகாண சிறுவர் நன்நடத்தைத் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ஆ.குமரேசமூர்த்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

– சர்வதேச விதவைகள் தின நிகழ்வு யூன் 03ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத்தில் நடாத்தப்பட்டது.காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில்

– பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் யூலை 2ம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெற்றது.

– யாழ் மாவட்டச் செயலகத்தினால் நடாத்தப்பட்ட பிரதேச செயலக தெரிவு அணிகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான முப்பாச்சலில் காரைநகர் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த சிவசத்திவேல் கோகுலன்(மல்லிகை,காரைநகர்) இரண்டாம் இடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவானார். காரைநகர் பிரதேச செயலர் பிரிவிலிருந்து நீண்ட காலத்திற்குப் பின் மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
காரைநகர் இந்துக் கல்லூரியிலிருந்து இவர் கடந்த ஆண்டு பாடசாலைகளுக்கிடையிலான முப்பாச்சல் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றியிருந்தார்.

– காரைநகர் மழலைகள் பூங்கா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த யூன் 30இல் பாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் பி.செல்வக்குமாரும் சிறப்பு விருந்தினராக தபாலதிபர் க.நிமலதாசனும் கௌரவ விருந்தினராக லண்டனிலிருந்து வருகை தந்துள்ள முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர் இ.சிவசுப்பிரமணியமும் கலந்துகொண்டனர்.

– கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா யூலையில் இடம்பெற்றது. சங்கச் செயற்குழு உறுப்பினர் ஆ.பரஞ்சோதி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் புதிய கட்டடத்தினை திறந்துவைத்தார்.

– இலங்கைப் போக்குவரத்துச் சபை காரைநகர்சாலையின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுமாறு காரைநகர் அபிவிருத்திச் சபையிடம் காரைநகர் சாலை அபிவிருத்திக் குழுவினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமைக் அமைய சுவிஸ் நாதனினால் உதவிகள் வழங்கப்பட்டன.

– காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திரி தள ராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா யூன் 02 இல் இடம்பெற்றது. காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த இராமநாதர் சிவசுப்பிரமணியம் குடும்பம் உபயமாக பல மில்லியன் ரூபா செலவில் திரி தள இராஜ கோபுரம் கருங்கல்லினால் அமைக்கப்பட உள்ளது.

– காரைநகர் புகலி சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் இடம்பெற்ற சர்வ கல்யாண சம்பத்ர தாயக மகா யாகம் கடந்த யூனில் இடம்பெற்றது.

– இந்துக் கல்லூரியில் 25 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய அமரர் கலாநிதி ஆ.தியாகராசா அவர்களின் நூற்றாண்டு விழா யூன் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறது.கல்லூரியின் பதிலதிபர் திருமதி கலாநிதி சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினராக காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாண கல்வி அமைச்சின் ஓய்வு நிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரனும் கௌரவ விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணமும் கலந்து கொண்டனர்.
"கல்வி அபிருத்தியில் தியாகராசா புலமைப் பரிசில் நிதியம்" என்ற தலைப்பில் தியாகராசா புலமைப் பரிசில் நிதிய ஸ்தாபகரும் அதன் செயலருமான வே.சபாலிங்கமும் "காலத்தால் அழியாத தியாகம்" என்ற பொருளில் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலனும் சிறப்புரையாற்றியதுடன் நினைவுப் பேருரையினை கல்லூரியின் முன்னாள் அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயதபிள்ளை நிகழ்த்த.சிந்தனை அரங்கம்.இசை சமர்ப்பணம்.உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

– அமரர் சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி கலாநிதி சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்களின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் ஆலய வழிபாடு என்னும் நூல் வெளியீடும் ஏப்ரல் 24இல் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,சிம்மயாமிஷன் ஜாக்ரதசைதன்யா சுவாமிகள்,பேராசிரியர் இ.குமாரவடிவேல்,சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் உள்ளிட்ட பலர் நினைவுரை ஆற்றினர்
"ஆலய வழிபாடு" என்னும் நூலும் வெளியிடப்பட்டது.நூலின் முதற் பிரதியை கொடைக்கோ பே.நாகரட்ணம் பெற்றுக்கொண்டார் நயவுரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தினார்.

– காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவ குரு சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக்குருக்களும் அவரது மகன் சாந்தஸ்வரூபக்குருக்களும் அகால மரணமடைந்தனர்.

– சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் சமூக பாதுகாப்புக் கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது
மரணக் கொடுப்பனவு ஐயாயிரம் ரூபாவினாலும் மகப்பேற்றுக் கொடுப்பனவு திருமணக் கொடுப்பனவு என்பன 2500 ரூபாவினாலும் வைத்தியசாலைக் கொடுப்பனவு 1500 ரூபாவினாலும் சிப்தொற புலமைப் பரிசில் கொடுப்பனவு 12,000 ருபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை காலமும் பிள்ளைப் பேற்றிற்கு 3 தடவைகள் தலா 5000 ரூபாவும் திருமணக் கொடுப்பனவாக 2 தடவைகள் 5000 ரூபாவும் வழங்கப்பட்டு வந்தது இக் கொடுப்பனவு ஜனவரி தொடக்கம் 7500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
மரணக் கொடுப்பனவாக வழங்கப்பட்ட 10,000 ரூபா கொடுப்பனவு 15,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களக்கு நாள் ஒன்றிற்கு வழங்கப்பட்ட 200 ரூபா கொடுப்பனவு 250 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இக் கொடுப்பனவு ஆகக் கூடியது 30 நாட்களுக்கு மாத்திரமே வருடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
அத்துடன் சமுர்த்தி பயனுகரிகளின் பிள்ளைகள் க.பொ.த உயர்தரக் கல்வியினைக் கற்பதற்கு வழங்கப்பட்ட சிப்தொற புலமைப் பரிசில் கொடுப்பனவு ஆயிரம் ரூபாவிலிருந்து ஆயிரத்து ஐந்நூறாக அதிகரிக்கப்பட்டுள்ளது.இது உயர்தரக் கல்வியைக் கற்கும் 24 மாதங்களுக்கு மாத்திரமே வழங்கப்படும்.காரைநகரில் 1880 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சிப்தொற புலமைப் பரிசில் கொடுப்பனவு 50 பிள்ளைகளுக்கு தற்போது காரைநகரில் வழங்கப்பட்டு வருகின்றது.

## கனடா காரை கலாசார மன்றத்தினால் இவ்வாண்டு காரைநகரில் செயற்படுத்திய திட்டங்களில் சில

01) கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் கோட்டப் பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காரைநகர் அபிவிருத்திச் சபை நூலகத்தில் வட மாகாணக் கல்வியமைச்சின் ஓய்வு நிலைப் பிரதிச் செயலரும் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவருமான உயர்திரு ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.
வடகடல் நிறுவனத்தின் தலைவரும் சபையின் போஷகருமான தியாகராசா பரமேஸ்வரன்,யாழ் பல்கலைக் கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை யோகரத்தினம்,காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தின் அறங்காவலரும் முன்னாள் காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவருமான மகாராணி சோமசேகரம்,ஊரி அ.மி.த.க.பாடசாலையின் முன்னாள் அதிபர் இ.சிறிதரன் அவுஸ்ரேலிய காரை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரும் பொறியியலாளருமான எஸ்.மகாதேவன் ஆகியோர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கினர்.

02) கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் சர்வதேச விதவைகள் தின நிகழ்வு காரைநகர் அபிவிருத்திச் சபை மாணவர் நூலகத்தில் நடாத்தப்பட்டது.
காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ் மாவட்டச் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் திருமதி ச.பரமானந்தம், காரைநகர் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வ.நிதர்சன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கியதுடன் காரைநகர் பிரதேசத்தில் உள்ள விதவைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.
யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட சுமார் நூறு பயனாளிகளுக்குத் தென்னம் பிள்ளைகளும் இன்றைய நிகழ்வில் வழங்கப்பட்டது.
கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில்காரைநகர்அபிவிருத்திச்சபைஉறுப்பினர்கள்,அங்கத்தவர்கள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

03) கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்களுக்கான நான்கு கல்விக் கருத்தரங்கு இவ்வாண்டு யாழ்ற்ரன் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்டது.
காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஓய்வுநிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற கல்விக் கருத்தரங்கில்காரைநகரில் உள்ள 11 ஆரம்பப் பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 160 மாணவர்கள் இக் கல்விக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்
கடந்த 7 வருடங்களுக்கு மேலாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கல்விக் கருத்தரங்குகள் மற்றும் ஊக்குவிப்புப் பரிசில்கள் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இவ்வாண்டு முதல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் கனடா காரை கலாசார மன்றத்தின் அனுசரனையுடன் கல்விக் கருத்தரங்குகளை நடாத்தி அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.
04) தாய் தந்தையை இழந்த மாணவன் நக்கீரனுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு தொடர்ச்சியாக மாதாந்தம் வங்கப்பட்டு வருகின்றது.

## காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவில் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2016

| தொடர் இலக்கம் | திட்ட விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| 01 | திக்கரை முருகமூர்த்தி கோவில் சிறு திருத்த வேலை | 100,000.00 |
| 02 | காரைநகர் பிரதேசத்திற்கான வரவேற்பு வளைவு அமைத்தல் | 2,500,000.00 |
| 03 | நெய்தல் கிராமத்திற்கான கிணறுகள் புனரமைப்பு | 100,000.00 |
| | தோப்புக்காடு ஐயர் கிணறு புனரமைப்பு | 200,000.00 |
| | சாம்பலோடை குழியல் கிணறு புனரமைப்பு | 80,000.00 |
| | சாம்பலோடை குடிநீர் கிணறு புனரமைப்பு | 120,000.00 |
| 04 | தங்கோடை கி.அ.சங்க கட்டடம் மீள் கட்டுமானம் | 200,000.00 |
| 05 | பத்தர்கேணி வன்மீக விநாயகர் கோவில் புனரமைப்பு | 100,000.00 |
| 06 | கல்வந்தாழ்வு முருகன் கோவில் சிறுதிருத்தம் | 100,000.00 |
| 07 | யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்திற்கு வகுப்பறைக்கட்டடம் மீள அமைத்தல், போட்டோக்கொப்பி இயந்திரம் வழங்கல், பாண்ட் வாத்தியக்கருவிகள் வழங்கல் | 500,000.00 |
| 08 | யா/காரைநகர் இந்துக்கல்லூரியில் துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் அமைத்தல், வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல் | 1,000,000.00 |
| 09 | பாலாவோடை ஞானவைரவர் ஆலயத்திற்கு உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் வழங்கல் | 50,000.00 |
| 10 | தன்னைப் பிள்ளையார் கோவில் புனரமைப்பு | 50,000.00 |
| 11 | பாலாவோடை முத்துமாரியம்மன் ஆலயம் திருத்தம் | 100,000.00 |
| 12 | சித்திரகூட சித்திவிநாயகர் கிட்டங்கிப் பிள்ளையார் ஆலயம் புனரமைப்பு | 500,000.00 |
| 13 | காளிகோவில் திருத்தம் | 100,000.00 |
| 14 | பிள்ளையார் கோவிலுக்கு உபகரணங்கள் வழங்கல் | 50,000.00 |
| 15 | வைரவர் கோவிலுக்கு உபகரணங்கள் வழங்கல் | 50,000.00 |
| 16 | பிரதேச இளைஞர்கழகங்களின் சம்மேளனத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் | 25,000.00 |
| TOTAL | | 5,925,000.00 |

## காரைநகர் பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

| தொடர் இலக்கம் | திட்ட விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|
| 01 | காரைநகர் பிரதேச சபைக்கான தலைமை அலுவலக கட்டடம் அமைத்தல் | 15Mn |
| 02 | நெய்தல் கிராமத்தின் 2வது ஒழுங்கை புனரைமப்பு | 0.2Mn |
| 03 | சிதம்பராமூர்த்தி கேணியடி – சந்தம்புளியடி வீதி புனரமைப்பு | 10.0Mn |
| 04 | நம்பாவளை வீதி புனரமைப்பு | 4.0Mn |
| 05 | மில் வீதி புனரமைப்பு | 3.5Mn |
| 06 | தண்ணீர்த்தாங்கி அமைத்தல் | 0.4Mn |
| 07 | கசூரினா கடற்கரை அபிவிருத்தி வேலைகள் | 3.7Mn |

## 2016 ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களின் விபரம் - யாழ்ப்பாண மாவட்டம்

| தொடர் இலக்கம் | திட்ட விபரம் | அண்ணளவான மதிப்பீடு(மில்லியன்) |
|---|---|---|
| 01 | வகுப்பறைக்கட்டடம் - வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை | 6.5 |
| 02 | வகுப்பறைக்கட்டடம் - யாழ்ற்றன் கல்லூரி | 6.5 |
| 03 | மாதிரி நூலகமும் கணனி மூலையும் - சுப்பிரமணிய வித்தியாசாலை | 8 |
| 04 | விளையாட்டு முற்றம் - வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை | 0.725 |
| 05 | விளையாட்டு முற்றம் - காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை | 0.725 |
| TOTAL | | 22.45 |


Bharat Studio
Since 1940 in Jaffna
Soma 416 566 9552
905 507 2999
email- bharatstudio1940@gmail.com
உங்கள் மனங்கவரும் புகைப்படங்களுக்கு
பாரத்
ஸ்ரூடியோ
Professional Photographs for your Special Occasions

# நன்றி நவிலல்

காரை வசந்தம் 2016 விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக பிரித்தானியாவில் இருந்து வந்து கலந்து கொண்டு சிறப்பித்த பேராசிரியர் ஆறுமுகம் நல்லநாதன், சுவிஸில் இருந்து இருந்து வந்து கலந்து சிறப்பித்த சிவத்தமிழ் காவலர் ஆறுமுகம் செந்தில்நாதன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் மற்றும் இவ்விழாவிற்கு விழாவில் கலை ரசங்களைத் தயாரித்து விமரிசையாகப் பார்வையாளர்களைக் கலை உலகுக்குள் அழைத்துச் சென்ற கலைஞர் பெருமக்களுக்கும், அக்கலைப் படைப்புகளை சுவைத்து மகிழ்ந்து கொண்டிருக்கும் கலை ரசிகப் பெருமக்களுக்கும்,

தமிழ்த்திறன், பண்ணிசைப் போட்டிகளில் நடுவர்களாக கலந்து கொண்ட ஆசிரியர்களிற்கும் விழா மண்டபத்தினை தந்துதவிய தமிழ் இசைக்கலாமன்றத்தினருக்கும்

இவ்விழாவிற்கான விளம்பரங்களை அறிவித்தும் ஒலிபரப்பியும் உதவிய ஊடகங்களுக்கும் குறிப்பாக கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், காரை நியூஸ் ஆகியவற்றிற்கும்

காரை வசந்தம் மலரிற்கான விளம்பரங்களைத் தந்துதவிய அனைத்து வணிகப் பெருமக்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவிய அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும், காரைநகரில் இருந்து ஆக்கங்களையும் அறிக்கைகளையும் சேகரித்து அனுப்பி உதவி புரிந்த காரைநகர் அபிவிருத்தி சபையினருக்கும், தட்டச்சு செய்து வழங்கிய திருமதி கிருஸ்ணவேணி சோதிநாதன், விளம்பர வடிவமைப்புக்கள் செய்து வழங்கிய திரு.மாணிக்கம் கனகசபாபதி அவர்களிற்கும்

இம்மலரை முழுமையாக அழகுற வடிவமைப்புச் செய்த Graphic Land அச்சகத்திற்கும்,

இந்த விழாவைச் சிறப்பாக உங்கள் முன் கொண்டு வருவதற்கு உறுதுணையாக காணொளி காட்சிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் பல புரிந்த திரு.செந்தூரன் கந்தையா அவர்களிற்கும், சிற்றுண்டி, குளிர்பானம், குடிநீர் ஆகியவவற்றை வழங்கிய திரு.செந்தூரன் கந்தையா, திரு.அரி மனோகரன், திரு.தீசன் திரவியநாதன் ஆகியோர்களிற்கும் தோழோடு தோழ் நின்று நின்று உழைத்த எமது மன்ற உறுப்பினர்கள், நண்பர்களுக்கும்,

விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்தி வழங்கிக்கொண்டிருக்கும் தொகுப்பாளர்களிற்கும்

மற்றும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அன்றேல் எமக்கு ஆலோசனை கூறுவதன் மூலமோ எமக்கு உதவி புரிந்த அனைத்து நல் இதயங்களுக்கும்

**கனடா-காரை கலாச்சார மன்றம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றது.**




காரை - மலாயா யூனியன் அங்கத்தவர்கள் 1965ம் ஆண்டு அரியவகை புகைப்படம்

# கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஆரம்ப பாடசாலைகளின் தலா ஒரு மில்லியன் ரூபா திட்டத்தின் நிறைவின் நினைவுகள்!!!!!

## 2015 - 2016

யா/யாழ்ற்ரன் கல்லூரி –காரைநகர்
J/YARLTON COLLEGE - KARAINAGAR
கனிஷ்ட பிரிவு

யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் த.க வித்தியாலயம்
J/Karai Uri American Mission Tamil Mixed Vidyalayam

உ
இளமையில் கல் கற்றாங்கு ஒழுகு
யா/மெய்கண்டான் வித்தியாலயம், காரைநகர்.
J/MEIHANDAN VIDYALAYAM, KARAINAGAR

உ
"கற்றாங் கொழுகு"
யா/தோப்புக்காடு மறை ஞானசம்பந்த வித்தியாசாலை
காரைநகர்
J/THOPPUKKADU MARAIGNANASAMPANTHA VIDYASALAI
KARAINAGAR

"கற்றனைத் தூறுமறிவு"
யா/ வியாவில் சைவ வித்தியாலயம்
J/ VIYAVIL SAIVA VIDYALAYAM

யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்
காரைநகர்
J/AYILI SIVAGNANOTHAYA VIDYALAYAM KARAINAGAR

யா/சுப்பிரமணிய வித்தியாசாலை,காரைநகர்
J/SUBRAMANIYA VIDYASALAI,KARAINAGAR.

யா/ வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலயம்
காரைநகர்.
J/ VALANTHALAI NORTH A.M.T.M. VIDYALAYAM
KARAINAGAR.

யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
காரைநகர்.

யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
காரைநகர்.

உ
சிவமயம்
யா/ பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
J / Palavodai Hindu Tamil Mixed School

J/ VALANTHALAI SOUTH A.M.T.M SCHOOL - KARAINAGAR
யா/ வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை – காரைநகர்

CKCA
கனடா காரை கலாச்சார மன்றம்
WORKING TOGETHER FOR SUCCESS